
கல்கி



KALKI 7.5.1961

30 காசு

கல்கி பொருளடக்கம்

பிலவ, சித்திரை 25 ❊ மே 7, 1961

குருதேவருக்கு அஞ்சலி	(தலையங்கம்)	...	3
மேலும் ஒரு நாடகம்!	...	...	4
என்ன சேதி?	...	...	5
மின்னல் பொறி	ரா. வீ.	...	11
மந்திரம் செய்த தந்திரம்	கேசவ மேனன்	...	20
கந்தருவக் கன்னி	ரவீந்திரநாத் டாகுர்	...	26
மைத்ரேயி கண்ட மகாகவி	...	...	30
அக்கரைச் சீமையில் ஆறு மாதங்கள்	சோமு	...	33
கங்கை பாயும் நாட்டினிலே...	காந்தன்	...	39
திருமூலர் தவமொழி	ராஜாஜி - சோமு	...	41
அன்பே ஆரமுதே	தி. ஜானகிராமன்	...	43
திருக்கோட்டியூர் திருமால்	தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான்	...	50
நரி வேட்டை	ஜெயந்தி-விஜு	...	54
மணிபல்லவம்	நா. பார்த்தசாரதி	...	58
இன்னு செய்தார்க்கும்...	பி. எஸ். மணி	...	68
சொர்க்கத்தின் நிழல்	ஜெகசிற்பியன்	...	75

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

ஆந்திரத்தின் குண்டூர், கிருஷ்ணா, கிழக்கு கோதாவரி, மேற்கு கோதாவரி ஜில்லாக்களில் புகையிலை பதனிடல் நூதன முறையில் நடைபெறுகிறது. அந்த ஜில்லாக்களில் விரவியுள்ள பண்டகசாலைகளில் சிகரெட் தயாரிப்புக்காக வர்ஜினியா புகையிலை கணப்புப் போடப்பட்டுப் பக்குவப்படுத்தப்படுகிறது. அத்தகைய புகையிலையை, அதற்கான விற்பனைத் தலமாகிய குண்டூரில், ஐக்கிய ராஜ்யம், ருஷியா மற்றும் இதர நாடுகளின் சிகரெட் தயாரிப்பாளர்கள் வாங்கி ஏற்றுமதி செய்கின்றனர்.



புகையிலையின் வரலாறு... 5



பம்பாய்—57.

பாரதத்தில் இத்தகைய தேசீய ஸ்தாபனங்களில் மிகப் பெரியது.

பனாமா

ஒரு நல்ல சிகரெட்—
இறுதிவரை இன்பமூட்டுவது

G.T.705 TM

Greens' Advtg



மலர் 20 | இதழ் 40

தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
—பாரதியார்

குருதேவருக்கு அஞ்சலி

"குருதேவர்" என்று மகாத்மா காந்தி அடிகளாலும் மற்றவர்களாலும் உயர்வாக மதித்துக் கௌரவிக்கப்பட்ட கவிஞர் ரவீந்திரநாத் டாகூரின் நூறுவது பிறந்த தினம் மே மாதம் 7-ம் தேதியன்று நாடெங்கும் விசேஷ முறையில் கொண்டாடப்படுகிறது. தபால் இலாகாகூட ரவீந்திரரின் திருவுருவத்தைத் தாங்கிய தபால் தலைகளை வெளியிட்டு அவருடைய நினைவுக்கு அஞ்சலி செய்யத் திட்டமிட்டுள்ளது.

டாகூர் ஓர் உன்னத கவி மட்டுமல்ல; கலைஞர், இலக்கிய ஆசிரியர், ஓவியர், சங்கீத சாகித்யகர்த்தா. உலக சிந்தனையாளர்களில் முதலிடம் பெறத் தக்கவர். பண்பின் சிகரம் எனத் திகழ்ந்தவர். பழமை, புதுமை இரண்டுக்கும் இணைப்புப் பாலம் போலப் பிரகாசித்தவர். கிழக்கும், மேற்கும் தனித்தனிப் பண்புகளைக் கொண்டவை என்றாலும், இவ்விரண்டுக்குமிடையே தொடர்பு உண்டாக்கி இணைக்க ஆர்வம் காட்டிச் செயலிலும் நடத்திக் காட்டியவர்.

இந்தியாவில் மட்டிலுமின்றி, உலகத்தின் எல்லாப் பாகங்களிலுமே, சமூகத்தில் காணப்படும் குறைபாடுகளையும், ஏற்றத் தாழ்வுகளையும், வேற்றுமைகளையும், மற்றும் இவற்றின் விளைவாகத் தோன்றிய தீமைகளையும் களைந்தெறிய, கல்வி முறையை மாற்றியமைக்க வேண்டும் என்று அவர் எண்ணினார். ஒவ்வொருவரையும் ஆன்மீக உணர்ச்சியும் சமூக உணர்ச்சியும் உள்ள மனிதராக உருவாக்க ஏற்ற கல்வி முறையை அமைக்கவே அவர் மனம் நாடியது. "இவ்வுலகை அறிந்துகொள்ளுவதற்கு மட்டுமின்றி, அனுசரித்து வாழவே நாம் பிறந்திருக்கிறோம். அறிவுப் பெருக்கினால் நாம் சக்தி மிகுந்தவர்களாக ஆகலாம். ஆனால் மனித மாண்பின் மூலம்தான் பூரண பக்குவமடைய முடியும். நமக்கு விஷய அறிவைப் புகட்டுவதுடன் நமது வாழ்க்கையை உலகத்தோடு ஒட்டியதாகச் செய்வதே உயர்வான கல்வி" என்பது அவருடைய சித்தாந்தம்.

இதைச் செயல் முறையில் நடத்திக் காட்டுவதற்குத்தான் சாந்திநிகேதன் குருகுலம் 1901ம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டது. நோபெல் இலக்கியப் பரிசாகத் தமக்குக் கிடைத்த தொகையை இந்தக் குருகுலத்தின் அபிவிருத்திக்கென்றே செலவிட்டு, அதை விரிவாக்கி ஒரு சர்வகலாசாலை அந்தஸ்துக்கு உயர்த்திவிட்டார். டாகூர் நிறுவிய விசுவபாரதி சர்வகலாசாலை இப்போது அரசாங்க ஆதரவு பெற்றுச் சிறந்த முறையில் செயல் புரிந்து வருகிறது.

கல்வி அபிவிருத்தியிலும், கலாசார முன்னேற்றத்திலும், பாரதப் பண்பாட்டுச் சிறப்பிலும் அவருக்கு இருந்த உறுதிதான் அரசியலில் அவரை அதிகமாக ஈடுபடாமல் தடுத்தது. காந்தி அடிகள் சொன்னதுபோல, ரவீந்திரநாத டாகூர் தம்மை ஒரு கலாசாரத் தூதுவன் என்று கருதினாரே தவிர, அரசியல்வாதி என்று கருதவில்லை.

காந்திஜி தம்முடைய அரசியல் நடவடிக்கைகளைப் பற்றிக் குறிப்பிடும்போது ஒரு சமயம், "ஒரு மலைப்பாம்பு ஒருவனைச் சுற்றிக்கொண்டு இறுக்குவதுபோல் அரசியல் நம்மை நாலா பக்கங்களிலும் சுற்றிக் கொண்டு இறுக்குகிறது. இதனுடைய பிடியிலிருந்து விடுவித்துக்கொள்ள வேண்டுமென்று எவ்வளவுதான் முயன்றாலும் நம்மால் முடிகிறதில்லை. இந்தமாதிரியான ஒரு பாம்புடன்தான் நான் போராடுகிறேன். இதற்குத் துணையாகவே அரசியலில் சமயத்தையும் ஆங்காங்கே அவ்வப்போது நுழைத்திருக்

கிறேன்'' என்று சொன்னார். ரவீந்திரநாத் டாகூரும் ஏறக்குறைய இதே கருத்தைத்தான் கொண்டிருந்தார் என்று கூறலாம்.

மேலாகப் பார்க்கும்போது அரசியலில் அவருக்கு ஆழ்ந்த பற்று இருந்ததாகத் தோன்றாது. ஆனாலும் 1915ம் ஆண்டில் அவருக்கு அரசாங்கம் அளித்த ''ஸர்'' பட்டத்தை 1919ம் ஆண்டில் பஞ்சாப் கலகத்தை ஒடுக்கச் சர்க்கார் கையாண்ட முறைகளைக் கண்டிக்கும் வகையில், உதறி எறிந்தார். தேசிய கீதம் என்று இப்போது நாம் பாடும் ''ஜனகணமன'' என்னும் பாடலை ரவீந்திரர்தான் புனைந்தளித்தார். பாரத நாட்டுப் பண்புகளுக்குத் தடையாக இருந்த எந்த அம்சத்தையும் அவர் கண்டிக்கத் தயங்கியதில்லை. தேசிய முன்னேற்றம் என்பது அவருடைய கருத்தில் சமூக முன்னேற்றத்தையே குறித்தது.

டாகூரின் நினைவு நாள் விரிவாகக் கொண்டாடப்படும் இச்சமயத்தில் நம்முடைய அரசியலில் இப்போது முக்கிய பிரச்னைகளாக உள்ள பல விஷயங்களைப் பற்றி டாகூரின் கருத்துக்கள் எப்படி இருந்தன என்பதை நினைவுபடுத்திக் கொள்வது நல்லது.

மனிதனுடைய சுதந்திரத்தைப பறிக்கும் எந்த நடவடிக்கையையும், எந்தப் பெயரில் மேற்கொண்டாலும் அவர் ஆமோதித்ததாகத் தெரியவில்லை. ஏழைகளுக்கு அவர் இரங்கினாலும் தாம் செய்ய வேண்டிய ஒரு வேலையை மற்றொருவனைக் கொண்டு பூர்த்திசெய்து வைக்கும் எந்த ஏற்பாட்டையும் அவர் ஒப்புக் கொண்டதாகத் தெரியவில்லை. ''சுதந்திரம் என்பது கஷ்டப்படாமலிருப்பதற்கு ஏற்பட்டது அல்ல, சமூகத்தின் நன்மைக்காகக் கஷ்டங்களைச் சந்தோஷமாக மேற்கொள்ளும் நிலைமையைக் குறிப்பது'' என்பதுதான் டாகூரின் கருத்து. 'சமூகத்தில் ஒற்றுமையும் இணக்கமும் அதிகார பலத்தினால் உண்டாவதில்லை' என்பதை அடிக்கடி அவர் வற்புறுத்தியிருக்கிறார். உண்மையான சுதந்திர உணர்ச்சி இல்லாவிடில் நிரந்தரமான நன்மை பயக்கும் எந்தக் காரியமும் உருவாகாது என்பதும் அவருடைய உறுதியான நம்பிக்கை.

அதிகாரச் செருக்கைப் பற்றி அவர் வன்மையாகவே கண்டித்திருக்கிறார். தன்னைப் பற்றிக் குறை கூறுபவர்களையும் கண்டிப்பவர்களையும் அடக்கவே அதிகாரம் முற்படும். அது அதிகாரத்தின் தன்மை. ஆகவே அளவுக்கு மீறிப் போகும்படி அதை விடக்கூடாது என்பதில் அவருக்கு நாட்டம் இருந்தது.

இவையனைத்தும் குருதேவரின் முக்கியமான கருத்துக்கள். தற்போதுள்ள சூழ்நிலையில் இக் கருத்துக்கள் பன்முறை சிந்திக்கப்பட வேண்டியவை. சாதாரண மக்களைவிட ஆளும் கட்சியும் அரசாங்கமும் அதிகமாகச் சிந்திக்க வேண்டியவை.

ஆண்டுதோறும் காந்தி அடிகள் மறைந்த தினத்தைப் புனித நாளாகக் கொண்டாடி அன்றைய நடவடிக்கை முடிந்தவுடன் அவரவர்கள் தங்கள் பழைய வழியிலே செல்வது வழக்கமாகி விட்டது. அரசியல் நடவடிக்கைகளில் காந்திஜியின் கருத்துக்களுக்கு மாறுபட்ட அம்சங்கள் பல தோன்றியுள்ளன. டாகூர் ஜெயந்தி விஷயமும் இம்மாதிரி வெளிப் பகட்டுடன் முடிந்து விடக்கூடாது. அவருடைய உயர்ந்த கருத்துக்களைப் புரிந்துகொண்டு நடைமுறையில் மேற்கொள்ள முற்படுவதுதான் அவருக்கு நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலியாகும்.

மேலும் ஒரு நாடகம்!

பாராளுமன்றக் காங்கிரஸ் கட்சியில் பந்த் வகித்துவந்த உபதலைவர் ஸ்தானத்தை யார் வகிப்பது என்பது பற்றிப் பல்வேறு ஹேஷ்யங்களும், அறிக்கைகளும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. யார் வேண்டுமானாலும் இந்தப்பதவியை வகிக்கலாம், யாரை வேண்டுமானாலும் கட்சி அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கட்டும், தமக்கு இதில் சம்பந்தம் ஏதுமில்லை என்று பிரதமர் நேருஜி சில நாட்களுக்கு முன் மிகத் தெளிவாகவும், கம்பீரமாகவும் சொல்லிவிட்டார். ஆனால் உண்மையில் அவர் சம்பந்தப்படாதவர்தானா? ஒதுங்கி நிற்பவரா? பிரதேச காங்கிரஸ் கட்சிகளில் ஏற்பட்டுள்ள பூசல்களையும் குற்றச்சாட்டுகளையும் சச்சரவுகளையும் தீர்த்துவைக்கப் பிரதமர் தானே முன் செல்கிறார்? உத்தரப் பிரதேசத்தில் கட்சித் தலைவராக குப்தா நேருஜியின் சிபாரிசு பேரில்தானே ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்? மற்ற ராஜ்யங்களிலும் நிலைமைகளைப் பரிசீலனை செய்து சமரசம் செய்து வைக்கவும் அவர்தானே முன் செல்லுகிறார்! அவருடைய சிபாரிசைப் பெற்றால்தான் கட்சித் தேர்தலில்

வெற்றி பெறமுடியும் என்பது இப்போதெல்லாம் பகிரங்க ரகசியம். காங்கிரஸ் கட்சித் தலைமைப் பதவிக்கே நேருஜியின் சிபாரிசு பெற்றவருக்குத்தான் வெற்றி என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம். இந்த லட்சணத்தில் தமக்குச் சம்பந்தமில்லை என்று சொல்லி அவர் யாரைத் திருப்தி செய்ய முயல்கிறார் என்பது தான் தெரியவில்லை.

உபதலைவர் பதவிக்கு திரு மொரார்ஜி தேசாய்க்கும், திரு ஜகஜீவன் ராமுக்குமிடையே பலத்த போட்டி இப்போது ஏற்பட்டிருக்கிறது. மற்ற இடங்களில் காணப்படும் கோஷ்டி பூசல்களின் மற்றொரு தோற்றம்தான் மத்திய சட்டசபைக் காங்கிரஸ் கட்சியிலும் இப்போது காணப்படுகிறது. காங்கிரஸ் கட்சியில் தன்னலமற்ற சேவைக்கு இப்போதெல்லாம் இடம் இல்லை. அந்தக் காலம் மலையேறி விட்டது என்பது நாடறிந்த விஷயம். உபதலைவர் தேர்தல் விஷயமும் இத்தகையதே. ஒவ்வொருவரும் தங்களுடைய செல்வாக்கை அதிகம் வளர்த்துக் கொள்ளுவதிலேயே நாட்டம் கொண்டுள்ளனர் என்பது வெளிப்படை.

தமக்குச் சம்பந்தமில்லை என்று நேற்று வரையில் சொல்லிவந்த பிரதமர் இன்று இதற்கு ஒரு முடிவு கண்டுவிட்டார். காங்கிரஸ் பார்லிமெண்டரிக் கட்சி, உபதலைவர் தேர்தல் விஷயத்தில் தனது தேர்தல் உரிமையைத் தானாகவே வேண்டாமென்று நிராகரித்துவிட்டு, உபதலைவர் நியமனத்தைப் பிரதமர் நேருஜியின் சொந்த அபிப்பிராயத்துக்கும் சுயேச்சைக்கும் விட்டுவிட்டது. ஆகவே உப தலைவருக்காக ஒரு தேர்தல் இனி நடைபெறாது. நேருஜியே தமக்கு வேண்டிய ஒருவரை உபதலைவராக நியமித்துக்கொண்டு விடலாம்!

காங்கிரஸ் பார்லிமெண்டரிக் கட்சியின் பெருந்தன்மைதான் என்னே! அவர்களின் தியாகத்தின் பெருமைதான் எவ்வளவு உயர்வு! இவ்வளவு நாட்கள் கட்சி பலத்தைப் பெருக்கிக்கொண்டிருந்தவர்கள் இந்த ஏகோபித்த முடிவைத் திடீரென்று இப்போது எப்படிச் செய்தார்கள்? நேருஜி சொல்லித்தான் செய்தார்கள் என்று சொல்லக் கூடாது. ஆனால் காங்கிரஸ்காரர்கள் நுட்பம் தெரியாதவர்களா? காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்கள் நோக்கம் தெரிந்து நடப்பவர்கள் என்பதில் சந்தேகமில்லை.

தில்லியிலேயே ஒற்றுமை இந்த லட்சணத்தில் இருந்தால் ராஜ்யங்களில் ஒற்றுமை எப்படி நிலைபெறும்? அடிமரம் புரையோடிப்போனால் கிளைகள் எப்படித் தழைக்கும்?

என்ன சேதி?

பழைய குருடி, பழைய குருடியே

விஜயவாடாவில் இந்திய கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்கள் ஒன்று திரண்டு மகத்தான மகாநாடு நடத்தித் தங்களுக்குள் சிந்தனைத் தெளிவு உண்டாக்கிக் கொள்ளப் பெரும்பாடு பட்டனர். தங்களுடைய சொந்த சாமர்த்தியம் மட்டும் போதுமோ, போதாதோ என்று தோழர் குருஷேவ் நாட்டிலிருந்து செல்வாக்குள்ள ஒரு தூது கோஷ்டியும் வந்திருந்தது. விவாதங்களும் நடவடிக்கைகளும், இரும்புத் திரைச் சம்பிரதாயத்தை யொட்டி, மூடிய கதவுகளுக்குப் பின்னாலேயே நடந்தன. வலதுசாரி கோஷ்டியும், இடதுசாரி கோஷ்டியும், சமரசக் கோஷ்டியும், மத்தியசாரிக் கூட்டமும், சின்னத் தலைவர்களும், பெரிய தலைவர்களும் ஏழு நாட்கள் கூடிப் பேசினர். இவ்வளவு விரிவான பேச்சுக்குப் பின், தீராத பிரச்னைகள் கூடத் தீர்ந்து போயிருக்க வேண்டும். நல்லதோ, கெட்டதோ, தங்கள் கொள்கை இன்னதுதான் என்று நிச்சயமாகவாவது தெளிவுபட்டிருக்க வேண்டும். ஆனால் இந்திய கம்யூனிஸ்டுக் கட்சியின் போக்குதான் அலாதியான போக்கு ஆயிற்றே. அவர்களுடைய முக்கிய பிரச்னைகள் அப்படியே நிலைபெற்று நின்று விட்டன. அதாவது இடதுசாரி, வலது சாரி கோஷ்டி இரண்டும் சம பலத்துடன் நிற்கின்றன. ருஷ்யாவைப் பார், என்கிறது ஒன்று; சீனா செய்தது ஆக்கிரமிப்பே இல்லை என்கிறது மற்றொன்று. இந்திய கம்யூனிஸ்டு கட்சி இந்திய கம்யூனிஸ்டு கட்சியேதான்! அவர்களுடைய தேசீய உணர்ச்சி எப்போதும் போல் நம் நாட்டு எல்லைக்கு அப்பாலேயே நிற்கிறது.

நடிப்புத்திறனுக்குப் பாராட்டு

சிறந்த ஐந்து மேடை - திரை நடிகர்களுக்கும், சிறந்த நடிப்பு சோபிக்க உதவும் ஒரு நாடகத் தயாரிப்பாளர், இரு சினிமா டைரக்டர்களுக்கும் சென்னை ராஜ்ய சங்கீத நாடக சங்கத்தினர் பரிசுகள் வழங்கி யிருக்கின்றனர்.

இவ்வாண்டு பரிசுகள் பெற்றவர்கள் யாவரும் தத்தம் துறையில் முதிர்ச்சி பெற்று, முழுமை அடைந்தவர்களாவர். அமெச்சூர் நடிகர்களில் திரு எப். ஜி. நடேச அய்யர், நாடகத் தயாரிப்பாளர் களில் திரு நவாப் ராஜமாணிக்கம், மேடை நடிப்பில் திரு எஸ். வி. சகஸ்ர நாமம், ஸ்ரீமதி எம். எஸ். திரௌபதி, சினிமா நடிப்பில் திரு எம். கே. ராதா, ஸ்ரீமதி பி. கண்ணாம்பா, டைரக்ஷனில் திரு கிருஷ்ணன் பஞ்சு - என்று இப்படி சந்தேகமறத் தங்கள் தனிச்சிறப்பை நிலைநாட்டிக் கொண்ட எண்மருக்கு கவர்னர் திரு மேதி அவர்களைக் கொண்டு தங்கப் பதக்கமளித்துப் பாராட்டி யது சங்கீத நாடக சங்கம்.

பென்ஷன் பெற்றால் என்ன?

அரசாங்கத்தினிடமிருந்து பென்ஷன் வாங்குகிறவர்கள் அந்த அரசாங் கத்தையே தாக்கிப் பேசலாமா என்பது பல பேர்களின் மனத்தில் எழுகின்ற, ஆனால் பகிரங்கமாகக் கேட்கப்படாத ஒரு கேள்வி. அப்படிச் செய்வது நன்றியின்மை என்ற குற்றமாகாதா என்பது இக் கேள்வியில் தொக்கி நிற்கும் இரண்டாவது சந்தேகம். இவ் விரண்டு கேள்விகளுக்கும் ராஜாஜி அவர்களே ஹோஸூரில் பேசிய ஒரு கூட்டத்தில் ஆணித்தரமாகப் பதில் அளித்திருக்கிறார்.

''அரசாங்கத்தினிட மிருந்து பென்ஷன் பெறுவதன் மூலம் யாரும் தம்முடைய மனச்சாட்சியை விலைகூறி விடவில்லை; அடகு வைத்துவிடவுமில்லை. அரசாங்கத் தின் கொள்கைகளைப் பற்றியும் நடவடிக் கைகள் பற்றியும் தாம் கொண்டுள்ள அபிப்பிராயங்களை எடுத்துச் சொல்ல ஒவ் வொருவருக்கும் உரிமை உண்டு. அடிப் படை உரிமைகளில் இது ஒன்று''

என்றார் ராஜாஜி. பென்ஷன் என்பது சர்க் காருக்குத் தலையாட்டிக் கொண்டிருப்ப தற்காக வழங்கப்படும் தொகை அல்ல என்பதைச் சந்தேகமுள்ளவர்கள் இப் போதாகிலும் உணர்ந்து கொள்ளட்டும்.

சொல்லின் செல்வர்

வள்ளலுக்கு நடைபெற்ற வெள்ளி விழா பற்றிய சிறு குறிப்பு அச்சாகி அந்த மை காய்வதற்கு முன்னால் சொல்லின் செல்வரை இழந்த செய்தியைச் செவியுறும் துர்ப்பாக்கியம் நேர்ந்துவிட்டது நமக்கு.



டாக்டர் ரா. பி. சேதுப் பிள்ளை அவர்க ளுடைய பேச்சு, சுபாவம், தோற்றம் எல்லாமே இனிமையாகத்தான் இருக்கும். அவரது மேடைப் பேச்சை, தமிழைக் கற் றுணர்ந்தவர்கள்தான் அனுபவிக்க முடியும் என்பதில்லை. தமிழே அறியாத வேற்று நாட் டவர்கூட அவரது சொல்வளத்திலே — அவற் றுடன் பிறக்கும் அழகு, குழைவு, அலங்காரம் இவற்றிலே கட்டுண்டு பின்னர் அதன் காரண மாகத் தமிழ்மொழியினை ஆவலுடன் முறை யாகப் பயின்றிருக்கிறார்கள்!

அவரது தோற்றத்தில் தென்படும் தூய்மை யையும் எளிமையையும் அருளையும் கண்ட வர்கள் நெருங்கிப் பழக முற்பட்டால் சுபா வத்திலுள்ள பண்பினையும் நன்கு புரிந்து கொள்வார்கள். உரையாடலை ஒரு கலையாகப் பயின்று சொல்லின் செல்வராய்த் திகழ்ந்த அவர் சினம் என்ற சொல்லை மட்டும் அறி யாதவரோ என வியப்புறுவார்கள்.

திரு வி. க. அவர்கள் ஒரு சமயம் பேச்சாளர் சேதுப் பிள்ளையைச் சபையினருக்கு அறிமுகம் செய்துவைக்கும் வகையில், ''தமிழ் பேசப் போகிறது!'' என்றார்கள். ஆம், சேதுப் பிள்ளை அவர்களுடைய மூச்சுக் காற்றே தமிழ்தான்! அப்படி இருக்கையில் அவர் மறைந்து விட்டார் என்பதை எப்படி ஒப்புக் கொள்வது? தமிழ் உள்ளளவும் அவருக்கு மறைவு இல்லைதான்.


எழில் குலுங்க..
சுகுமாரி
Aykan
Remy
ரெமி பவுடர்

புதுக் குரல் புலவன்



அமுதக் கலசமொன் றேந்தியே-ஒரு
அஞ்சலிப் பூம்புனல் சேந்தியே
எமதுமுன் னோடியாய் வந்தனை ;-நீ
எதையெதைப் பாடியோ தந்தனை !

வேய்ங்குழற் கண்ணும் நுழைந்துநீ-பல
விதவிதப் பண்ணும் இழைந்துநீ
திங்குரற் பாடல் ஒழுகினாய் ;-கவித்
தேன்வெள்ளம் ஆட முழுகினாய் !

விதிப் புழுதியே சானார்-மிக
விரும்பும் இடமெனப் பேசினாய் !
சோதிப் புழுமின்னற் காட்டிலே-நீ
சொக்கி யதுமுண்டு, பாட்டிலே !


ஓடை யருவிக் கரையெலாம்-அதன்
ஒப்பாரத் தான நுரையெலாம்
கூடவே நீயும் நடந்தனை ;- நகைக்
குமிழியிட் டோடிப் படர்ந்தனை !

சங்கீதத் தென்றல் ஜதியிலே-வர்ணச்
சாரல்யாழ் வண்டின் சுதியிலே
இங்கித மர்மங்கள் எத்தனை-நீ
எண்ணியெண் ணிப்பார்க்க வைத்தனை!

மங்கையர் தம்கை வளையிலும்-அவர்
மகரமுன் காதுக் குழையிலும்
செங்கதிர், திங்கள் உதயமே-எழச்
சேர்த்தங்கு வைத்தாய், இதயமே !

கவிதைக் கொலுவின் அரசு நீ ;- தெய்வக்
கனவை முழக்கும் முரசுநீ !
புவி,தன் நினைவைப் புதைக்குமோ?-காலப்
புயல்நீ யின்றேல் எதிர்க்குமோ ?

இந்திய மண்ணின் இளமையும்-எழுந்(து)
இனிவரும் வாழ்வின் வளமையும்
விந்தையுன் வாக்கிலே விம்முமாம் ;-'யுக
விழிப்பேதா கூர்!'எனப் போற்றுவாம்!




என்றால் எதுவுமே செய்யமுடியவில்லை. வகுப்புநேரங்களில்கூட அடிக்கடி கோபம் வந்துகொண்டிருந்தது.
அனந்த் அதைக் கவனித்துவிட்டுச் சொன்னான். தினமும் இரண்டு வேளை போர்ன்-விடா அருந்தினால், பழைய நிலை வந்துவிடும் என்று.
அவனுடைய டாக்டரும் அதையேதான் சொன்னாராம். நானும் அதைக் கடைப்பிடித்தேன். விரைவில் குணமடைந்தேன்.
இப்பொழுது பழைய சக்தி வந்தது மட்டுமல்ல-ஐம்பது பேர்கொண்ட வகுப்பையும் எளிதாக சமாளிக்க முடிகிறது.
எல்லாம் போர்ன்-விடா தந்த சக்தி.
Cadbury's
BOURN-VITA
THE IDEAL FOOD DRINK
MADE BY CADBURY'S SPECIALISTS IN FOOD DRINKS FOR 100 YEARS
நான் ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் என் வேலையைச் செய்வதற்கு சக்தியளித்தது
Cadbury's
BOURN-VITA
சக்திக்கும் வலிமைக்கும்



மின்னல் பொறி

மயான பூமி.

ஈமக்கடன் முடியும் பொழுது, பொழுது சாய்ந்து விட்டது. உற்றாரும் உறவினரும் நண்பர்களும் தோழர்களும் சாம்பலுக்கு ஒவ்வொரு குடம் நீர் ஊற்றினர். 'ராம நாமமே சத்தியம்' என்று முணுமுணுத்தவண்ணம், முற்றிலும் விரக்தி மனப்பான்மையை உண்டுபண்ணும் அந்த இடத்திலிருந்து எல்லோரும் சாலைக்கு வந்த பின்னரே நீண்ட பெருமூச்சு விட்டனர்.

நீர்த்துறையிலே அன்று கைம்பெண்ணாகி விட்ட டாக்டரின் மனைவி விமலா மட்டுமே இருந்தாள். டாக்டர் சந்தோஷம் இப்பொழுது இல்லை. சிதையின் கொடுந் தீ அவருடைய அழகிய உடலைச் சுட்டெரித்துச் சாம்பராக்கி விட்டது. ஆனால் விமலாவின் மனம் அழித்தெழுத முடியாத இவ்வுண்மையை ஒப்புக் கொள்ளத் தயங்கியது. தண்ணீர்த் துறையின் ஒரு மூலையில் பிராயம் முதிர்ந்த சித்தியின் மடியில் முகத்தைப் புதைத்துக் கொண்டு, அவள் விம்மி விம்மி, புலம்பிப் புலம்பி அழுதாள்; அதன் மூலம் தன் உள்ளத்தை அழுத்திக் கொண்டிருந்த சுமையைக்குறைக்க வெகுவாக முயன்றாள்; எவ்வளவுக்கெவ்வளவு அவள் அழுதுதீர்த்துச் சுமையைக் குறைக்க முயன்றாளோ, அவ்வளவுக் கவ்வளவு காலஞ்சென்ற கணவனின் எல்லையற்ற அன்பும் நினைவும், அவள் வாழ்ந்த அந்த நாட்களின் சித்திரத்தைக் கண்ணெதிரே கொண்டு வந்து நிறுத்தித் துயரத்தை மேலும் மேலும் அதிகப்படுத்தவே செய்தன; பெருகும் கண்ணீரின் அணையை உடைத்தெறியும் பணியையே புரிந்தன.

ஆனால் அவள் சுமங்கிலியாக வாழ்ந்த அந்தக் காலத்துப் பழைய நினைவுகள் எத்தனை எத்தனையோ! எண்ணில் அடங்காதவை அவை! அவற்றில் ஒரு முக்கிய நிகழ்ச்சி, எல்லாவற்றுக்கும் மேலாக எழும்பி நின்று, பளிச்சிட்டுப் பிரகாசித்து அவளுடைய இருதயத்தைத் துண்டு துண்டாகப் பிளந்து கொண்டிருந்தது: அவளுடைய கால் நழுவித் தலை குப்புற அவள் விழுந்த நிகழ்ச்சியின் நினைவே அது.



ஒருநாள் அவள் தெய்வத்துக்கு ஒப்பான தன் கணவனைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை: அவள் படுகுழியில் விழப் போய் விட்டாள். அவளுக்கு அந்தக் கோணல் புத்தி எப்படித்தான் ஏற்பட்டதோ?

ஆனால் அவள் அதற்குப் பிராயச்சித்தமும்

செய்து விட்டாள். தன் பிழை தெரிந்த நாள் முதற்கொண்டு அவள் கணவருக்குப் பணிவிடை புரிவதிலும் அவரிடம் அன்பும் பக்தியும் பூணுவதிலும் சீதை சாவித்திரியைக் கூட மேவி விட்டாள்.

டாக்டர் சந்தோஷத்துக்கும் விமலாவுக்கும் திருமணம் நடந்த பொழுது அவள் மனத்தில் எத்தனை எத்தனையோ ஆசைகள், கோட்டைகள், இன்பக் கனவுகள்! ஆனால் சாந்தி முகூர்த்தத்தன்று நடந்த ஒரு சிறு நிகழ்ச்சி அவள் உள்ளத்து ஆசைகளனைத்தையும் பாலைவனத்துச் கனவெனப் பொய்யாக்கி விட்டது.

அப்பொழுது இரவு மணி ஒன்று. வந்திருந்த விருந்தினர்கள் அனைவரும் விடைபெற்றுக் கொண்டு போய் விட்டனர். கடைசியில் மணமகனும் மணமகளும் குறிப்பிட்ட அறையில் மலர் மெத்தையில் சந்தித்தார்கள். மணமகள் ஆவலுடன் தன் அன்பரை-ஆருயிர்க் காதலரை—எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். மணமகனோ மனத்தை மனைவியாள் மீது நாட்டம் கொள்ள விடாமல் வேறு எங்கோ செலுத்திய வண்ணம் வந்திருந்தார்.

பேச்சு வார்த்தை ஆரம்பமாகியது. ஆனால் அந்தப் பேச்சு காதல் கவி மொழிகளாக உருப் பெறுவதற்குள்ளாகவே, டாக்டர் சந்தோஷம் திடீரென்று படுக்கையிலிருந்து எழுந்தார். ஒன்றும் சொல்லாமல் ஒரு நீண்ட கறுப்புத் திரையை அகற்றினார். பக்கத்து அறைக்குள் நுழைந்து விட்டார்.

பத்துநிமிஷங்கள் படபடத்த உள்ளத்துடன் விமலா அவரை எதிர்பார்த்தாள். வராமற் போகவே, அவளும் மெதுவாக எழுந்து பக்கத்து அறையின் திரையை விலக்கப் போனாள்.

அதேசமயம் திரும்பிவந்த டாக்டர் சந்தோஷம் "நான் ஒரு புதுச் சோதனையில் ஈடுபட்டிருக்கிறேன். அது பற்றி ஒரு விஷயம் திடீரென்று நினைவுக்கு வரவே, அதை ஒப்பிட்டுப் பார்ப்பதற்காகப் போகும்படியாகி விட்டது!" என்றார் மன்னிப்புக்கோரும் பாவனையில்.

ஆனால் விமலாவுக்கு வயது பதினெட்டுத் தான். அறிவும் வயதுக்கேற்றபடிதானே வளர்ச்சி பெற்றிருக்கும்?

'உற்சாகமும் துணிச்சலும் ஒருங்கே அமையப் பெற்றவர்தான் என்றாலும் இந்த டாக்டருக்கு வைத்தியப் படிப்பையும் பரிசோதனையையும் விட்டால் வேறு ஒன்றும் தெரியாது போலிருக்கிறதே! எப்பொழுதாவது தேவைப் பட்டால் அவர் உள்ளத்துக்கு உற்சாகம் அளிக்கும் ஒரு கருவியாக மட்டும், தான் திகழ வேண்டியிருக்குமே தவிர அவரால் தனக்கு ஒரு பிரயோஜனமும் இராதுபோலிருக்கிறதே!'

விமலா டாக்டரைப் பற்றி இப்படி ஒரு மாதிரி எடை போட்டுத் தன் மனத்திலும் ஆழப் பதித்துக் கொண்டாள்.

ஓராண்டு ஓடிவிட்டது!

வைத்திய சாத்திரத்திலே ஒரு புது முறையைக் கண்டு பிடித்தவர் என்ற முறையில் டாக்டர் சந்தோஷத்தின்பெயர் நாற்றிசைகளிலும் ஓங்கி வளர்ந்திருந்தது. பெயரும் புகழும் பெற வேண்டும்: புதுச் சோதனைகள் பலப் பல செய்து வானளாவக் கீர்த்தி பெற வேண்டும் என்ற ஆசையும் வெறியும் அவரை நாளடைவில் விமலாவிடமிருந்து வெகுதூரத்துக்கு வெகுதூரம் விலக்கி வைத்து விட்டன. விமலாவின் மனத்திலும் சாந்தி முகூர்த்தத்தன்று இரவு நிகழ்ந்த நிகழ்ச்சி விதையாக விழுந்து முளை விட்டுச் சிறுகச் சிறுக வளர்ந்து மிகப் பெரிய மரமெனத் தழைத்து விட்டது.

இந்தத் தனிமைக்கும் அமைதியின்மைக்கும் இடையே ராஜேந்திரன் மட்டும்தான் விமலாவுக்கு ஒரு பிடிப்பாக-ஆதாரமாக –கொழு கொம்பாகத் திகழ்ந்தான். ராஜேந்திரன் டாக்டர் சந்தோஷத்தின் பால்ய நண்பன். பணக்காரத் தந்தையின் பணக்கார மகன். அதனால் இருபத்து நான்கு மணி நேரமும் ஓழிவுதான்: ஓய்வுதான். அதனால் அந்த நேரத்தை அவன் பெரும்பாலும் இலக்கிய சர்ச்சையிலும், பிறரைப் பற்றி வம்பு அளப்பதிலுமே செலவிட்டு வந்தான்.

விமலாவுக்கு இளமையும் உடற்கட்டும் ஒருங்கே அமைந்த அவனை மிகவும் பிடித்துப் போய் விட்டது. ஒற்றை நாடியான சரீரம் அவன் அழகுக்கு அழகு கூட்டியது. நாளடைவில், கண் விழித்திருக்கும் நேரங்களில் அவளுடைய உள்ளத்தை அவன் ஆட்கொள்ளா விட்டாலும், கண் உறங்கிய நேரங்களில், கனவில் தோன்றி அவள் உள்ளத்தை நிறைத்து விட்டான்.

ஆயினும், அமைதியின்மை என்னும் தீ அவளைப் பொசுக்கி எரித்துச் சாம்பலாக்கிக் கொண்டிருந்த பொழுதிலும், விமலாவின் மனம் தீய நோக்கத்துக்கோ, நடத்தைக்கோ இடம் கொடுக்க மறுத்து விட்டது. ஒரு நாள் அவள் சங்கோசம், மனச் சங்கடம் எல்லாவற்றையும் ஒருபுறம் மூட்டைகட்டி வைத்து விட்டுத் தன் வீட்டுப் பக்கமே வரவேண்டாம் என்று ராஜேந்திரனை நேருக்கு நேர் அழைத்து மிகத் தெளிவாகக் கூறி விட்டாள்.

சில நாட்களுக்குப் பிறகு டாக்டர் சந்தோஷத்தின் தந்தை இறந்து போனார். இறப்பதற்கு முன்னால், அவர் டாக்டரை அழைத்து ஒரு வாக்குறுதி வாங்கிக் கொண்டார். 'டாக்டர் தம் சொந்தக் கிராமத்தில் வைத்தியத் தொழில் நடத்துவதோடு, நிலம் நீச்சையும் பார்த்துக் கொள்ள வேண்டும். அநாதிக் கிரமத்திலிருந்து தலைமுறை தலைமுறையாக வந்த சொத்தை அழிந்து போகவிடக்கூடாது' என்பதுதான் அவர் பெற்ற அந்த வாக்குறுதி.

சிராத்தம் எல்லாம் முடிந்த பின் டாக்டர் கிராமத்துக்குப் போய் விட்டார். ஆனால் வெகு சீக்கிரமே அவருக்குக் கிராமம் அலுத்து விட்டது. ஒரு மாதம் இருப்பதற்குள்ளாகவே நீர் இன்றி மீன் உயிர் வாழ முடியாததுபோலத் தாமும் 'லாபரேட்டரி'யில் சோதனை, சாதனை என்று செய்யாமல் அதிக நாள் உயிர் வாழ முடியாது என்று அவருக்குத் தோன்றி விட்டது. ஆனால் தந்தைக்குக் கொடுத்த வாக்குறுதியை மீறுவது எப்படி? விமலாவைக் கிராமத்து வீட்டில் வைத்து விட்டு, அவர் நகரத்தில் பெரும் ஹோட்டல் ஒன்றில் அறை வாடகைக்கு எடுத்துக் கொண்டு இருக்கலானார். வாரத்

துக்கு. இரண்டு வாரத்துக்கு ஓரிரு முறை வந்து தமது மனைவியையும் பிதுரார்ஜித சொத்தையும் பார்த்துப் போகலானார்.

இதனால்,விமலாவின் வாழ்க்கையை முன்பே ஆட்கொண்டிருந்த தனிமை, இன்னும் பயங்கரப் பேயுருவம் தரித்துப் பயமுறுத்தத் தொடங்கி விட்டது. இம்மாதிரி சமயத்தில் தான் ராஜேந்திரன் மீண்டும் வரலானான். அவன் உருவம் முன்னைக் காட்டிலும் மெருகிட்டும் காட்சி அளித்தது. விமலாவுக்கு உடல் நடுங்கியது. பயத்தினால் அல்ல; கோபத்தினால் அல்ல. பின் எதனால்? இனம் தெரியாத இன்ப நுகர்ச்சியினால். மனித உணர்வே இன்றி ஜடமாக வாழ்க்கை நடத்தும் டாக்டரோடு வாழ்வதைக் காட்டிலும், தற்கொலை செய்து கொண்டு விட்டால் என்ன என்ற எண்ணம் சிலகாலமாக அவளது மூளையை வட்டமிட்டுக் கொண்டிருந்தது. அது இப்பொழுது அவளுக்கு நினைவு வந்தது. கூடாது! அப்படி இறப்பதனால் பலனொன்றும் இல்லை. அவள் உயிர் வாழ்வதோ, இறப்பதோ குறிப்பிட்ட ஒருவருக்குப் பொருளற்றதாயிருந்த பொழுதிலும், இன்னொருவருக்குப் பொருள் பொதிந்ததாக இருக்கலாமே!

அதற்காக விமலா தன் உள்ளத் தூய்மையைக் குறைத்துக் கொள்ள விரும்பவில்லை. கட்டிய கணவனிருக்க இன்னொருவனை மனத்தாலும் நினைக்கலாமா? இந்தப் பண்டையப் பண்பாடு அவள் உள்ளத்திலும் வேரோடி இருந்தது. எனவே, ராஜேந்திரனை வரவேற்பதிலே அதிக உற்சாகத்தையோ, இனிமையையோ அவள் காட்டிக் கொள்ளவில்லை. வறட்சி ததும்பும் கடுமையான குரலில், "இங்கேயும் வந்து விட்டீர்களா?" என்று தான் கேட்டாள். ராஜேந்திரன் அர்த்தமற்ற சிரிப்புச் சிரித்து, "வரவேண்டியதில்லை. இது எனக்கும் சொந்த ஊர்தான்!" என்றான்.

மறுநாளும் அழையா வீட்டு விருந்தாளியாக ராஜேந்திரன் வந்து, தேநீர் தயாரித்துத் தருமாறு கூறவே, விமலா விருந்துபசாரத்தில் எவ்விதக் குறையும் வைக்கவில்லை.

இப்பொழுது ராஜேந்திரனுடைய பேச்சிலே இன்னொரு பேச்சும் கலந்து ஒலிக்கலாயிற்று. அதுதான் காதல் கனிரஸப் பே ச்சு.

ஆரம்பத்தில் இந்தப் பேச்சு முற்றிலும் தனிமையில் நடைபெற்று வந்தது. மக்கள் கண்களுக்குப்படாமல், அன்றாட அலுவல்களிலிருந்து ஓய்வும்ஒழிவும் கிடைத்த நேரங்களில். இன்னும் சில நாட்களுக்குப் பிறகு, டாக்டர் சந்தோஷம் எம். பி. பி. எஸ்., டி. பி. எச்., டி. டி. எம். வாத்ஸ்யாயன சாத்திரப்படி ஒன்றுமே தெரியாதவர் என்பதையும் அவர்களது ரகசியப் பேச்சைக் காதல் பேச்சாகக் கருதிச் சந்தேகப்பட மாட்டார் என்பதையும் புரிந்து கொண்டு விட்டது போல அவன் பேசலானான்.

விமலா வாய் திறப்பதில்லை. இரண்டு கை தட்டினால்தானே ஓசை? 'கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன்' என்ற கொள்கையைப் பின்பற்ற வேண்டும் என்றே உறுதி பூண்டாள். ஆயினும் அவளையறியாமல் ராஜேந்திரனின் பிதற்றல்களைக் கேட்பதில் ஓர் ஆனந்தம் கண்டாள்.

எனவே, ஒவ்வொன்றாகப் பல அணைகள் தகர்க்கப்பட்டன. வெட்கம், நிந்தனைச் சொல், அச்சம் என்ற எல்லா இடையூறுகளுமே அகன்றன. கடைசியில் அக்கம் பக்கத்தார்களின் கசமுசப்பையும் மீறி ராஜேந்திரன் 'பேபி ஆஸ்டின்' கார் ஓட்டலானான், விமலாவைப் பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டு: உள்ளத்தில் உறுதி இருக்கும்பொழுது, யாருக்கு என்ன பயம் என்ற நினைப்பு விமலாவுக்கு.

உலைவாயை மூடினாலும் மூடலாம்; ஊர் வாயை மூட முடியுமா? கிராமத்தினர் டாக்டர் சந்தோஷத்துக்குத் தூது அனுப்பினர். ஆனால் டாக்டர் சந்தோஷம் தூது வந்தவனை "ஒருவனே எனக்கு நண்பன்; இன்னொருத்தியோ என் மனைவி. அவர்களை நம்பாமல் உன்னை நம்புவதா? எதற்காக வீணில் போய் இரித்துக் கொண்டு திரிகிறாய்?" என்று அதட்டி மிரட்டி விரட்டி விட்டார்.



அவமானமுற்றுத் தன் கைக்காசைச் செல வழித்துக் கொண்டு போய் வந்ததுதான் தூதனுக்கு மிச்சம்.

ஒரு நாள் டாக்டர் சந்தோஷம் கிராமத் துக்கு வரப்போவதா யிருந்தது. அன்றும் வழக்கம் போல் ராஜேந்திரனும் விமலாவும் உலாவப் போயிருந்தார்கள். திரும்பும் போது வெகு நேரமாகி விட்டார்கள். கிராண்ட் டிரங்க் ரோடில் மணிக்கு நாற்பத்தைந்து மைல் வேகத்தில் மோட்டார் பறந்து கொண் டிருந்தது.

திடீரென்று ராஜேந்திரன் விமலாவைப் பார்த்து, "விமலா! இனி இதெல்லாம் கூடாது!" என்றான்.

விமலாவும் ஒரு வேளை இதைத்தான் யோசித்துக் கொண்டிருந்தாளோ என்னவோ? "பின் என்ன செய்வதென்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

'ஆக்ஸிலேட்ட'ரை இன்னும் சற்று அழுத்தி, "டாக்டரை விட்டு விடு!" என்றான் ராஜேந்திரன்.

'ஸ்பீடோ மீட்டரி'ன் ஊசி நாற்பத்தைந்தி லிருந்து ஐம்பத்தைந்தை எட்டிப் பிடித்து விட்டது.

"என்ன சொன்னீர்கள்? அது கனவிலும் நடக்காத காரியம்" என்றாள் விமலா.

"ஏன் நடக்காது? நாம் இந்தப் பிராந்தி யத்தையே விட்டு விட்டு வெகு தூரம் போய் விடுவோம்!" ராஜேந்திரன் இதைச் சொல் லும்பொழுது 'ஸ்பீடோ மீட்டரி'ன் ஊசி அறுபத்தைந்தில் வந்து நின்றது.

விமலா தலையை அசைத்தாள். "முடியாது. என் மனம் அதற்குத் துணியவில்லை. கட்டிய கணவனிருக்க......"

"துணிந்துதான் ஆக வேண்டும், விமலா! இல்லாவிட்டால்......" தன் குரலிலே அழுத் தம் கொடுத்து ராஜேந்திரன் எதையோ சொல்ல எண்ணினான். குரலில் அழுத்தம் கொடுக்கக் கொடுக்க, 'ஸ்டியரிங்கி'லும் பயங்கரமான அழுத்தம் கொடுத்தது.

'ஒருவேளை ராஜேந்திரன் சொல்வதுதான் சரியோ?' விமலாவின் உள்ளத்திலே இவ் வெண்ணம் மின்னைப் பொறியெனப் பளிச்சிட்டது.

அடுத்த கணம்... அப்படி எண்ணியதே தவறு என்பதை எடுத்துக் காட்டுவது போல் ஒரு பெரிய பேரிடி! மோட்டார் அதிர்ந்து ஒரு வாய்க்காலில் போய் விழுந்தது. தீய நினைப்புக்கே இப்படி ஒரு கதியா?

மக்கள் கூடி விட்டனர். விமலாவுக்குக் காயம் குறைவு; சாதாரணமானது. ஆனால் ராஜேந்திரனுக்குப் பலத்த காயம். மூர்ச் சித்துவிட்டான். மூன்று நான்கு பேர்களின் உதவியைக் கொண்டு விமலா கிராமத்து ஆஸ்பத்திரியில் ராஜேந்திரனைக் கொண்டு வந்து சேர்த்தாள்.

காயத்தைச் சோதனை செய்த கிராம வைத்தியசாலையின் டாக்டர். "மண்டையிலே நல்ல அடிபட்டிருக்கிறது. ஆபரேஷன் செய்ய வேண்டும். டாக்டர் சந்தோஷம் இங்கு இருக்கும்பொழுது, அவரை அழைப் பதே நல்லது!" என்று சொன்னார்.

கணவனைக் கூப்பிட வேண்டுமா, ராஜேந் திரனைக் காப்பாற்ற? பனை மரத்தடியில் அமர்ந்து பால் சாப்பிட்ட கதையாக முடி யுமே! காதலனைக் காப்பாற்றக் கணவனைக் கூப்பிட்டாளாம் என்று உலகம் தூற்றுமே! உலகத்தின் வாயில் புகுந்து புறப்பட வேண் டுமா? ஒரு கணம் யோசித்தாள். ஓர் உயிரை மாய்க்க அவள் மனம் ஒப்பவில்லை. தன் வீட்டுக்குச் செய்தி அனுப்பினாள். சிறிது நேரத்துக்கெல்லாம், டாக்டர் சந்தோஷம் ஆஸ்பத்திரிக்கு வந்து சேர்ந்தார். விமலா எதிர்பார்த்தது போலவே நடந்தது. நிகழ்ந் தது அத்தனையும் கேட்டும் டாக்டருக்குச் சந்தேகமே எழவில்லை. இந்த டாக்டர்தான் எத்தனை அப்பாவி மனிதர்! வெளுத்ததெல் லாம் பால் என்று நினைக்கிறவராயிருக்கிறாரே!

ஆயினும், தன்னைக் காப்பாற்றிக்கொள்வ தற்காக விமலா என்ன என்ன விதமாக எல்லாமோ நடிக்கவேண்டியதாகி விட்டது. அவள் வெகு சிரமப்பட்டுப் பொங்கி வரும் கண்ணீரை அடக்கிக் கொண்டாள். துளிக் கூடப் பரபரப்பையோ, துடிதுடிப்பையோ அவள் காட்டிக் கொள்ளவில்லை. ஒரு சாதா ரண நிகழ்ச்சியினால் மனிதனின் மனம் எத்தனை சங்கடப்படுகிறதோ, அத்தனைதான் ராஜேந் திரனுக்கு ஏற்பட்ட இந்தப் பயங்கர விபத்து விஷயத்திலும் அவள் சங்கடப்பட்டாள். உள்ளத்துப் புலம்பலையும் புழுக்கத்தையும் பலவந்தமாக அடக்கி அவள் அப்படி நடிக்கும் படியாகிவிட்டது.


ராஜேந்திரனைப் பரிசோதித்த பின் டாக்டர் தம் மனைவியைத் தவிர மற்றவர்களெல்லோ ரையும் வெளியே போகச் சொல்லிவிட்டார்.

அதற்குப் பின் மனிதனுக்கும் காலனுக்கும் இடையே பெருத்த போர் நிகழ்ந்தது.

விமலா மட்டும் சாட்சியாக நின்றாள். ஆனால் அந்தக் கண நேரத்துக்குள்ளேயே டாக்டர் தொழிலின் மரியாதை முழுவதும் அவளது இருள் அடைந்த உள்ளத்திலே மின்னலெனப் பளிச்சிட்டது. 'மனிதனது வாழ்க்கையைச் சப்பென்று சுவையற்றதாகச் செய்யும் வெறும் வறட்டுத் தொழில் அல்ல டாக்டரது தொழில். இழந்த மகனைத் தாய்க்குத் திருப்பிக் கொடுக்கும் தொழில்! படைத்தவனின் காரியத்தில் கை கொடுத்து உதவி மகிழும் தொழில்!' என்பதெல்லாம் அவள் மனக்கண் முன்னெதிரே வந்து நின்றன. இவ்வளவு நாட்களும் அவள் இந்தத் தொழிலை எவ்வளவு அலட்சியப்படுத்தி விட்டாள்!

எத்தனை சகஜமாக, எவ்வளவு இலகுவாக டாக்டரின் கூரிய கத்தி வேலை செய்துகொண் டிருக்கிறது! எவ்வளவு கம்பீரமாக எவ்வளவு சாந்தமாக அவரது முகபாவம் தோன்றுகிறது! எவ்வளவு பெரிய, எவ்வளவு பயங்கரமான அழகு டாக்டரிடத்திலே மிளிருகிறது! வாழ்க் கையில் முதல் தடவையாக விமலா டாக் டரைச் சிரத்தை உணர்வோடு நோக்கினாள்.

ஆபரேஷனை முடித்துக்கொண்டு வெளியே வந்தபொழுது டாக்டர் கடும் போரால் களைத்து ஓய்ந்துபோன வீரன் போலச் சோர்ந்து காட்சியளித்தார். தன் முந்தானை யினால் டாக்டரின் நெற்றியிலே அரும்பியிருக்



பாதுகாப்பு


தரையிலிருந்து தொடங்குகிறது

Firestone

பயர்ஸ்டோன்

நியூ டிலக்ஸ் சாம்பியன் டயர்களைப் பொருத்துங்கள்

நீடித்த காலத்திற்கு அபாயமின்றி இருங்கள்



உங்களுடைய காருக்குப் புதிய டயர்கள் தேவையா? உங்கள் பணத்திற்குரிய உயரிய மதிப்பைப் பெறுங்கள் — பயர்ஸ்டோன் வாங்குங்கள். ஏனெனில்,

உலக மோட்டார் ஓட்டப் பந்தயக் காரர்கள், அவர்களுடைய உயிருக்காக எந்தத் தொழிலியல் நுட்பத்தை நம்பி யிருக்கிறார்களோ, அதே தொழில் திறனின் தயாரிப்புதான் பயர்ஸ்டோன் டயர்களும். நீடித்து உழைக்கவும், தேய்வு பெருமளவும், உங்களுக்கு நீடித்த காலத்திற்கு அபாயமின்றி இருப்பதற்குமெனவே பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்டவை பயர்ஸ்டோன் டிரெட்.
இன்னமும் தனிப்பட்ட பயர்ஸ்டோனின் பாதுகாப்பளிக்கும் டிரெட் அதன் ஆயிரக்கணக்கான, வழுக்குவதைத் தடுக்கக்கூடிய 'கோணங்கள் மூலம் உங்களுக்கு மிகவும் அதிகப்படியான பிரேக் கண்ட்ரோலைக் கொடுப்பதற்கெனவே உருவாக்கப்பட்டிருக்கிறது.

பயர்ஸ்டோன்

இன்று சிறந்தவை.... நாளை மேலும் சிறந்தவை

கும் வியர்வையைத் துடைக்க வேண்டும் என்ற ஆசை விமலாவின் வாழ்க்கையில் முதன் முதலாக அன்றுதான் எழுந்தது.

நாட்கள் அதிகம் பிடித்த போதிலும் ராஜேந்திரன் உயிர் பிழைத்து விட்டான். ஆனால் அவனுடைய உடலின் மேல் பாகம், தலையிலிருந்து இடுப்புவரை பக்கவாதத்தினால் பலமிழந்து தொய்ந்துவிட்டது. ஒரு நாள் நினைத்த மாத்திரத்தில், நூற்றுக் கணக்கான காதல் கனிரச மொழிகள் பேசிய நாக்கு, இன்று தெளிவற்ற புரியாத ஈனக் குரலை எழுப்பி ஒலமிட முடிந்ததே யொழிய, உள்ளத்தில் உள்ளதை வெளியிடும் சக்தியை இழந்துவிட்டது. ஒரு நாள் விமலாவை வெகுவாகக் கவர்ந்திழுத்த அந்தப் பெரிய கரிய கண்விழிகள், இன்று பயங்கரமாக நிலைக்குத்த விட்டுக் காட்சியளித்தன. விமலா அவற்றைக் காணக்கூட அஞ்சினாள். ராஜேந்திரனைத் தினந்தோறும் பார்க்கப் போகவே கூட அவளுக்குச் சிரமமாய்ப் போய்விட்டது. அவளது அன்பும் காதலும் நாளடைவில் வெறுப்பாகவே பரிணமித்துவிட்டன.

அது முதற்கொண்டு தன் கணவரை முழுதும் பார்த்துப் புரிந்துகொள்ளும் வாய்ப்பு அவளுக்குக் கிட்டியது. அவளது கணவர் ராஜேந்திரனைப் போல் அழகாக இல்லைதான். ஆனால் டாக்டரின் 'பர்ஸனாலிடி'யே கன கம்பீரமாக என்றென்றும் புதிதெனத் தோன்றத் தொடங்கியது. உடல் அழகைப் போலத் தன் பெருமையைப் பறைசாற்றிக் கொள்ளவோ, விளம்பரப் படுத்திக்கொள்ளவோ முன்வரவில்லை டாக்டரின் உருவம். ஆனால் மலையைப் போன்ற கம்பீரத்துடன் அமைதியே உருவாக நின்று வருபவர்களை யெல்லாம் ஈர்த்து வணங்கி வழிபடுமாறு செய்து கொண்டிருந்தது.

விமலாவின் வாழ்க்கையைச் சுமையாக்கிக் கொண்டிருந்த தனிமையைத்தான் டாக்டர் சந்தோஷம் ஒருவேளை புரிந்துகொண்டாரோ, அல்லது இத்தனை நாளும் மனைவியைக் கவனிக்காமல் இருந்துவிட்டது தம் தவறு என்பதைத்தான் உணர்ந்து கொண்டாரோ, ஒரு நாள், ''டாக்டர் தொழிலை விட்டுவிட்டு நான் இனி கிராமத்திலேயே நிரந்தரமாக இருக்கப் போகிறேன். என் விமலாவோடு அமைதியாக, ஆனந்தமாக வாழ்நாளைக் கழிக்கப் போகிறேன்'' என்றார். அவர் சொன்ன அந்தச் செய்தி விமலாவை மீளா வியப்பிலும் மாளா இன்பத்திலும் ஆழ்த்திக் கல்லாகச் சமையச் செய்து விட்டது.

அவர் சொன்ன சொல் செயலாகப் பரிணமித்ததா? அவர்களுடைய இன்ப வாழ்வு தேனிலவைப் பொழிந்து உள்ளத்தை உவகை கொள்ளச் செய்ததா? இல்லை; அதுதான் இல்லை. டாக்டர் சந்தோஷம் இறக்கும்வரை, அவர்களுடைய வாழ்விலே எந்தக் கசப்பும் எட்டிப் பார்க்கவில்லை என்பது உண்மைதான். ஆனால்...?

டாக்டர் எப்பொழுதும் ஏதோ யோசனையில் ஆழ்ந்தவண்ணம் இருந்தார். எப்பொழுதும் பிரமை பிடித்தவர் போலிருந்தார். சோதனையே உயிராயிருந்த அவருக்கு அதைவிட முடியவில்லை. திரும்பத் திரும்ப மனம் சோதனைகளைச் சுற்றியே வட்டமிட்டது. அதோடு தமது வாழ்க்கையே அவருக்கு ஒரு சோதனையாகவும் பட்டது.

விமலாவினாலும் டாக்டரின் மனத்தைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. அவர் காரியங்களில் குறுக்கிட்டு, நாம் கெடுக்கிறோமோ அதனால்தான் அப்படி யிருக்கிறாரோ என்று எண்ணினாள். அதோடு மனத்தை இன்னொரு எண்ணமும் உறுத்திக் கொண்டிருந்தது. அதை யாரிடமும் விண்டு சொல்ல முடியவில்லை. வேண்டாமென்று மனத்துள் மூடி வைத்திருக்கவும் முடியவில்லை. அவள் நடத்தையைச் சந்தேகித்து டாக்டர் அப்படிப் பேயறைந்தவர் மாதிரி ஆகியிருக்கலாம் அல்லவா?

இப்படியாக வாழ்க்கை இருவரையும் இரு துருவங்களாக்கி விட்டது. இந்த வெறிச்சிட்ட வாழ்க்கையாவது நீடித்திருக்கக் கூடாதா என்று எண்ணும்படி விதி அவர் வாழ்க்கையில் விளையாடியது. டாக்டர் அவளுக்கு மன நிறைவை ஏற்படுத்த எண்ணிச் சொன்ன வார்த்தைகள் வெறும் வார்த்தைகளாகவே இருந்தன. டாக்டர் கண்ணை மூடிவிட்டார்.

வெகு நேரம் வரை வெறிச்சிட்டுவிட்ட வீட்டிலே துயரமே உருவாக உட்கார்ந்து விமலா இவை எல்லாவற்றையும் பற்றி யோசித்துக் கொண்டிருந்தாள். அதே சமயம் சித்தி வந்து, ''அம்மா, குழந்தாய்! நாராயண பிரசாத் உன்னைப் பார்க்க வந்திருக்கிறார்!'' என்றாள்.

நாராயண பிரசாத் டாக்டர் சந்தோஷத்தின் வக்கீல்.

''இருட்டி இத்தனை நேரமான பின் நாராயண பிரசாத் வந்திருக்கிறாரா? எதற்கு?''

''நிலபுலன்களைப் பற்றி ஏதாவது பேச வேண்டியிருக்கிறதோ, என்னமோ?''

''இந்த நேரத்தில் நான் யாருடனும் பேசத் தயாராயில்லை, சித்தி!''

''சரி, போய்ச் சொல்லி விடுகிறேன்!''

சித்தி போய் விட்டாள். ஆனால் சில கணங்களுக்கெல்லாம் மீண்டும் திரும்பி வந்தாள். அவள் கையில் ஒரு நீண்ட உறை இருந்தது. அதை விமலாவிடம் கொடுத்தவாறே, ''இந்த உறையை டாக்டர் வக்கீலிடம் கொடுத்து வைத்திருந்தாராம், எல்லாக் காரியங்களும் முடிந்தபின் உன்னிடம் கொடுக்குமாறு கூறியிருந்தாராம்!''

ஒன்றும் பதில் சொல்லாமலேயே, விமலா உறையைப் பிரித்துப் பார்த்தாள். ஆம், டாக்டரின் கையெழுத்துத்தான்!

என்ன எழுதி யிருப்பார் என்று உள்ளூற நடுங்கிய வண்ணமே அந்தக் கடிதத்தைப் படித்தாள்:—

''உனக்கும் ராஜேந்திரனுக்கும் இடையே ஏற்பட்ட அன்பைப்பற்றி எனக்கு எதுவுமே தெரியாது என்று நீ எண்ணி யிருக்கலாம். அப்படி எண்ணி யிருந்தால் அது உன் தவறேயாகும். துர்ச்சம்பவம் நடந்த அன்றே, எவ்வித முயற்சியும் எடுத்துக்கொள்ளாமல் எனக்கு உங்கள் இருவருடைய மறைமுகமான குற்றச் செயல்களும் தெரிந்து விட்டன. உன் நடிப்பிலே என்னால் ஒரு குறையும் காண முடியவில்லை; உன் நடிப்பைக் கொண்டு எனக்கு எவ்விதமான சந்தேகமும்

எழுவில்லை என்பது என்னவோ உண்மைதான். ராஜேந்திரனுக்கு ஆபரேஷன் செய்வதற்காக நான் அவனுடைய கோட்டைக் கழற்றிய பொழுது, அவன் கோட்டுப் பையிலிருந்து ஒரு கடிதம் கீழே விழுந்தது. அக்கடிதம் நீ எழுதியது. அதுவே என் கண்களைத் திறந்து விட்டது. நீ உடலால் கெட்டுப் போகவில்லையெனினும் உன் உள்ளத்து உணர்ச்சி எனக்கு ஒருவாறு விளங்கியது. உன் இந்தத் தவறுக்குக் காரணம் என்னுடைய அலட்சியமும் அஜாக்கிரதையுமே ஆகும். மங்கை ஒருத்தியை மணந்துகொண்டு, கணவனின் கடமையைச் செய்யாது, நான் டாக்டர் என்று இறுமாந்திருந்தது என் தவறுதான். இதை உணர்ந்த நான் உன்னை அப்பொழுதே மன்னித்து விட்டேன். ஆனால் என் அந்தரங்க நண்பனாக இருந்துகொண்டு என் மனைவியை என்னிடமிருந்து பறிக்க முயன்றானே, அவனை என்னால் இலேசில் மன்னிக்க முடியவில்லை. கையில் கத்தியை எடுத்துக்கொண்டு ஆபரேஷன் செய்யப் போனபொழுது, என்னுள்ளத்திலே அடங்கிக் கிடந்த பழிவாங்கும் ராக்ஷஸ நோக்கம் பீறிட்டுக் கொண்டு எழுந்தது. நான் மட்டும் மனம் வைத்திருந்தால், குளோரோபாரத்தின் அளவையும் நேரத்தையும் அதிகரித்து அவனை அமைதியாக இறக்க விட்டிருக்கலாம். என்னை அதற்காக யாரும் சந்தேகக் கண்கொண்டு பார்த்திருக்கவும் முடியாது. ஆனால் அப்படி நான் செய்துவிடவில்லை.

காரணம், அப்படிச் செய்வது டாக்டருக்கு உகந்த காரியம் இல்லை. எனவே, எப்படியும் அவனைக் காப்பாற்றியே தீருவது என்று கங்கணம் கட்டிக் கொண்டு முழுமூச்சுடன் செயலில் இறங்கினேன். உயிர்ப் பிராணிகளின் உடற்கூறுகளை நான் நன்கு ஆராய்ச்சி செய்திருக்கிறேன். அவன் பிழைத்தாலும் வெறும் பிண்டமாகத்தான் இருப்பான் என்பது எனக்குத் தெரியும். ஜடமாக இருப்பதைக் காட்டிலும் மரித்துவிடுவது எவ்வளவோ மேல் என்று எண்ணக்கூடிய நிலைதான். உற்றார் உறவினர்கள் எல்லோரும் கரித்துக்கொட்டுவார்கள். உற்ற நண்பனாக இருந்துகொண்டு அவன் எனக்கு இழைத்த தீங்குக்கு ஆண்டவனாகவே பார்த்துக் கூலி கொடுத்து விட்டார். நான் டாக்டரின் கடமையைச் சரிவரச் செய்து அவனைப் பிழைக்க வைத்துவிட்டேன் என்பது என்னவோ உண்மைதான். மனிதனாக இருந்து நான் வாங்கும் பழியைக் காட்டிலும் ஆண்டவன் வாங்கிய பழியை என்னவென்பது? அதற்குக் கருவியாக நானே அமைந்தது இன்னும் விசித்திரமாயில்லையா?

அவனுடைய அந்த நிலைமையைக் கண்டு உன் உள்ளத்திலே வெறுப்பு உண்டாகியது. ராஜேந்திரனை வெறுத்து நீ கரம் நீட்டி என்னை அணைய முன் வந்தாய். இழந்த செல்வம் திரும்பிக் கிடைத்தது போன்று உன் அன்பு எனக்கு மீண்டும் கிடைத்தது.

உன்னைப் புறக்கணித்துத் தொழிலை கதியாக நான் செய்த செயல் சரியல்ல என்பதை நான் ஒப்புக் கொள்ளுகிறேன். ஆபரேஷன் செய்யும் வித்தையைக் கற்பதனால் மட்டும் ஒன்றும் ஆவதில்லை. மனைவியின் அன்பைப் பெற என்ன என்னவெல்லாமோ செய்ய வேண்டியிருக்கிறது. விலை மிகுந்த இந்தப் படிப்பினை எனக்குக் கிடைத்தபொழுது, என் அறிவை நேர்மையான வகையிலே உபயோகிக்கும் வழியே அடைக்கப்பட்டு விட்டது.

நண்பனைப் பொறுத்தவரை, இப்படிக் கடுமையாக நடந்துகொண்டு விட்டேனே என்பதற்காக நான் வருந்தவில்லை. மன்னிப்புக் கோரவும் விரும்பவில்லை. நண்பனிடமோ, உன்னிடமோ மட்டுமல்ல: பகவானிடம்கூட மன்னிப்புக் கோரத் தயாராயில்லை. ஆனால் இந்த நிகழ்ச்சியை உனக்குச் சொல்லாமல் மறைமுகமாக உன் அன்புக்கு உலைவைத்தேனே, அந்தத் தவறுக்காக மட்டும் நீ என்னை மன்னிப்பாயாக.''


கடிதத்தில் இன்னும் இரண்டொரு வரிகளே இருந்தன. ஆனால் விமலாவினால் அதற்குமேல் படிக்க முடியவில்லை. கண் ஒளி மங்கிவிட்டது. எத்தனையோ முயன்றும்கூட விமலாவினால் வந்த மயக்கத்தைத் தடுக்க முடியவில்லை. அப்பொழுது அவளுள்ளத்தில் ஒரு மின்னல் பொறி தோன்றியது: 'மனத்தால் தவறு நினைத்ததற்கே இந்தக் கதியா?''

அடுத்த நிமிஷம் அவள் பொத்தெனத் தரையில் சாய்ந்து விட்டாள்.

கணவனின் பிரிவுத் துயரம் தாளாமல்தான் விமலா திடீரென்று மூர்ச்சை போட்டு விழுந்துவிட்டாள் என்று எண்ணிய அன்பே உருவான சித்தி தலையில் ஓங்கி ஓங்கி அடித்துக் கொண்டதோடு, ''பாழும் கடவுளே! ராமர்-சீதை போன்ற தம்பதிகளை எதற்காகத்தான் படைக்கிறாயோ? படைக்கத்தான் படைக்கிறாயே. அகாலத்தில் அவர்களை இப்படி ஏன் தான் பிரித்துத் துன்புறுத்துகிறாயோ?'' என்று கதறினாள்.

[ஆதாரம்: ஸ்ரீ கமல் ஜோஷியின் ஹிந்திக் கதை]





மந்திரம் செய்த தந்திரம்

கேசவ மேனன்

[தமிழ் நாட்டில் பல ஆண்டுகள் போலீஸ் இலாகாவில் பணியாற்றி, உதவி போலீஸ் கமிஷனர் பதவிக்கு உயர்ந்து, ஓய்வு பெற்றுள்ள திரு கேசவ மேனன் அவர்கள் தாம் புலன் விசாரித்த ஒரு ருசிகரமான வழக்கு பற்றி இந்தக் கட்டுரையில் கூறுகிறார். இதில் வரும் பாத்திரங்களின் பெயர்கள் மாற்றிக் கொடுக்கப்பட்டுள்ளன.]

1942-ம் ஆண்டு. நான் இன்ஸ்பெக்டராகச் சேவை செய்த சமயம். ஒரு நாள் நடுப் பகல் நான் சென்னை மாஜிஸ்திரேட் கோர்ட்டில் சாட்சியம் கூறிக் கொண்டிருந்தேன். அப்போது என் மேலதிகாரியிடமிருந்து செய்தி வந்தது. அவருக்கு நான் அவசியமாகவும் உடனடியாகவும் தேவைப்படுவதாக. பிரதிவாதி வக்கீலின் இணக்கத்துடனும், மாஜிஸ்திரேட்டின் அனுமதியுடனும் நான் சாட்சியத்தைப் பாதியில் நிறுத்திவிட்டு என் அதிகாரியிடம் சென்றேன்.

அவர் வேறு பெரிய போலீஸ் உத்தியோகஸ்தர்களுடன் ஆலோசனை நடத்திக் கொண்டிருந்தார். என்னைக் கண்டவுடன் ''இதோ இந்தத் தந்தியைப் பாருங்கள், மிஸ்டர் மேனன். இது விஷயத்தில் அரசாங்கமே அக்கறை கொண்டிருக்கிறது; அத்தோடு, மிகவும் விலையுயர்ந்த நகைகள் களவு போயிருப்பதால் நானும் இதில் ரொம்பவும் கவலை கொண்டிருக்கிறேன். உஷாராகக் கவனியுங்கள்'' என்று கூறி தந்தியொன்றை என்னிடம் அளித்தார்.

''மதிப்பு மிக்க ஆபரணங்கள் — கமலங்கள் முத்துக்கள், மரகதக் கற்கள், கெம்புக் கற்கள், கைப்பெட்டியி லிருந்தவை காணவில்லை — கொழும்பிலிருந்து பம்பாய் போகும் வழியில் சம்பவம் — சென்னையிலிருந்து கிளம்பியவுடன் கவனத்துக்கு வந்தது — பிரயாண ஏஜன்ஸியாரிடம் சந்தேகம் — விவரம் தொடர்கிறது — வில்லியம் பிரபு'' என்று அந்தத் தந்தி கூறிற்று.

வில்லியம் பிரபு ஒரு ராஜதந்திரி. அத்தோடு தொழிலதிபருமாவார். அவரும் அவர் மனைவியும், பற்பல தேசங்களைச் சேர்ந்த பண்டைய நகை நட்டுக்களை யெல்லாம் ஏராளமாக வாங்கிக் குவித்திருந்தனர். என்ன காரணத்துக்காகவோ போகுமிடங்களுக் கெல்லாம் அவற்றை எடுத்துச் சென்றனர். திருட்டுப் போயிருப்பது அவற்றிலிருந்துதான்.

நாங்கள் இந்தக் களவு பற்றி விவாதித்துக் கொண்டிருக்கும் போதே வில்லியம் பிரபு குறிப்பிட்டிருந்த பிரயாண ஏஜென்ஸியின் மானேஜர் அங்கு வந்து சேர்ந்தார். அவர் மிகவும் பரபரப்புடன் காணப்பட்டார். அவர் பரபரப்புக்கு நியாயமான காரணம் இருந்தது. போலீஸுக்கு அனுப்பியது போலவே அவருக்கும் ஒரு தந்தி அடித்திருக்கிறார் வில்லியம் பிரபு. எத்தனையோ நாட்களாகப் பிரயாண ஏற்பாடுகள் செய்து கொடுப்பதில் நேர்மைக்குப் பெயர்பெற்ற தம் ஸ்தாபனத்துக்கு இழுக்கு கற்பிக்கப்பட்டு விட்டதாக மானேஜர் கருதியிருக்கிறார்; போலீசுக்கும் ஓடி வந்திருக்கிறார். ''எங்கள் ஆட்கள் இப்படிச் செய்யவே மாட்டார்கள் என்று நான் உறுதி சொல்கிறேன். உங்கள் அதிகாரிகள் எங்களைச் சந்தேகத்திலிருந்து விடுவிக்க வேண்டும்'' என்று எங்கள் தலைவரைக் கேட்டுக் கொண்டார்.

''எங்களால் முடிந்ததைச் செய்கிறோம், ஜிம்! மேனனிடம்தான் இதை ஒப்புவித்திருக்கிறேன். உங்கள் ஆட்கள் இதில் சம்பந்தப்பட்டிராவிட்டால் அதை அவர் நிச்சயப்படுத்த முடியும் என்று நம்புகிறேன்'' என்று





கூறி அவரை அனுப்பி வைத்தார் தலைமை அதிகாரி. பிறகு, ஒரு வார காலத்துக்கு இந்த விவகாரத்திலேயேதான் ஈடுபட வேண்டுமெனக் கூறி ஆலோசனையை முடித்தார் என் அதிபர்.

• • •

பிற்பகல் முழுதும் ஓய்வு எடுத்துக்கொண்டேன். அஸ்தமனமானபின் புலன் விசாரணை தொடங்கினேன்.

முதன் முதலில் அந்தப் பிரயாண ஏஜென்ஸியைச் சேர்ந்த இரண்டு வழிகாட்டி (கைடு)கள் வீட்டுக்குச் சென்றேன். அவர்கள் மிகவும் கண்ணியமானவர்களாகக் காணப்பட்டார்கள். தங்களையும் சந்தேகிக்கும்படியாகி விட்டதே என்று அப்படியே கூசிப்போனார்கள். இருந்தாலும் நான் என் கடமையைச் செய்து தானே ஆகவேண்டும்? அவர்கள் வீடு முழுவதையும் சோதனை யிட்டேன். ஏதும் தடயம் கிடைக்கவில்லை. அவர்கள்மீது இனி ஏதும் ஐயம் இல்லை என்று கூறினேன். அதோடு அவர்களை இவ்விஷயத்தில் எனக்கு உதவிபுரியும் இரு நம்பகமான நண்பர்களாக ஆக்கிக் கொண்டேன். அவர்களுக்குக் கட்டிப் பிடிக்க முடியாத கொள்ளை ஆனந்தம்!

இனி எங்கிருந்து துப்பு துலக்கத் தொடங்குவது? வில்லியம் பிரபு கொழும்பிலிருந்து கிளம்பியிருக்கிறார். போட்மெயிலில் எழும்பூர் வந்திருக்கிறார். அங்கிருந்து சென்டிரலுக்குப் போய் பம்பாய் மெயில் ஏறியிருக்கிறார். சென்னையிலிருந்து புறப்பட்டபின்தான் களவு போனதைக் கண்டுபிடித்திருக்கிறார். அப்படியானால் திருட்டு எங்கே நடந்தது? கொழும்பிலா, தலைமன்னாரிலா, ஓடும் ரயிலிலா, எழும்பூரில் சாமான்களை இறக்கி, சென்டிரல் செல்வதற்காக லாரியில் ஏற்றியபோதா? அல்லது சென்டிரல் ஸ்டேஷனிலேயேதானா? எனவே தான் எங்கிருந்து புலன் விசாரிக்க ஆரம்பிக்கலாம் என்ற யோசனை எழுந்தது.

ஏனோ தெரியவில்லை, எழும்பூர் ஸ்டேஷனில் புலன் தேட ஆரம்பித்தேன், என் இரு புதிய நண்பர்களோடு - அதாவது அந்தப் பிரயாண ஏஜென்ஸியின் வழிகாட்டிகளோடு. இருவரும் இந்தியக் கிறிஸ்தவர்கள். அவர்களில் நடுத்தர உயரமும், மினுமினுக்கும் எண்ணெய்க் கறுப்பு நிறமும் கொண்ட காரதோஸா பெரியவர். அப்பழுக்கற்ற அவரது வெள்ளை வெளேரென்ற உடைகளைப் பார்த்தால் யாரோ ரயில்வே அதிகாரி என்று தோன்றும். மற்றவர் பெயர் வால்டன். வெடவெடவென்று, உயரமாக, செக்கச் செவேலென்று இருந்தார். காரதோஸாவைப் போல் அவ்வளவு உற்சாக புருஷரல்ல இவர். அவரிடம் மிகவும் பவ்யமாக நடந்து கொண்டார். தங்கள் நிறுவனத்தின் சார்பில் பிரயாணம் ஏற்பாடானவர்களிடம் இருவரும் பாகாய் உருகி, வெண்ணெயாய்க் குழைந்து பழகிய பாங்கே அலாதி. இவர்கள் உபசரணையில் மகிழ்ந்துபோன அந்தப் பிரயாணிகளும் நாளுக்கு இருபது ரூபாய் வரை இவர்களுக்கு வெகுமதி அளிப்பதுண்டாம். இவ்வளவு சீரும் சிறப்புமாக வாழ்ந்து வரும் தங்களைச் சந்



தேகித்தாரே என்று வில்லியம் பிரபுமேல் இவர்களுக்கு அசாத்திய கோபம். இப்போது அதை மறந்து எனக்கு உதவுகிறார்கள்.

அதென்ன உதவி என்று பார்க்கலாமா? தினமும்தான் போட்மெயில் வருகிறது. இந்த ஏஜென்ஸியால் பிரயாணம் ஏற்பாடான வர்களும் அதில் வரத்தான் செய்கிறார்கள். அவர்களில் வில்லியம் பிரபு போலவே, நேராக எழும்பூரிலிருந்து சென்டிரல் செல்பவர்களும் உண்டு. இவர்களுடைய சரக்குகளை எப்படி லாரியில் ஏற்றி அனுப்புகிறார்கள்? இந்த 'ஏற்றுமதி'க்குள் விஷமம் ஏதாவது நடக்கக் கூடுமோ? இதை நான் பிரத்தியட்சமாகப் பார்க்கவேதான் உதவ வந்தார்கள் காரதோஸாவும் வால்டனும்.

போட்மெயிலும் வந்தது. ஏதோ உள் ளுணர்ச்சியினால் போல, இந்த இருவரும் அன்று தாங்கள் தேடி வந்த அமெரிக்கச் சீமானையே 'கன கருக்காக' அடையாளம் கண்டு கொண்டு அணுகினார்கள். அவர் தமது சாமான் ரசீதுகளை இவர்களிடம் அளித் தார். அவற்றை லாரி மூலம் சென்டிரலில் சேர்ப்பிக்குமாறு கூறிவிட்டுத் தாம் காரில் விரைந்தார்.

பிரேக் வானுக்குள் நுழைந்தார் வால்டன். சாமான்களையும் ரசீதையும் ஒத்துப் பார்த்துச் சரிக்கட்டினார். எல்லாவற்றையும் ரயில்வே ஏஜென்ஸி லாரிக்கு எடுத்து வந்தனர் ஐந்து போர்ட்டர்கள். அவர்களில் ஒருவன் தலை மைப் போர்ட்டர் கணேசன். வேறொருவனே என் கவனத்தைக் கவர்ந்தான். லாரியி லுள்ள போர்ட்டரிடம் பெட்டியை ஒப் படைக்கும் அவன், என்னையே கவனித்தபடி அவ் வேலையில் ஈடுபட்டிருந்தது எனக்கு விசித்திரமாகப்பட்டது. இதனால் அவன் கைதவறியது; பெட்டி தடால் என்று கீழே விழுந்தது. அவனைச்சபித்தபடி காரதோஸாவே பெட்டியை லாரியில் ஏற்றினார். நான் அவனைப் பார்த்தேன். இன்னமும் அவன் என்னையே பார்த்துக் கொண்டிருந்தான்.

சாமான்களெல்லாம் ஏற்றியாயிற்று. மூன்று போர்ட்டர்களும் ஏறிக்கொண்ட னர். அவர்களில் என் கவனத்தைக் கவர்ந் தவனும் இருந்தான். லாரி புறப்பட்டது. இரண்டு வழிகாட்டிகளும் சைக்கிளில் அதைப் பின்தொடர்ந்தனர். நானும் சென்டிரல் அடைந்தேன். அங்கு சரக்குகளை இறக்கிய போதும், அந்தப் போர்ட்டர் முன்போலவே நடந்து கொண்டான். அதாவது என்னையே முறைத்துக் கொண்டிருந்தான். பம்பாய் மெயில் போனபின் திரும்பி வந்தனர்.

'வில்லியம் பிரபுவின் சரக்குகளை இறக்கி ஏற்றிய போர்ட்டர்கள் யார் என்று எனக்குச் சொல்ல முடியுமா?'' என்று கைடுகளைக் கேட் டேன். தலைமைப் போர்ட்டர் கணேசனைத் தவிர அவர்களில் வேறு யாரையும் அவர்க ளுக்குக் குறிப்பாக நினைவில்லை.

அவர்கள் சென்ற பிறகு எழும்பூர் ஸ்டேஷ னுக்குச் சென்றேன். நான் கேட்டுக்கொண்ட படி ஒரு சப்-இன்ஸ்பெக்டரும், ஓர் ஏட்டும், நான்கு கான்ஸ்டேபிள்களும் இரண்டு ரயில்வே போலீஸ் காரர்களும் என் சகாயத்துக்கு வந் திருந்தனர். கணேசனை வரவழைத்தேன். அவன் நடுங்கிக் கொண்டிருந்தான். ஒரு ரூபாய் செலவில் அவனுக்கு ஆகாரம் செய்து வைத்து, அவனை நண்பனாக்கிக் கொண்டேன். ''நீ ரொம்பவும் நல்லவனாமே. ஸ்டேஷன் மாஸ்டர் உன்னைப் பற்றிப் பிரமாதமாகச் சொன்னார். நல்ல தெய்வ நம்பிக்கையுள்ள வனும் நீ...ம்?''

(அவன் நெற்றியில் பளிச்சென்று விளங்கும் அடையாளம்தான் அவன் மதாபிமானத் தைப் பறைசாற்றுகிறதே!)

''உன்மேல் எங்களுக்குச் சந்தேகமேயில்லை. பார்க்கப் போனால் எங்களுக்கு உதவவேதான் உன்னை வரவழைத்தது'' என்றெல்லாம் அவனைத் தாஜா செய்தேன். இதன் பலனாக கணேசன், காலையில் தனக்குதவிய நான்கு பேரையும் சரிக் கட்டி, அழைத்து வந்தான்.

எழும்பூரிலுள்ள அத்தனை போர்ட்டர்களை யும் விசாரித்து விடுவதென்று முடிவு செய் தேன். ஒவ்வொரு போர்ட்டராக மாலை ஆறுமணி வரையில் இருபத்து ஐந்து பேரை விசாரித்தேன். அப்புறம் ரயில்கள் அடுத்தடுத் துப் புறப்பட ஆரம்பித்ததால் விசாரணையை நிறுத்தினேன். அவர்கள் தங்கள் வேலைக்குச் சென்றார்கள். எழும்பூர் ரயிலடிக்கே உரித் தான கலகலப்பு எல்லாம் இரவு பத்துமணி யுடன் ஓய்ந்து விட்டது. ஒரே அமைதிதான்.

ரயில்வே போலீஸ் ஸ்டேஷனில் மீண்டும் விசாரணை ஆரம்பித்தது. காலம்தான் சென்று கொண்டேயிருந்ததே ஒழிய எவ்வித பலனும் கிடைக்க வில்லை. ஆயிற்று, இருபது பேர்வரை யில் இப்பொழுது விசாரித்தாகி விட்டது.

மற்றச் சகாக்கள் உறக்கத்தில் ஆழ்ந்து விட்டனர். நான் மட்டும் கொட்டுக் கொட் டென்று விழித்தபடி சோர்ந்து கிடந்தேன். சோர்வு மட்டும்தானா-பசியும் தாகமும் வேறு. புகைப்பதற்கு சிகரெட் கூட இல்லை. அன்று காலை மூன்று மணியிலிருந்து நின்ற இடத்தில் நில்லாமல் உழைத்ததெல்லாம் வியர்த்த மாகிவிட்டதா?

ஆயாசம் தானாகவே எப்படியோ நித்திரை யில் போய் ஒடுங்கியது. அது நித்திரைதான் என்று நிச்சயமாகச் சொல்ல முடியுமா? எது எப்படியானாலும் அந்த நிலையில் ஓர் அதிசயம் நிகழ்ந்தது. என் மனசு சமநிலையிலிருந்து தடம் புரண்டதாலோ, அல்லது நரம்பு மண்டலம் தானாகவே ஏதோ விசித்திர கதியில் இயங்கியதாலோ, அல்லது காரண காரியம் காட்ட முடியாத ஏதோ ஓர் அதீத மான சக்தி என்னிடம் பரிதாபம் கொண்ட தாலோ-எதனால் என்று நான் சொல்வதற் கில்லை- அந்த அதிசயம் நிகழ்ந்தது. கனவு போன்ற ஒரு நிலை. நான் என் சுற்றுப்புறத் தையும் சூழலையும் விட்டு விலகி விலகித் தொலைதூரம் சென்று விட்டேன். அப்போது யாரோ என்னிடம் பேசுவதாக உணர்கிறேன்; உணர்வுதானா அது? வாஸ்தவமாக அக்குரலைக் காதாரக் கேட்பதுபோலவே இருக்கிறது. ''ராமய்யாவை உடனே 'ஜி' போலீஸ் ஸ்டேஷ னுக்கு அழைத்துப் போ. இந்த வழக்கு முழுவதற்கும் துப்புத் துலங்கி விடும்'' என்று அந்தக் குரல் அழுத்தமாகக் கூறுகிறது! கட்டளையிடுகிறது.

'சட்'டென்று கண் விழித்தேன். சுற்றிலும், தூங்குவழியும் போலீஸ்காரரும், போர்ட்டரும் தான். ஒரே குறட்டைச் சத்தம். எல்லாரையும் எழுப்பினேன். போர்ட்டர் ஒவ்வொருவனுடைய பெயரையும் கேட்டேன். விந்தை! ஒருவன் பெயர் ராமய்யா! விந்தையிலும் விந்தை! இந்த ராமய்யாதான் காலையில் என் சந்தேகத்தைக் கிளறி விட்டவன்! கணேசன் அவனையும் கொண்டு வந்து சேர்த்திருக்கிறான்.

அந்த இனம் காணமுடியாத கட்டளைப்படியே ராமய்யாவுடனும், போலீஸ்காரர்களுடனும் 'ஜி' போலீஸ் ஸ்டேஷனை அடைந்தேன். அங்குள்ள போலீஸ்காரர்களில் யாருக்காவது அவனைத் தெரியுமா என்று கேட்டேன். ஒருவனுக்குத் தெரிந்திருக்கவும் செய்தது. "ராமய்யாவா? இல்லை. இவன் மங்களூர் கெம்பாகௌடா அல்லவா? பெயர் போன கேடியாயிற்றே!" என்றான்.

ரயில்களில் திருட்டு நடத்தியவன் கெம்பா கௌடா. இவனை ஆறு மாதங்களுக்கு முன்பு தக்க கண்காணிப்பில் சென்னைக்கு அழைத்து வந்திருந்தார்கள். அப்போது அவன் ஏதோ சாக்குப் போக்கு சொல்லிக் கம்பி நீட்டி விட்டான். இப்போது ராமய்யாவாகப் பரிணமித்திருக்கிறான்.

இந்த வண்டவாளங்களை அந்தக் கான்ஸ்டபிள் இழுத்து விட்டதுதான் தாமதம். கெம்பா கௌடா என்ற ராமய்யா அந்தக் கான்ஸ்டபிள் முகத்தில் ஓங்கி ஓர் அறை விட்டான். திடசாலியான அந்தக் கான்ஸ்டபிள் தன்னை அறைந்த அந்தக் கையை அப்படியே முறுக்கி, கெம்பாவைத் தரையில் நொடித்து உட்காரச் செய்து விட்டான்.

அந்தச் சமயத்தில் அவனைக் கேள்வி கேட்டுப் புண்ணியமில்லை என்று தெரிந்தது. அவனைப் பலத்த பாதுகாப்பில் வைத்து விட்டுத் தலைமை ஆபீசுக்குச் சென்றேன். கெம்பா கௌடாவின் குற்றங்கள் பதிவாகியிருந்த ரிஜிஸ்தர்களைப் பார்த்தேன். 'ஆகா! முன்பு பெங்களூரில் ஒரு கைப் பெட்டியைச் கொள்ளையிட்டிருக்கிறான் இந்தக் கெம்பா. அதன் ஒரு பக்கத்தை மட்டும் பெயர்த்தெடுத்து உள்ளிருந்த பொருள்களையெல்லாம் அப்புறப்படுத்தியிருக்கிறான். ஆக, அவனுடைய 'உத்தி'யையும் அறிந்தாயிற்று.

'ஜி' ஸ்டேஷனுக்குத் திரும்பினேன்.

அந்த ஸ்டேஷனுக்கே ஒரு நீதி ஸ்தலத்தின் தோற்றத்தை அளித்து, அவன் உண்மையைக் கக்குமாறு செய்வதெனத் தீர்மானித்தேன். பதிவாகியிருந்த அவனது பழைய குற்றங்களையெல்லாம் ஆழ்ந்த குரலில் நிறுத்தி, நிதானமான முறையில், ஸ்பஷ்டமாகப் படித்தேன். அவையெல்லாம் ஆங்கிலத்திலிருந்தபடியால் ஸ்டேஷன் ரைட்டர் அவற்றைத் தமிழில் மொழிபெயர்த்தார்! தமாஷான பேர்வழி அவர்: எனக்கேற்றவர்: நீதி ஸ்தல துவிபாஷியாகவே ஆகிவிட்டார்.

பெங்களூர் கைப்பெட்டிக் கொள்ளையைப் பற்றிப் படித்தபோது கெம்பா நிலை கொள்ளாமல் ஒரே தவியாகத் தவித்தான்.

அவனைக் கேள்விகள் கேட்க ஆரம்பித்தேன். ஒன்றுக்காவது அவன் பதில் சொல்ல

வில்லை. அப்படியே இடித்த புளியாக மௌனம் சாதித்தான்.

நான் கேள்வி கேட்டு ஓய்ந்தபின் மற்ற அதிகாரிகளை விட்டு விசாரிக்க ஆரம்பித்தேன். இப்போது அவன் புதியதொரு தந்திரத்தைக் கையாண்டான். எங்களை ஒரேயடியாக அச்சுறுத்திவிட்டது அந்தத் தந்திரம். அது தந்திரம் என்றும் நிச்சயமாகச் சொல்ல முடியாததால் அச்சம் கொண்டோம். அதாவது, அவன் தடாலெனக் கீழே விழுந்தான். அவன் கண்கள் செருகிக் கொண்டன. கைகள் விறைத்து நீண்டன; வாய் திறந்து திறந்து மூடிக் கொண்டது; நுரை வேறு வெளிப்பட்டது. காலெல்லாம் ஒரே நடுக்கம். உடலே ஒரு வில்லாக வளைந்து, இழுத்துக் கொண்டது. நான் அதிர்ந்து போனேன்; என் சகாக்களும் அயர்ந்து விட்டனர். அவனுக்கு ஏதாவது நேர்ந்தால்? போலீஸ் ஸ்டேஷனில் சித்திரவதை செய்ததாக அல்லவா ஊரே சொல்ல ஆரம்பித்துவிடும்!

நான் மெதுவாக என்னைச் சுதாரித்துக் கொண்டேன். சட்டவிரோதமாக நான் எதுவும் செய்யவில்லை. அவனைத் தொடக்கூட இல்லை. குற்றம் செய்வதையே தொழிலாகக் கொண்ட ஒருவனை, முன்பு தண்டனைகள் பெற்றவனை, அரசாங்கமே அக்கறை கொண்டுள்ள ஒரு பெரிய திருட்டில் சந்தேகிக்கப் பட்டவனை விசாரணை செய்திருக்கிறேன். அது என் கடமை. அதைச் செய்கிறேன். பின்பு வேறெதற்கெல்லாமோ நான் ஏன் பயப்பட வேண்டும்? இவற்றையெல்லாம் எடுத்துச் சொல்லி என் கூட்டாளிகளுக்கும் தைரிய மூட்டினேன். அவர்கள் கெம்பா மீது குளிர்ந்த நீரைத் தெளித்தார்கள். அவன் கைகளில் சாவிக் கொத்துக்களைத் திணித்தார்கள். வலிப்பு வியாதியாய் இருக்கலாம் என்ற அனுமானத்தில்தான். இழுப்பும் நின்றது. கண்களை மெல்லத் திறந்தான். தண்ணீர் வேண்டிச் சைகை காட்டினான். என் வயிற்றில் பாலை வார்த்தான்.

டாக்டரைக்கொண்டு அவனைப் பரிசோதனை செய்தோம். கெம்பாவுக்கு நோவு, நொடி ஏதுமில்லை என்றும், முன் எப்போதாவது ஒருகால் அவனுக்கு வலிப்பு இருந்திருக்கலாம் என்றும் அவர் சொல்லி விட்டார். எனக்கு ஏக சந்தோஷம்.

தலைமைக் காரியாலயத்துக்கு போன் செய்து மாதவன் நாயர் என்பவரை வரவழைத்து வைத்து விட்டு நான் கிளம்பினேன்.

ஒரு மணிக்குப் பின் 'ஜி' போலீஸ் ஸ்டேஷனுக்கு மந்திரவாதி ஒருவன் வந்தான்.

அவனைக் கெம்பாவுக்கு அறிமுகம் செய்து வைத்தார் மாதவன் நாயர், "மலையாளத்திலிருந்து வந்திருப்பவன்; வலிப்புகளைக் கையில் பிடித்தாற் போல் மந்திரத்தால் குணப் படுத்துபவன்" என்று. மந்திர சக்தியைப் பற்றியெல்லாம் வானளாவ அளந்தார்.

மந்திரவாதி மிகவும் தன்னம்பிக்கை உள்ளவனாக இருந்தான். "நாயர் ஸார், இதோ நான் இவன் வலிப்பை சரி செய்து விடுகிறேன். கற்பூரம், சாம்பிராணி, புஷ்பம், ஜலம் எல்லாம் கொண்டு வாருங்கள். முதலில் பூசை. அப்புறம் மந்திரம் போடுவேன். அதற்குப் பின்னும் இவனுக்கு இசிவு வந்ததென்றால் இவன் பாசாங்கு செய்கிறானென்று தான் அர்த்தம்" என்றான்.

பதினைந்து நிமிஷத்தில் பூஜா திரவியங்களெல்லாம் வந்து சேர்ந்தன. படாடோபமாக நடந்தது பூஜை. அப்புறம் மந்திர உச்சாடனம் முழங்கியது. கால்மணி நேரம் ஸ்டேஷன் அமளிதுமளிப்பட்டது.

கெம்பா சாதாரணமான நிலைக்கு வந்தான். பசிக்கிறது என்று சொல்லித் 'திண்டி'யாக ஆகாரம் பெற்றுப் புசித்தான்.

மந்திரவாதி, "நான் பூசை போடும்போது உனக்குள் புகுந்து உன் ஆவியோடு பேசினேன். அது, நீதான் வில்லியம் பிரபுவின் கைப் பெட்டியைக் கொள்ளையடித்தாய் என்று சொல்லி விட்டது. பக்கவாட்டத்து 'கிளிப்'பை அமுக்கிப் பெட்டியைப் பிளந்தாயாம். அதிலிருந்த வைர நகைகளையும், தங்க ஆபரணங்களையும் உன் காக்கி டிராயர் பாக்கெட்டில் திணித்துக் கொண்டாயாம். கொஞ்சத்தை மட்டும் கையில் வைத்துக் கொண்டு பாக்கியை விற்றும் விட்டாயாமே! சிலவற்றைப் பூமிக்கடியில் வேறு புதைத்து வைத்திருக்கிறாய் அல்லவா?"

கெம்பா பேச்சு மூச்சில்லாமல் எல்லாவற்றையும் ஒத்துக் கொண்டான்.

"பாக்கி விஷயங்களை நீயே சொல்லி விடுகிறாயா? இனி உன்னை எப்படியும் விடப் போவதில்லை" என்றான் மந்திரவாதி; அதாவது மந்திரவாதியாகிய நான்.

ஆமாம், மூடி மறைப்பானேன்? நான்தான் மந்திரவாதியும் ஆகியிருந்தேன். பகுத்தறிவால் ஊகித்தறிந்ததை மந்திரவாதியாயிருந்து ஊர்ஜிதம் செய்துகொண்டேன்.

கெம்பா கௌடா குற்றத்தை ஒப்புக் கொண்டான். எந்த நகைகளைக் கையில் வைத்திருக்கிறான், எவற்றை விற்றுவிட்டான், எவற்றைப் புதைத்திருக்கிறான் எங்கே — என்பதையெல்லாம் வெளியிட்டு விட்டான். எங்கள் கூடவே பல இடங்களுக்கும் வந்து அந்த நகைகளை நாங்கள் கைப்பற்ற உதவியும் செய்தான். ஒரு பொற்கொல்லன், கெம்பாவின் காதலி ஒருத்தி, சேரிப்புறத்தில் ஒரு வீடு, அப்புறம் பூமிக்கடியில் சில பாகங்களிலிருந்து — இப்படியாகப் பல இடங்களிலிருந்தும் வில்லியம் பிரபுவும், சீமாட்டி வில்லியமும் ஆசை ஆசையாகச் சேர்த்த கமலக் கற்களும், மரகதமும், கெம்பும், முத்தும் பதித்த பல நகைகள் வந்து குதித்தன குவிந்தன. வில்லியம் பிரபுவுக்கு மிகவும் சந்தோஷம். பெரிய சன்மானம் ஒன்றை வாரி வழங்கினார். அப்படியும் அவர் உள்ளத்தில் வேதனை இருக்கத்தான் செய்தது. இருக்காதா? அந்த அருமையான அணிகலன்களில் சில சின்னாபின்னமாகி விட்டனவே! இதற்கெல்லாம் காரணமான கெம்பா கௌடா 'கணிசமான' தண்டனை பெற்றான்.

கடைசியாக, என்னைப் பொறுத்த மட்டில்— பெரு மகிழ்ச்சி அடைந்தேன்; மிகவும் நல்ல பெயரையும் பெற்றேன்.

கால்கேட்டின் மூலம் நாள் முழுவதும் வாய் துர்நாற்றத்தை அகற்றி பற்கள் சொத்தையாவதையும் தடுங்கள்!



ஏனெனில், ஒரே தேய்ப்பில் கால்கேட் டெண்டல் கிரீம் துர்நாற்றத்தையும் சொத்தையையும் உண்டாக்கும் கிருமிகளில் 85 சத விகிதத்தை ஒழிக்கிறது.

கால்கேட் உடனடியாக வாய் துர்நாற்றத்தை 10ல் 7 சந்தர்ப்பங்களில் அகற்றுகிறது என்பதையும், உணவு சாப்பிட்டவுடன் கால்கேட்டினால் பற்களைத் துலக்கும் முறையால், பற்பசை வரலாற்றிலேயே இதுவரை கண்டிராத பெருமளவில், ஏராளமானவர்களுக்குச் சொத்தை ஒழிக்கப்படுகிறது என்பதையும் விஞ்ஞான பரிட்சைகள் நிரூபித்தன: இந்த சாதனை கால்கேட் ஒன்றுக்குத்தான் உண்டு!

சாப்பிட்டவுடன் வாயை கொப்பளித்தால் மட்டும் போதாது—சாப்பிட்டவுடன் வழக்கமாக கால்கேட் டெண்டல் கிரீமினால் உங்கள் பற்களை நன்றாகத் துலக்குங்கள். இதன் விசேஷமும், ஊடுருவும் தன்மையுமுள்ள நுரை பற்களின் இடைவெளிகளிலே புகுந்து, சொத்தைக்கும், துர்நாற்றத்துக்கும் காரணமாக இருக்கும் அழுகிய பதார்த்த அணுக்களை அகற்றுகிறது.


கால்கேட்டில் நீடித்திருக்கும் நூதன நறுமணத்திற்காக, குழந்தைகள் அதனாலேயே பல் துலக்க விரும்புகிறார்கள்.

வழக்கமாக கால்கேட் உபயோகித்தால், அது:

- ✔ துர்நாற்றத்தை அகற்றுகிறது
- ✔ சொத்தையைத் தடுக்கிறது
- ✔ பற்களை அதி வெண்மையாக வைத்திருக்கிறது



நீங்கள் பற்பொடியை விரும்பினால், இந்த பலன்கள் அனைத்தையும் கால்கேட் டூத் பவுடர் மூலம் அடையலாம். ஒரு டப்பி பல மாதங்களுக்கு வரும்.



பரிசுத்தத்திற்கும், வாயில் நறுமணம் கமழவும், வெண்ணிற பற்களைப் பெறவும் உலகத்திலேயே பெரும்பாலான மக்கள் மற்றெல்லா பற்பசைகளையும் விட கால்கேட்டையே பெரிதும் விரும்புகிறார்கள்.

DCG. 73QT-TAM.

கந்தருவக் கன்னி

ரவீந்திரநாத் டாகுர்

[ஒரு முதுபுலவரும் முற்றாத இளம் பாவை ஒருத்தியும் வேடிக்கையாக உரையாடிக் கொண்டே ஏககோத்துச் செல்லும் ஒரு விந்தைக் கற்பனைச் சோலை எனலாம் 'கல்ப ஸல்ப' என்ற நூலை. ரவீந்திரர் உயிருடன் இருக்கையில் வெளிவந்த கடைசி நூல் இதுவேயாகும். இதில் வரும் சிறுமி குஸுமி வேறு யாருமில்லை ; இவ்வுலகத்துக் குட்டிப் பேத்தியாரே. டாகுர் தாத்தாவே அந்த 'தாதாமஷாய்'. சிறுவர்களுக்கு இது சுவை மிகு கதை விருந்தாவது போல், முதியவருக்கும் இதில் சிந்தனைக்கான உணவு நிரம்ப உண்டு.]

குஸுமி கேட்டாள் : "தாத்தா! நீ சொல்வதெல்லாம் கட்டுக் கதையாகவே இருக்கிறது. உண்மைக் கதை ஒன்று சொல்லேன்."

நான் சொன்னேன் : "உலகத்திலே இரண்டு தினுசு உண்டு. உண்மையாக நடப்பது ஒன்று ; இன்னொன்று மிக உண்மையானது. என்னுடைய ஜோலியெல்லாம் மிக உண்மையானது பற்றியே."

"தாத்தா ! நீ சொல்வது யாருக்குமே புரிகிறதில்லையாமே ?"

"உண்மையே. புரிந்து கொள்ளாதது அவர்கள் தவறுதானே ?"

"அதிருக்கட்டும், இப்போது அதி உண்மையானதொன்று உண்டென்றாயே, அதைத் தெளிவாகச் சொல்லு."


"இதோ நீ இருக்கிறாய் ; குஸுமி யாரென்பது எல்லோருக்கும் தெரியும். இது உண்மையானது. இதற்கு எத்தனையோ அத்தாட்சிகள் இருக்கின்றன. ஆனால் நீ ஒரு கந்தருவ உலகத்து அழகுப் பாவை என்பது என் ஒருத்தனுக்கே தெரியும். இதுதான் மிக உண்மையானது."

குஸுமிக்குக் களிப்பு தாங்க முடியவில்லை.

"எப்படித் தாத்தா இதைக் கண்டு பிடித்தே ?" என்றாள்.

"சொல்கிறேன் கேளு ; அப்போது உனக்குப் பள்ளிக்கூடத்திலே பரீட்சை. மெத்தென்ற பஞ்சணையில் உட்கார்ந்தபடி பூகோள பாடம் உருப் போட்டுக் கொண்டிருந்தாய். உன் தலை தொப்பென்று தலையணைமேல் விழுவது உனக்கே தெரியவில்லை. தூங்கிப் போய்விட்டாய். அன்று இரவு பௌர்ணமியானதால் பால் போல நிலா. ஜன்னல் வழியாக அந்த நிலா உள்ளே நுழைந்து படுக்கை மீது படுத்திருக்கும் உன் முகத்தில் படிந்தது; உன் ஊதா மேலாடைமீது ஊர்ந்தது. காணாமற்போன ஒரு கந்தருவியைத் தேடிக்கொண்டு ஒரு தூதன் தென்றல் காற்றோடு வந்தான். உன்னையே அவன் ஏற இறங்கப் பார்த்தான், நீதானோ அந்தக் காணாமற்போன கந்தருவ கன்னிகையென்று. நீ இந்த உலகத்து கந்தருவியோ என்று அவனுக்குச் சந்தேகம். உன்னை அவனால் தன் மெல்லிய இறகுமீது ஏந்திச் செல்ல முடியுமா? நீ பூலோகத்துப்பாவையானதால் கனமாக இருப்பாய். சந்தா மாமாவும் உயரக் கிளம்பி விட்டான். உன் அறையில் நிழல் படர்ந்தது. அந்த கந்தருவ உலகத்துத் தூதன் அந்த நிழலில் தலையை அசைத்துப் போய் விட்டான். அப்போதே எனக்குத் தெரிந்து விட்டது, அந்த கந்தருவி நீ என்ற ரகசியம். இந்த மண் உலகில் நீ வந்தபோது உன் கால் இங்கே சிக்கிக் கொண்டுவிட்டது. அதனால்தான் உன்னால் போக முடியவில்லை."

குஸுமி கேட்டாள் : "அதிருக் கட்டும், தாத்தா ; அந்த கந்தருவ உலகிலிருந்து இங்கே எப்படி நான் வந்தேன்?"



"அதுவா? ஒரு நாள் நீ பாரிஜாதப் பூஞ்சோலையிலே, வண்ணத்துப் பூச்சி மீது சவாரி செய்து கொண்டிருந்தாய். தொலைவில் தொடுவானில் ஓர் ஓடம் கரை தட்டியதை நீ கவனித்தாய். வெளுப்பான மேக ஓடம் அது ; இளம் காற்று சேலையை ஊதவே அது மெல்ல

அசைந்தது. உனக்கு என்ன தோன்றியதோ, சட்டென அந்த ஓடத்தில் ஏறிக் கொண்டாய். அதுவும் மெல்ல நகர்ந்து நகர்ந்து, பார்த்துக் கொண்டிருக்கையில், இந்தப் பூமியின் கரை அருகில் வந்து நின்றது. அப்போது உன் அம்மா, அங்கே வந்து உன்னை எடுத்துக்கொண்டுபோனாள்.''

இதைக் கேட்டதும் குஸமிக்குச் சந்தோஷம் கரை புரண்டது.

'' தாத்தா! இது உண்மையாய் நடந்ததா ?'' என்றாள்.

'' இதோ பார், உண்மையை நான் நம்புகிற ஆளல்ல - என்னுடைய ஜோலி மிக உண்மையான விஷயத்தைப் பற்றித்தான்.''

'' தாத்தா, நான் அந்த கந்தருவ உலகத்துக்குத் திரும்பிப் போக முடியாதா?...?''

'' ஏன் முடியாது? ஆனால்-''

'' சொல்லு, தாத்தா-''

'' உன் கனவு ஓடம் மறுபடியும் ஒரு நாள் வரும். அதன் மீது கந்தருவ உலகின் காற்று வீசினால் தான் நீ போக முடியும்.''



"சரி, அந்த ஓடம் வருகிறது. அந்தக் காற்றும் வீசுகிறது....என்று வைத்துக் கொள்....அப்புறம் எந்த வழியாய் எந்த இடத்துக்குக் கொண்டு விடும் என்னை? அது ரொம்பத் தூரமா?"

"அப்படி ஒன்றுமில்லை...நீ எனக்கு எவ்வளவு கிட்ட இருக்கிறாயோ, அவ்வளவு கிட்டத்தில். இந்தப் பஞ்சணையிலிருந்து நீ நகரவே தேவையில்லை. இதே போல் ஒரு நாள் ஜன்னல் வழியே நிலா உள்ளே எட்டிப் பார்க்கும். அப்போது வெளியே கவனித்துப் பார். அந்த நிலா வெள்ளத்திலே ஒரு மேக ஓடம் அசைந்து ஆடி வரும். நீ இந்தப் பூலோக அழகியானதால் அந்த ஓடம் உனக்குப் போதாது. உன் உடம்பு படுக்கையிலேயே இருக்கும். உன் உள்ளம் அதில் ஏறிக் கொள்ளும். உண்மையான குஸுமி படுக்கையில் படுத்திருப்பாள்; மிக உண்மையான குஸுமி அந்தக் கனவு ஓடத்தில் ஏறிச் செல்வாள். அவளை யாராலும் பிடிக்கவே முடியாது."

"ஆமாம் தாத்தா, பௌர்ணமி நிலா வரட்டும். கண் கொட்டாமல் வெளியே கவனிப்பேன். அப்போது நீயும் என் கையைப் பிடித்துக் கொண்டு என்னுடன் வருவாய் இல்லையா?"

"நான் இங்கே உட்கார்ந்த இடத்தில் இருந்தபடியே உனக்கு வழி காட்டுவேன். எனக்கு அந்தச் சாமர்த்தியம் உண்டு. ஏனென்றால், என் ஜோலியெல்லாம் மிக உண்மையான விஷயங்களைப் பற்றியது அல்லவா!"

★

"அது சரி தாத்தா, மிக உண்மையான சமாசாரம் கந்தருவ உலகத்தில்தான் நடக்குமா?" என்றாள் குஸுமி.

"அப்படி யெல்லாம் ஒன்றுமில்லை. இந்தப் பூலோகத்திலும் நிறைய நடக்கிறது. கவனித்துப் பார்த்தால் தெரியும். அதற்கெனத் தனிக் கண்ணுக்கு வேண்டும்" என்றேன் நான்.

"அது உனக்கு இருக்கிறதா?"

"யார் கண்ணுக்கும் தெரியாத விஷயமே என் கண்ணில் பட்டுவிடுகிறது. இதோ நீ பூகோள பாடம் படிக்கிறாய்; அப்போது நான் படித்த பூகோள பாடம் நினைவுக்கு வருகிறது. இயாங்ஸிகியாங் நதி என் கண் முன்னால் வந்து நிற்கிறது. ஆனால் அதை நம்பிப் பரீட்சையில் 'மார்க்' வாங்கமுடியாது. இப்போதுகூட என் கண்ணெதிரே தெளிவாகப் பார்க்கிறேன், பட்டுப் பொதிகளைச் சுமந்து கொண்டு சாரி சாரியாக ஒட்டகைகள் செல்கின்றன. அதில் ஓர் ஒட்டகத்தின் மீது நான் ஏறிக்கொண்டிருக்கிறேன்...."

"என்ன வேடிக்கையாய் இருக்கு, நீ ஒட்டகத்தின்மீது ஏறிச் சவாரி செய்ததாக நான் கேள்விப்படவே இல்லையே?"

"இதோ பாரம்மா, இந்தப் பெரிய கேள்வியெல்லாம் போடாதே."

"சரி, சரி, அப்புறம் என்ன நடந்தது, சொல்லு. அந்த ஒட்டகம் உனக்கு எங்கே கிடைத்தது?"

"இதோ மறுபடியும் என்னைக் கிளறுகிறாயே! அது எனக்குக் கிடைத்ததோ கிடைக்கவில்லையோ, நான் அதன்மீது ஏறிக் கொண்டேன். நான் எந்த ஊருக்குப் போனேனோ — அல்லது போகவில்லையோ—என் பிரயாணத்துக்குத் தடை ஏற்படவே இல்லை. இதுதான் எனக்குள்ள குணம்."

"அப்புறம் என்ன நடந்தது?"

"அப்புறம்.....எத்தனையோ நகரங்களைத் தாண்டி புகுங்; அப்புறம் ஹாங்சாவ்; அதற்கப்பால் கங்குங். பெரிய பாலைவனத்தினுள் செல்லவேண்டியிருந்தது. ராத்திரி ஒரே இருட்டு நட்சத்திரத்தைக் கவனித்துக் கொண்டே சென்றேன். உஸ்குங் மலை குறுக்கிட்டது; அதையும் கடந்தேன். பேர்ச்சங்காடு வந்தது; அங்கு திராட்சைத் தோட்டங்கள் ஓரமே என்னுடைய வழி சென்றது. ஊசி இலைக்காட்டு நிழல் வழியே சில நாட்கள். ....இப்படிப் போகச்சே கொள்ளைக்காரரிடம் சிக்கித் தப்பினேன்; பாய வரும் செங்கரடி வாயில் விழாமல்பிழைத்துப்போனேன்."

"அது சரி, இத்தனை இடங்கள் சுற்றிப் பார்த்திருக்கிறாயே. உனக்கு அவ்வளவு சமயம் எப்படிக் கிடைத்தது?"

"என்னுடைய வகுப்பில் பிள்ளைகள் பரீட்சைக்கு எழுதும்போது வேண சமயம் இருந்தது."

"நீ பரீட்சையில் எப்படி 'பாஸ்' பண்ணினாய்?"

"அது ரொம்பக் கஷ்டமா என்ன, நான் 'பாஸ்' பண்ணினால்தானே?"

"சரி, அப்புறம் நடந்ததைச் சொல்லு?"

"சில நாட்களுக்கு முன்பு நான் அரபுக் கதையில் அந்தச் சீன தேசத்து இளவரசியைப் பற்றிப் படித்தேன். ரொம்ப ரொம்ப அழகி அவள். ஆச்சரியம் என்னவென்றால், அந்த இளவரசியை நான் சந்தித்தேன். அந்தப் புசாவோ ஆற்றங்கரைப் படித்துறையில் நாங்கள் ஒருவரையொருவர் கண்டோம். வெள்ளைக் கற்கள் பாவிய படிகள்; மேலே நீலக்கல்லாலான மண்டபம். இரண்டு பக்கமும் இரு சப்பக மரங்கள். அவற்றின் கீழ் பாறைச் சிங்கத்தின் சிலைகள் இரண்டு. பக்கத்தில் தங்கக் கிண்ணத்திலிருந்து வளைந்து வளைந்து மெல்லிய கீற்றாக எழும் தூபப் புகை. தோழி ஒருத்தி விசினாள். ஒருத்தி சாமரம் போட்டாள். ஒருத்தி இளவரசியின் கொண்டையை வாரி முடித்தாள். நான் அவள் முன்னால் எப்படியோ போய்

நின்றேன். அப்போது இளவரசி மாதுளங் கனியின் செந்நிற மணிகளைத் தன் வெண்ணிற மயில் உண்பதற்கு இறைத்தாள். என்னைக் கண்டு திடுக்கிட்டுக் கேட்டாள்: 'நீ யாரோ' என்று.

"அதே கணம் சட்டென்று எனக்கு நினைவு வந்தது. நான் வங்க நாட்டு அரசிளங்குமரனென்றேன்."

"இதென்ன வேடிக்கை? நீதான்—"

"அப்போதே சொன்னேன், கேள்வி போடக் கூடாதென்று. நான் சீனவுக்குச் சென்றபோது நான் வங்க நாட்டு அரச மகன்தானே! அப்படிச் சொல்லவேதான் என் உயிர் தப்பியது. இராதுபோனால் என்னை என்ன செய்திருப்பாளோ அவள்! பொற்குவளையில் எனக்குத் தேநீர் பருகத் தந்தாள். சந்திர மல்லிகையின் மணம் வீசும் அந்தத் தேநீர்தான் எப்படி இருந்தது போ..."

"அப்படியானால் அவளை நீ கல்யாணம் பண்ணிக்கொண்டாயா?"

"இது ரொம்ப ரகசியமான விஷயம். இதுவரைக்கும் நான் யாரிடமும் வெளியிடவில்லை."

குஸமி கைகொட்டி, "மறைக்கிறாயே, தாத்தா! அவளை நீ கல்யாணம் பண்ணிக் கொண்டிருக்கிறாய். ரொம்பத் தடபுடலாக நடந்திருக்கும்" என்றாள்.

"பார்த்தேன், அவளைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளாது போனால் முடியாது போல் தோன்றியது. கடைசியில் மணந்து கொண்டேன். ஹாங்சாவ் ராஜ்யத்தில் பாதியுடன் ஆங்சனி தேவியும் எனக்குக் கிடைத்தாள். இது ஆயிற்று...."

"அப்புறம் என்ன? மறுபடியும் ஒட்டகத்தின்மீது ஏறிக் கொண்டிருப்பாய்."

"இராதுபோனால் இங்கே திரும்பி வந்து தாத்தாவின் இடத்தைப் பிடித்திருக்க முடியுமா? ஆமாம், ஒட்டகத்தின்மீது ஏறினேன். அந்த ஒட்டகமா, அது எந்த இடத்துக்கும் போகாத பிராணியாச்சே. என் தலைக்கு மேலே புஸாங் பறவை ஒன்று பாடிக்கொண்டே சென்றது."

"புஸாங் பறவை? இது எங்கேயிருந்து முளைத்தது?"

"எங்கேயிருந்துமில்லை. ஆனால் அதன் வால் நீலவண்ணமாக இருக்கும். அதன் இறகு மஞ்சள் நிறமானது. அதன் கழுத்தண்டை பழுப்புக்கோடு உண்டு. அவை கூட்டம் கூட்டமாகப் பறந்து வந்து ஹசாங் மரத்தில் உட்கார்ந்தன."

"ஹசாங் என்று ஒரு மரத்தின் பெயரைக் கேள்விப்பட்டதில்லையே?"

"எனக்குந்தான் தெரியாது. உன்னோடு உரையாடும்போது இந்த விந்தைப் பெயர் என் ஞாபகத்துக்கு வரவே, சொன்னேன். முன் எச்சரிக்கையாக இருப்பது என் வழக்கம் அல்லவே? அவ்வப்போது மனத்துள் தோன்றுவதைச் சொல்லி விடுகிறேன். அந்தப் புஸாங் பறவை கடலுக்கு அப்பால் பறந்து போயிற்று. அதைப்பற்றி அப்புறம் செய்தியே இல்லை."

"அது சரி, கல்யாணம் பண்ணிக் கொண்டாயே, அந்த இளவரசி என்னவானாள்....?"

"ஒரு தரந்தான் சொன்னேனே...... என்னைக் கிளறிக் கிளறிக் கேட்காதே என்று. நான் இந்தமாதிரி கேள்விகளுக்குப் பதில் கூற மாட்டேன். அத்துடன் இதைப்பற்றி நீ கவலைப்பட வேண்டிய அவசியமும் இல்லை. எனக்கு மணமாகிய சமயம் நீ பிறக்கவேயில்லை. ஞாபகத்தில் வைத்துக் கொள்."

த. நா. கு.

ஸ்ரீமதி பாலசரஸ்வதி தம் குடும்பத்தாரோடு சென்ற வாரம் ஜப்பானுக்குப் பரதக் கலையின் மேன்மையை விளக்கச் சென்றிருக்கிறார். அயல்நாடு செல்லும் கலைத் தூதரை, இசை வல்லுநர்களும், ஸ்ரீமதி தனம்மாள் குடும்பத்தினரும், அவரது மாணவிகளும் சென்னை விமான நிலையத்தில் மகிழ்ச்சியோடு மாலைகள் அணிவித்து வழி அனுப்பி வைத்தனர்.





மைத்ரேயி கண்ட மகாகவி



[1938—1940ம் ஆண்டுகளில் குருதேவர் ரவிந்திரர் இமயமலைச் சாரலில் காலிம்பாங் என்ற இடத்துக்கு அண்மையிலுள்ள 'மங்பூ'வில், கவயித்ரியான மைத்ரேயி தேவியின் இல்லத்தில் உடல் ஆரோக்கியம் பெறுவதற்குத் தங்கியிருந்த சமயம் அவ்வம்மையார் ரவீந்திரரைப் பற்றி அரிய செய்திகளை 'மங்பூதே ரவீந்த்ரநாத்' என்ற தம் நூலில் திரட்டித் தந்துள்ளார். கவியரசரின் பல உருவங்களை நாம் அந்நூல் வாயிலாகப் பார்க்கலாம்.]

1. கவியின் பூம்பாயல்

காலிம்பாங்கில் கவியரசர் இருந்தார். அவருடைய பிறந்த நாளான 'பஞ்சிஷே வைசாக்' (வைகாசி 25) தினத்தை விமரிசையாகக் கொண்டாட ஏற்பாடுகளாகியிருந்தன. அன்று 'ஜன்ம தின' என்ற நீண்ட கவிதையை எழுதி எங்களுக்குப் படித்துக் காட்டினார். காலிம்பாங் வாசிகள் ஏராளமான வாசனை மலர்களையும், வண்ண மலர்களையும் கவிஞருக்குக் காணிக்கையாகக் கொண்டு வந்திருந்தனர். சித்திராவும் நந்தினியும் அவருடைய படுக்கை அறையையும் கட்டிலையும் மலர்களால் அழகாகச் சிங்காரித்திருந்தனர்.



கவியரசரிடம் வந்து, "தாத்தா, வந்து பாருங்கள், உங்களுடைய அறையை, எப்படி விசித்திரமாக அலங்கரித்திருக்கிறோம்!" என்றனர்.

வந்து பார்த்தார். "என்ன காரியம் இது? மனத்துக்கு வேதனை தரும் பழைய நினைவுகளைக் கிளறி விடுகிறது இது. துணைவி இராத பூப்பாயல் அல்லவா?" என்றார்.

2. மணமகன் ரவீந்திரர்

ஒரு சமயம் நாங்கள் அவரைச் சுற்றி உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோம். "உங்களுக்கு விவாகம் நடந்த கதையைக் கேட்க ஆவலாக இருக்கிறோம்" என்றோம்.



"கதைக்கு அதில் ஒன்றுமில்லை. என்னுடைய பதனிமார் தொந்தரவு படுத்தவே, 'உங்கள் இஷ்டம்போல் எந்தப்பெண்ணை வேண்டுமானாலும் முடியுங்கள்' என்றேன். பெண்ணைப் பார்க்க அவர்களே யசோருக்குச் சென்றனர். வெளியூருக்கு வர முடியாது, கல்கத்தாவில் என் இடத்திலேயே மணச் சடங்கு நடக்க வேண்டுமென்று சொல்லி விட்டேன். அதேபோல் ஆடம்பரமில்லாமல் விவாகம் நடந்தது."

"மணமகள் வீட்டில் தானே நடக்க வேண்டும்? ஏன் இப்படி?" என்றேன் நான்.

"என் சௌரவத்துக்கு அது குறைவல்லவா?" என்றார் கவி.

"என்ன பிகு அப்பா உங்களுக்கு!" என்றேன்.

"இந்த விவாகப் பேச்சு வரவே இன்னொரு விஷயம் ஞாபகம் வருகிறது. வங்க நாட்டுக்கு வெளியே வேறு மாகாணத்திலிருந்து எனக்கு ஓர் இடம் வந்தது. பெரிய பணக்காரனின் ஒரே மகள். ஏராள சொத்துக்கு—எட்டு லட்சத்துக்கு—உரிமைக்காரி. அவளைப் பார்க்க நான் சில நண்பர்களுடன் சென்றேன். பெரிய மாளிகை; கூடத்தில் இரு பெண்கள் உட்கார்ந்திருந்தனர். ஒருத்தி குள்ளக் குறுக இருந்தாள். மற்றவள் அழகி, கலகலப்பாகவே இருந்தாள். பியானோ வாசித்துக்காட்டினாள்; இசை பற்றி ஆலோசனைகள் நடத்தினாள். எனக்கு மிகவும் பிடித்து விட்டது அவளை. அதே சமயம் நடுவயதினரான அந்தப் பணக்காரர் உள்ளே வந்து, அழகான பெண்ணைக் காட்டி 'Here is my wife' (இவள் என் மனைவி) என்றும், குரூபியானவளை, 'Here is my daughter' (இவள் என் மகள்) என்றும் அறிமுகம் செய்து வைத்தார். எனக்

குத் திக்கென்றது. பெண் சரிப்படவில்லை என்று கூறித் திரும்பி விட்டோம்.

'அப்புறம் எனக்குப் பல சமயம் தோன்றியது உண்டு: 'அவன் குரூபியானால்தான் என்ன? நறுக்கென எட்டு லட்சம் வருகிறதே—விசுவ பாரதியை நடத்த இப்படிப் பணத்துக்குத் திண்டாடாமல் இருக்கலாம் அல்லவா!'' என்றார்.

3. தளிரினும் மென்மை உள்ளம்

என் மகள் இளம் தளிர்களைப் பிய்த்து உள்ளே எடுத்து வருவதைப் பார்த்துக் கவியரசர்: ''இதென்னம்மா! உனக்குக் கொஞ்சம்கூட புத்தி இல்லை. இலைகளை இப்படிக் கிள்ளினால் மரத்துக்கு நோவாதா?'' என்றார்.

சிறுமி, ''நிஜமாகவா தாத்தா?'' என்றாள்.

அப்போது அவர், ''எனக்கு வயது பத்து அல்லது பன்னிரண்டு இருக்கும். யாராவது செடியிலுள்ள தளிர்களைக் கிள்ளிப் பறிப்பதைப் பார்த்தால் என் மனம் வேதனைப்படும். வழியே செல்வோர்சிலர், காரணமின்றி மரஞ் செடிகளின் இலைகளைக் கிள்ளி நசுக்கிப் போடுவார்கள். இது எனக்குச் சகிக்காது. அதே போல் புழு, பூச்சி, நாய் இவற்றை இம்சை செய்தாலும் எனக்கு ஆத்திரம் வரும். வாயில்லா ஜீவன்கள். அவை படும் துன்பம் ஏன் தெரியப் போகிறது? என்னுடைய பெரியண்ணாவின் பேரன் த்விபு ஒரு சமயம் நாயொன்றை அடித்துத் துன்புறுத்தினான். நான் அவனைத் தடுக்கக் கையைப் பிடித்து இழுத்தேன். உடனேயே அழுதுகொண்டே அண்ணாவிடம் வத்தி வைத்தான். அவர் என்னை அழைத்து, 'ஏன் அவனை அடித்தாய்? இந்த மூலையிலேயே நீ நிற்க வேண்டும்' என்று தண்டனை விட்டார். என்ன செய்வது? தண்டனையை ஏற்றேன்'' என்றார்.




4. நகைக் கள்வன்

என் தாயார் வீட்டில் களவு போய் விட்டது. என்னுடைய நகைகள் அத்தனையையும் கள்வன் கொண்டு போனான். இது நடந்த புதிதில் நான் சாந்திநிகேதனம் சென்றிருந்தேன். களவு போன செய்தியைக் கவியரசருக்கு யாரோ தெரிவித்து விட்டார்கள். என்னைப் பார்த்ததும் விசாரித்தார்.

''நகைகள் முக்கியமா வாழ்க்கைக்கு? போகட்டுமே'' என்றேன் நான்.

''ஓ, கவி நயத்துடன் பேசுகிறாயா? போயும் போயும் இடம் பார்த்து நுழைந்தானே திருடன், ஒரு பண்டிதர் வீட்டில்? வேறு இடமாக இருந்தால் அவனைத் தீர்த்துக் கட்டியிருப்பார்கள்'' என்றார் கவி.



''அப்பா என்ன செய்வார்? என் மடத்தனம். நான் அவற்றை அங்கே வைத்துவிட்டுப் போயிருக்கக் கூடாது. இதில் ஒரு விசேஷம் இருக்கிறது சொல்லுகிறேன். உங்களுக்கு நான் மங்களவில் போட்ட அந்தப் பொன்னாரம் மட்டும் தக்கியது'' என்றேன்.

''எப்படி, எப்படி? கள்ளனின் கண்ணில் அது படவில்லையா?'' என்றார்.

''நல்ல காலம். அதை நான் மாமியார் வீட்டிலேயே வைத்திருந்தேன்''

''நீயே கஞ்சத்தனமுள்ளவள். அத்தனை நகைகளையும் எனக்கே கொடுத்திருந்தால் அந்த ஆரத்தைப் போல் அவை கள்ளன் கையில் சிக்காமல் தப்பியிருக்குமல்லவா?''

''ஆமாம் 'க்ருபண' (கஞ்சன்) என்ற உங்கள் கவிதை எனக்கு ஞாபகம் வருகிறது. அதிலே ஒரு வரி: 'எனக்கென்று வைத்துக் கொள்ளாமல், அத்தனையும் நான் உங்களுக்குத் தராமல் போனேனே!'

5. தேகமும் ஆத்மாவும்

ஏதோ பேச்சுவாக்கில் தேனைப் பற்றிய சமாசாரம் வந்தது. அப்போது தம்மை ஒரு சமயம் தேள் கொட்டியதையும், அதனால் தாம் பட்ட பாட்டையும் விவரித்தார் கவியரசர்:

''ஒரு சமயம் கல்கத்தாவில் நான் இரவு தங்க வேண்டியிருந்தது. வெகு நாட்கள் யாருமே உபயோகிக்காத அறையை ஒழித்துத் தந்தனர். அதில் படுத்தேன். இரவு வெகு நேரமாகியிருக்கும். என் கால் விரலை ஏதோ கவ்விய மாதிரி இருந்தது. உடனேயே சுரீரென்று என் மண்டைக்கேறியது ஒரு வேதனை. செந்தேள் கொட்டி விட்டது. என்ன வலி, போ - உடம்பெல்லாம் குடைச்சல், விஷ ஜ்வாலையால். அந்த நள்ளிரவில் கவி யாரை எழுப்புவது? சட்டென்று நான் சிந்திக்கலானேன்: 'தேள் கொட்டியது, என் உடலிலா, அல்லது என் உள்ளத்திலா? இந்தத் தேகம் ரவீந்திரனா, அல்லது இந்த ஆத்மாவா? என்னையே தேகத்தை விட்டுப் பிரித்து நோக்கினேன். சட்டென்று விஷ எரிச்சல் எல்லாம் எங்கோ மறைந்தன. காலையில் எழுந்தபோது, காலில் கடியின் அடையாளம் கூட இல்லை. மனிதன் இந்த மனநிலைக்கு வரும் போது உலகத்துத் துன்பங்கள் அவன் வரைக்கும் அற்பமே'' என்றார்.

(காலஞ் சென்ற டாக்டர் ஸுரேந்திரநாத் தாஸ் குப்தா, வேதாந்தி, கவிஞர், ஸம்ஸ்கிருத பண்டிதர். இவருடைய மகளே ஸ்ரீமதி மைத்ரேயி தேவி. இறுதி நாட்களில் கவியரசருடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்.) –த. நா. கு.



புதுமை பெறுக! இதம் பெறுக!
நளினமாய் இருங்கள்! நாள் முழுதும்!
மணமுள்ள சார்மிஸ் டால்கம் பௌடர் உபயோகித்தபின் நீங்கள் பெறும் உணர்ச்சிகள் இவை. சார்மிஸ் குளுமையும் புத்துணர்ச்சியும் அளிக்கிறது... உன்னத மனோரம்மிய மணம் கொண்டது.
சார்மிஸ்
உன்னத, மனோரம்மிய மணத்துடன் கூடிய டால்கம் பௌடர்!
CHARMIS Talc



அக்கரைச் சீமையில் ஆறு மாதங்கள்

சோமு

23. ஊர்திகள் உலகம்!

பென்னி என்ற செய்தி இலாகா அதிகாரி பர்மிங்ஹம் வட்டாரத்தில் பல இடங்களுக்கும் என்னை அழைத்துப் போக ஆரம்பித்ததிலிருந்து, அவருக்கும் எனக்கும் நெருங்கிய பழக்கம் உண்டாயிற்று.

இங்கிலாந்துக்குச் சென்றதிலிருந்து ஓய்வு கிடைத்த போதெல்லாம் பல முக்கிய ஊர்களைச் சுற்றிப் பார்ப்பதையே நோக்கமாகக் கொண்டிருந்த எனக்கு ஏற்கனவே சில செய்தி அதிகாரிகளின் தொடர்பு கிட்டியிருந்தது. இவர்களில் சிலர் இந்திய நாட்டினிடத்திலும் நம்முடைய கலைகளிலும் மெய்யான ஆர்வம் கொண்டிருந்ததைக் கண்டு நான் மகிழ்ச்சி யடைந்ததுண்டு. என்றாலும் பென்னி அவர்களைச் சந்தித்துப் பழகியதிலே ஏற்பட்ட மகிழ்ச்சி அலாதியானது. அவரைச் சந்தித்த வினாடியிலிருந்து எங்கள் இருவருக்குமே ஒரு நட்புணர்ச்சி உண்டாகி விட்டது. எங்கு சென்றாலும் அவரே காரை ஓட்டிக் கொண்டு வந்ததால் வழி நெடுகப் பல காட்சிகளையும் பற்றிப் பேசப் பேச இந்த நட்புணர்ச்சி அதிகரித்தது. ஒருவருடைய உள்ளத்தின் தன்மைகளை மற்றவர் நன்றாகப் புரிந்துகொள்ளக் கூடிய விதத்தில் இரண்டு மூன்று நாட்களுக்குள் எங்களுடைய நட்பு நன்றாகச் செம்மையடைந்து விட்டது. எனவே ஒருநாள் அவர் பர்மிங்ஹம் நகரின் எல்லை வட்டத்திலே உள்ள முக்கியமான மோட்டார்த் தொழிற்சாலைகள் சிலவற்றைப் பார்த்து வரலாம் என்று என்னிடம் சொன்னபோது எனக்குக் கொஞ்சம் திருப்தியாகவே இருந்தது. அதே சமயம் மோட்டார்த் தொழிற் சாலையில் நம்மைக் கவரக் கூடிய காட்சிகள் என்ன இருந்து விடக்கூடும் என்ற யோசனையும் மனத்தில் இருந்தது!

''பல தொழிற்சாலைகளை நீங்கள் இந்த நாட்டிலே பார்த்திருக்கிறீர்கள். என்றாலும் இந்த மோட்டார்த் தொழிற்சாலைகளைப் பார்த்தால் நீங்கள் இதுவரை இல்லாத விதத்தில் மிகவும் அனுபவிப்பீர்கள்!'' என்று சொன்னார் பென்னி.

''ஏற்கெனவே இரண்டொரு இயந்திரச் சாலைகளைப் பார்த்து மலைத்துப் போயிருக்கிறேன்'' என்றேன்.

''அவற்றின் பிரும்மாண்டமான இயக்கத்தைப் பார்த்து மலைப்பது மட்டுமில்லை. இத்தொழிற்சாலைகளில் ஒரு கலைமுறையையே நீங்கள் காண்பீர்கள். ஒருவித உயிரியக்கமே இங்கு நடைபெறுகிறது!'' என்றார் நண்பர்.


இரண்டு பெரிய மோட்டார்த் தொழிற்சாலைகளைக் காண்பதற்காகப் புறப்பட்டோம். வழக்கம்போல் மிஸ்டர் பென்னி இந்தத் தொழிற்சாலையின் வரவேற்பு அதிகாரிகளிடம் என்னை அறிமுகம் செய்து விட்டு, அன்று மாலை மீண்டும் வந்து என்னை அழைத்துப் போவதாகக் கூறிப் பர்மிங்ஹம் சென்று விட்டார்!

ஆஸ்டின் தொழிற்சாலைக்குள்ளே அடியெடுத்து வைத்தேன்.

ஒரு கார் தனது கையையும் காலையும் அசைத்துக் கொண்டு உருவாகி வருவது என்றால், அது ஒரு மகத்தான பிரசவம்! ஒரு குழந்தை பிறப்பது போன்ற தெய்வீகமான ஜனனம் அது!

எத்தனையோ பிரார்த்தனைகளும், வைத்தியக் கண்காணிப்பும், உடல் இதய உறவுகளும் சேர்ந்து ஒரு குழந்தையின் பிறப்பை ஆர்வத்தோடு பாதுகாக்கின்றன. ஒரு காரின் படைப்பும் அப்படித்தான்!

குழந்தை பிறக்கிறது என்றால், பிறவியிலேயே மூக்கும் விழியும் கைகால்களும் கொண்டு பூரணமான வடிவத்திலே அது உலகுக்கு வருகிறது. ஆனால் ஒரு கார் அப்படியில்லை! இது மனிதனுடைய படைப்பு. பல ஆயிரம் மனிதக் கைகள் பல்லாயிரம்




உறுப்புக்கள் இணைக்கும் கூடம்

உறுப்புக்களை ஒவ்வொன்றாக இணைத்து ஒரு பெரிய உருவத்தைச் செய்து முடித்து அதனுள் ''உயிரியக்கத்தை''ச் செலுத்தவேண்டியிருக்கிறது! எவ்வளவு திறமையோடு இந்தப் படைப்பைச் செய்தாலும் மனித முயற்சிதானே. எனவே எத்தனையோ வரையறைகளும் குறைபாடுகளும், எத்தனையோ சிக்கல்களும் உண்டு! ஒரு காரைப் படைக்கின்ற தொழிலாளர்கள் அனைவருடைய இதயங்களும், பதினாயிரக்கணக்கான இதயங்களும் ஒன்றுசேர்ந்து முனைந்து, ஒரே இலட்சியத்தோடு ஈடுபட்டு, நூற்றுக்கணக்கான இராட்சச இயந்திரங்களைக் கொண்டு ஒரு காரைப் படைத்து வெளியே அனுப்ப வேண்டியிருக்கிறது! 'பேபி ஆஸ்டின்' என்ற ஒரு குழந்தை பிறப்பதற்கு, அடாடா, எத்தனை ஆயிரம் சக்கரங்கள் சுழல வேண்டியிருக்கிறது: எத்தனை பெரிய பூத இயந்திரங்கள் நெருப்பிலே நின்று தவம் செய்கின்றன! இந்தக் காட்சிகளையெல்லாம் பார்த்தபோது பிரும்மதேவனுடைய படைப்புத் தொழிற்சாலையைப் பற்றிய பல புராண வர்ணனைகள் என் மனக் கண்ணிலே சுழன்றன!

''மதிப்பு நிரம்பிய எந்தப் பொருளுமே கனவு காணும் இயல்புள்ள ஒரு மனிதனுடைய சொப்பனத்திலிருந்துதான் பிறக்கிறது!'' என்ற ஒரு வாக்கியத்தைப் படித்ததும் மோட்டார்த் தொழிற்சாலையில் இருக்கிறோமா, அல்லது ஒரு கிறிஸ்து கோயிலில் இருக்கிறோமா என்று பிரமித்தேன்! லார்ட் ஆஸ்டின் என்ற இயந்திரத் தந்தையின் வாக்கியமா அது! அவருடைய இந்த இலட்சிய மொழியே கடந்த பல ஆண்டுகளாக எத்தனையோ பல இயந்திரப் பிரும்ம தேவர்களுக்கு மன எழுச்சியும் ஊக்கமும் நல்கி வந்திருக்கிறது! புதிய புதிய வடிவத்திலும் தோற்றத்திலும் ஆண்டுதோறும் வகை வகையான கார்களைத் தங்கள் கற்பனையிலே உருவாக்கி இயந்திரங்களிலே படைத்து வெளி உலகுக்கு அனுப்பி வருகிறார்கள் இந்த அதிசய நிபுணர்கள்!

1866ம் ஆண்டு ஆஸ்டின் என்ற ஆங்கிலேயர் ஆஸ்ட்ரேலியா தேசத்துக்குச் சென்று தம்முடைய பதினெட்டாவது வயதில் இயந்திரத் தொழிற் பயிற்சியை மேற்கொண்டார். இருபத்தேழு ஆண்டுகள் கழித்து அவர் இங்கிலாந்துக்குத் திரும்பினார். இரண்டு ஆண்டுகள் தளராது உழைத்து எத்தனையோ பல உருவங்களை மனத்திலே கனவு கண்டு அவற்றின் விளைவாக 1895ம் ஆண்டிலே மூன்று சக்கரங்கள் கொண்ட ஒரு வண்டியை அவர் உருவாக்கினார். அடுத்த ஆண்டில் நான்கு சக்கரங்கள் கொண்ட ஒருவண்டியை அவர் படைத்தார். பின்னர் நான்கு ஆண்டுகள் கழித்து அவர் செய்த ஓர் அருமையான மோட்டார் வண்டி (3 H. P. two seater) வெள்ளிப் பதக்கம் பரிசு பெற்றது! மேலும் ஐந்து வருஷங்கள் தளராமல் உழைத்தார் ஆஸ்டின் என்ற இந்த நிபுணர். இதன் பயனாக, பர்மிங்ஹாம் நகரத்திலிருந்து ஏழு மைல் தொலைவிலுள்ள 'லாங்பிரிட்ஜ்' என்ற இடத்தில் ''ஆஸ்டின் மோட்டார் கம்பெனி'' என்ற நிறுவனத்தை ஆரம்பித்தார். அவர் இந்த உலகிலிருந்து மறைந்தது 1941ம் ஆண்டில். அதற்குள் அவர் தம்முடைய கனவுகளிலே எத்தனையோ பல கற்பனை வடிவங்களை உருவாக்கி இயந்திரங்களிலே கொடுத்து, வண்ண வண்ண வண்டிகளாகப் படைத்து உலகுக்குத் தந்தார். அவருடைய நிறுவனத்திலே பிறப்பெடுத்து வெளியே வந்த ஆஸ்டின் கார்களின் புகழைத் தம்முடைய ஆயுள் நாளிலேயே மனமாரச் செவி குளிரக் கேட்டு மகிழும் ''தாய்ப்பேறு'' அவருக்குக் கிட்டியது!

ஒரு குடும்பத்தின் 'போட்டோ ஆல்பம்' எத்தனை ரசமான ஒரு பொக்கிஷம்! முன் யோசனை நிரம்பிய குடும்பங்களில் தங்களுடைய முன்னோர்களின் படங்களையெல்லாம் குழந்தைப் பருவத்திலிருந்து கலியாணம், திருவிழா, வீட்டுப் பண்டிகைகள் முதலிய பல விசேஷங்களின் போது படம் பிடித்துப் பாதுகாத்து ஆல்பத்திலே ஒட்டி வைத்திருப்பதைப் பார்த்தால் ஒரு சுவை மிகுந்த கதைப் புத்தகத்தைப் படிப்பது போலவே இருக்கும் அல்லவா? நம் கண் முன்னால் பார்க்கிற கிழவர்கள் ஒரு காலத்தில் எப்படிக் குழந்தைகளாகத் தவழ்ந்தார்கள், பிறகு எப்படிப் பள்ளிக்கூடம் போனார்கள், நம்முடைய தாத்தாவும் பாட்டியும் எப்படி மணத் தவிசிலே ஏறி உட்கார்ந்தார்கள் என்றெல்லாம் இன்று போட்டோ ஆல்பத்திலே பார்க்கும்போது நாம் அடைகிற மகிழ்ச்சிக்கு அளவேது? அது போலவே ஆஸ்டின் தொழிற்சாலையில் நூறு ஆண்டுகளுக்கு முன்பு உருவாகிய மோட்டார்களின் படங்களும் படிப்படியாக ஏற்பட்ட 'மாடல்'களின் வளர்ச்சியும் பற்றிப் பல புகைப்படங்களும் மாதிரி உருவங்களும் பார்த்தேன். இவற்றையும் இன்று அங்கிருந்து உருவாகி வெளியே ஓடுகிற கார்களையும் ஒப்பிட்டுப் பார்த்த போது நூறு ஆண்டுக் காலத்தில் மனிதன் எப்படியெல்லாம் வேகமாக முன்னேறியிருக்கிறான் என்பதை நிர்ணயிக்க முடிந்தது.



மோட்டார் கார்கள் ஒவ்வொன்றாகப் பரிசோதனை செய்யப்பட்டு வெளியே வருகின்றன

துண்டுகள், பெரிய பெரிய துண்டுகள், இயந்திர ஆலையிலே காய்ந்து, பிறகு இயந்திரச் சம்மட்டிக்குள்ளே செல்லுகின்றன! சம்மட்டி 'படார் படார்' என்று மூன்று தரம் அடிப்பதற்குள், ஒரு குறிப்பிட்ட வடிவத்தில் அந்த இரும்புத் துண்டு உருவாகிறது! பிறகு இதை இன்னொரு இயந்திரத்துக்குள்ளே கொடுத்ததும், வேண்டாத "சலும்பல்"களையெல்லாம் அது நொறுக்கித் தள்ளிவிட்டு, தனது நீண்ட கையினால் இன்னொரு இடத்துக்கு இந்தத் துண்டைத் தூக்கிக் கொடுக்கிறது! பிறகு ஒருவித எண்ணெய்ச் சுழற்சியிலே சில நிமிஷ நேரத்தில் குளிர்ச்சியடைந்து வெளியே வருகிறது இந்த உறுப்பு! வெளிக் கூடத்தின் கம்பிகளில் தொங்கிக் கொண்டே இந்த உறுப்புக்கள் நகருவதும், அங்கங்கே ஒவ்வொரு உறுப்பாக இணைக்கப்பட்டுப் படிப்படியாக இந்த உருவம் வளர்ந்து ஒரு பெரிய காராக வடிவெடுப்பதும் மிகவும் ரசமான காட்சியாகும்!

முதன் முதல் ப்ரிட்டனிலே செய்யப்பட்ட கார் குதிரை வண்டி போலவே தோற்றம் தருகிறது! அதாவது குதிரை பூட்டாத குதிரை வண்டி! அதிலிருந்து புறப்பட்ட இயந்திரக் கற்பனை இப்பொழுது எப்படியெல்லாம் உருவாகி விட்டது! 1906ம் வருஷத்தில் ஆஸ்டின் பெரியார் தம்முடைய தொழிற்சாலையைத் தொடங்கியபோது அந்த இடத்தின் பரப்பளவு இரண்டரை ஏக்கர்! இருநூற்றுஎழுபது தொழிலாளர்கள் வேலைசெய்து ஆண்டு ஒன்றுக்கு நூற்று இருபது வண்டிகள் படைத்தார்கள்! அதற்குப் பிறகு அந்தத் தொழிற்சாலை பல்கிப் பெருகிப் பிரும்மாண்டமாக வளர்ந்து விட்டது. சென்ற ஆண்டின் கணக்கு என்ன தெரியுமா? 165 ஏக்கா பரப்புள்ள தொழிற்சாலையில் இருபத்தோராயிரம் தொழிலாளர்கள் வேலை செய்து, லட்சத்துத் தொண்ணூற்று மூவாயிரத்து எண்ணூற்றுப் பத்துக் கார்களை ஒரு வருஷத்தில் (1959) உற்பத்தி செய்தார்கள்! வளர்ச்சியின் அளவு எப்படி என்பதைப் பார்த்துக் கொள்ளுங்கள்!

ஆஸ்டின் தொழிற்சாலையில் என்னை மிகவும் மலைக்க வைத்த இடம் அங்கேயுள்ள இரும்பு உருக்குக் கூடம்! பழுக்கக் காய்ந்த இரும்புத்

இயந்திரங்கள் இயங்குகிற விதமும், மனிதனுடைய கைகளுக்கு வேலை குறைந்து அவற்றுக்குப் பதிலாக இயந்திரங்களின் கை ஓங்கி இயங்குவதும், அங்கேயுள்ள படபடப்பும், துடிதுடிப்பும் இப்பொழுது நினைத்துப் பார்த்தாலும் நெஞ்சு படபடக்கிறது! அப்படியானால் அதை யெல்லாம் நேரிலே சென்று பார்த்த போது எப்படியிருந்திருக்கும்! அந்தப் படபடப்பு அடங்குவதற்காக 'விருந்தினர் விடுதி'க்கு அழைத்துச் சென்று 'ரைஸ் புடிங்' என்ற அரிசிப் பாயசமும் நேர்த்தியான ஆப்பிள் பழங்களும் கொடுத்தார்கள்! மோட்டார்க் காருக்குப் பெட்ரோல் விட்டது போல, அரிசிப் பாயசம் உள்ளே போனதும் இந்த மோட்டார் அடுத்த பிரயாணத்துக்கு ஆயத்தம் என்று அறிவித்தது! (தொடரும்)

கங்கை பாயும் நாட்டினிலே....



ராம் ஆஸ்பத்திரி மருந்தில் மருந்து கொஞ்சமாகவும், தண்ணீர் அதிகமாகவும் இருப்பது போல், கதையில் கருத்து சுருக்கமாகவும், சம்பந்தமற்ற காட்சிகள் அதிகமாகவும் இருக்கின்றன.

நல்லதை நினைத்து நல்லதையே செய்யும் நல்ல மனிதன் ராஜு; குண்டு பாய்ந்து துடித்த கொள்ளைக்காரனுக்குக் கட்டுப் போட்டுக் காப்பாற்றப் போய்க் கொள்ளைக் கூட்டத்தாரிடமே சிக்கிக் கொண்டு அவர்களை நல்வழிப்படுத்த முயன்று கொள்ளைக்காரரின் கொதிப்புக்கு ஆளாகிறான். கடைசியில் கொள்ளைக்காரர்கள் மனம் திருந்திப் போலீஸாரிடம் சரணடைந்து விடுகின்றனர்.

நல்ல கருத்துள்ள கதை! ராஜுவின் வாழ்க்கை வெறும் அற வாழ்க்கையாகப் போய் விடாமல் இருக்கக் கொள்ளைக்காரனுடைய மகளின் அன்பு அவனுக்குக் கிடைக்கிறது- எந்தப் படத்திலும், எந்தக் கதாநாயகனுக்கும் கிட்டாத அளவுக்குக் கிடைக்கிறது. இப்படிப்பட்ட கூச்சம் இல்லாத காதல் காட்சிகளைக் கூசாமல் வெட்டியிருக்கலாம்.



ராஜுவாக வரும் ராஜ்கபூர் அபாரமாக நடித்திருக்கிறார். கள்ளமற்ற வெள்ளையுள்ளத்தை எப்படித்தான் அவரால் இவ்வளவு அழகாக வெளிக் கொணர முடிகிறதோ!

ராஜுவைக் கிறங்க வைக்கும் பத்மினி 'தம்மை மறந்து' நடனமாடி யிருக்கிறார் என்றால் மிகையில்லை.

அருவியில் நீராடும் காட்சியில் நடிக்கும் பத்மினிக்கு ஏன்தான் இத்தனை தாராள புத்தியோ! இந்தப் படத்தைப் பார்த்துவிட்டு வெளியே வந்தபோது, "அருவியில் பத்மினி நீராடும் காட்சியைப் பார்ப்பதற்காகவே இன்னும் இரண்டு தடவை வரலாம்" என்று பலர் பேசிக் கொண்டது என் காதில் விழுந்து வேதனையுண்டாக்கியது.


நல்லதை நினைத்துத்தான் படம் எடுத்திருக்கிறார்கள். ஆனால் குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக் கொண்ட கதையாகிவிட்டதே. படத்தின் கருத்தைப் பற்றி யாருமே பேசக் காணோமே! தமிழகத்தின் தலைசிறந்த நடிகையான பத்மினி இவ்வாறு நடித்துத்தான் புகழை வளர்த்துக் கொள்ளவேண்டுமா?

கொள்ளைக்காரர் தலைவனான ராகாவின் பாகத்தைப் பிரான் ஏற்றிருக்கிறார். கடைசி வரையில் எப்படித்தான் அவரால் அப்படி முறைத்துக்கொண்டே இருக்க முடிகிறதோ?

ஒளிப்பதிவு உயர்ந்த முறையில் இருக்கிறது. இசைக் கருவிகளின் மூலம் எழுப்பப்படும் இன்னிசை உள்ளத்தையும் தொடுகிறது. வசனம் பல இடங்களில் அருமையாக அமைந்திருக்கிறது. கொள்ளைக்காரர்களைப் போலீஸார் வளைத்துக் கொள்ளும் காட்சி மிகவும் விறுவிறுப்பாக இருக்கிறது. அது படமாக்கப்பட்டிருக்கும் விதமும் மிக நன்றாயிருக்கிறது.

கங்கை பாயும் நாட்டில் சாக்கடை நாற்றமும் இருப்பது இயற்கைதானே!

காந்தன்



திருமூலர் தவமொழி

ராஜாஜி — சோமு

4

இறைவனை எந்த மார்க்கத்தில் சென்று வழிபட்டால் அவனை அடையலாம் என்று பக்தர்களுக்குள்ளே சந்தேகம் உண்டாவதுண்டு. பூசனை முறைகளும், மூர்த்தி பேதங்களும், இவற்றை நாடும் வழிகளும் பலவாறாக நமது முன்னோர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்தப் பல்விதமான வழிபாட்டு முறைகளிலே எதைக் கொண்டு இறைவனைப் பணிந்து கடைத்தேறலாம் என மயங்கும் மக்களுக்குத் திருமூலர் ஆணித்தரமாக அறிவுறுத்துகிறார்.

அப்பனை நந்தியை
ஆரா அமுதினை
ஒப்பிலி வள்ளலை
ஊழி முதல்வனை
எப்பரி சாயினும்
ஏத்துமின்; ஏத்தினால்
அப்பரிசு ஈசன்
அருள்பெற லாமே!

(நந்தி—சிவபெருமானுக்கு மற்றொரு பெயர்; ஆரா அமுது—பருகப் பருகத் தெவிட்டாத அமுதம், தானே தன்னியல்பாக நிற்காமல் சுரந்து வரும் அமுதம்; ஒப்பிலி வள்ளல் — சமானமில்லாத ஒப்பற்ற கருணையோடு கூடிய ஈசன்; ஊழி முதல்வன்—உலக முடிவில் தனக்கு முடிவில்லாதவனும், உலகின் தொடக்கத்தில் ஆதிகாரணமாக அமைந்த முதல்வனுமான ஈசன்.)

எல்லா உயிர்களுக்கும் தந்தையாக விளங்குகிற அப்பன் அவன். நந்தி என்ற திருநாமத்தை உடையவனும் அவனே! உலப்பில்லாத ஆனந்த அமுதம்! அவனுடைய பெருங் கருணைக்கு ஈடு இணை கிடையாது. ஒப்பற்ற வள்ளல் அவன்! ஊழிக் காலங்களுக்கெல்லாம் அப்பாற்பட்ட முழு முதற் கடவுள் அவன். அப்படிப்பட்ட இறைவனை,—

எந்த விதத்திலாவது ஒரு விதம், எந்த முறையிலாவது ஒரு முறையில் துதியுங்கள்! அப்படித் துதித்தால் வேறு விதமான துதிக்கு அவசியமில்லாமல் அவனுடைய அருளைப் பெறலாம்! எந்த நிலையில் அவனை வைத்து வணங்கினாலும் அந்த நிலையில் நின்று அவன் அருள்வான். 'சந்தேகமில்லை' என்ற உறுதியைத் தருகிறது ஈற்றிலுள்ள 'ஏ' காரம்.

வழிபடுவதற்குரிய உருவம் எது, மார்க்கம் எது என்றெல்லாம் தேடித் தேடி ஆராய்ந்து அந்த ஆராய்ச்சியிலேயே காலத்தைக் கழித்து விடுவது பேதைமை. நாம் எந்த வழியிலே மன ஒருமையோடு செல்லுகிறோமோ, அந்த வழியிலேயே நம்மை எதிர்கொண்டு அருள் புரிகிறான் ஈசன் என்ற உறுதியை நமக்குத் தருகிறார் திருமூலர்.

கண்ணைக் கொடுத்த கண்ணப்பர் எந்த ஆசிரியரிடம் சென்று உபதேசம் பெற்றார்? அவர் அருள் பெறவில்லையா? பெற்றார். அந்த விநாடியிலேயே பெற்றார்! சிவகோசரியார் போலே ஆகம வழிகளில் சென்று அருள் பெற்ற பெரியோர்களும் உண்டு. எனவே மார்க்கங்களை எண்ணி மனங் கலங்க வேண்டாம் என்று பழைய உரைகாரர் இந்த இடத்தில் நினைவூட்டி விளக்கம் கூறுகிறார்! கீதையில் கண்ணனும், பாசுரங்களில் ஆழ்வார்களும் கூறிய உண்மையும் இதுவே.

அன்பே ஆரமுதே

தி. ஜானகிராமன்

அத்தியாயம் ஐந்து

நாகம்மாளுக்கு 'அவனே' கையில் சிக்கிக் கொண்டிருப்பதாகத் தோன்றியதோ என்னவோ! பாத்திரத்தை நசுக்கி விடுவது போல் அழுத்தித் தேய்த்தாள். அவள் பொரிந்து கொட்டினாள்:

"எனக்கு அப்போதே என்னவோ போலிருந்தது.— என்னடா இப்படியெல்லாம் பழகுகிறானே என்று. ஆனால் அந்த ராக்ஷஸன் தேனொழுகப் பேசினான். அம்மா அம்மா என்று குழைந்து என்னையும் கண்ணைக் கட்டிவிட்டான்."


"இதோ பார். என்ன நடந்தது? யார் அவன்? நிதானமாகத்தான் சொல்லேன்."

"என்னத்தைச் சொல்லுகிறது. தினமும் காலமே காப்பி, சாயங்காலம் காப்பி, அரைப்படி சோறு, குழம்பு கறி - இவ்வளவும் கொடுத்தாகிறது. வேளா வேளைக்கு வந்து தொலைச்சால் என்ன? நமக்கென்று வேலைக்காரி வந்து வாய்க்கிறானே" என்று சற்றுக் குரலை உயர்த்தி அலுத்துக் கொண்டாள். அவள் முடித்த பிறகுதான் சந்திரா எழுந்து வருவது தெரிந்தது ருக்குவுக்கு.

"என்ன சந்திரா, ஓசைப்படாமல் வந்தாய். பூனைக்குட்டி மாதிரி சோபாவிலேயே படுத்து அயர்ந்து விட்டாயே!"

"லைப்ரரிகிட்ட பஸ்ஸுக்கு நின்று நின்று மண்டையெல்லாம் வெடித்துப் போச்சு. வந்து படுத்தால் தேவலை போல் ஆயிடுத்து" என்று முகத்தைக் கழுவிக் கொண்டாள் சந்திரா.

"எழுப்பலாமோ என்று பார்த்தேன். அப்புறம் பேசாமல் வந்துவிட்டேன்"



என்று நாகம்மாள் எழுந்து கொஞ்சம் பாலைச் சுட வைத்துக் காப்பியைக் கலந்து கொடுத்தாள் அவளிடம். காப்பியைக் குடித்ததுமே, தலையை வாரிக் கொண்டாள். மீண்டும் முகத்தைக் கழுவி, புடவையை மாற்றிக் கொண்டாள். அவசரம் அவசரமாகப் பவுடரைப் பூசிக் கொண்டாள். வாசலிலிருந்த சைக்கிளைக் கீழே இறக்கினாள்.

' இப்பத்தான் வந்தே, படுத்தே. மறுபடியும் கிளம்பியாச்சா ?''

'' ஐயம் வரச் சொன்னாளம்மா. காலேஜிலே டெமான்ஸ்ட்ரேட்டர் வேலை காலியாகிறதாம். சாயங்காலம் மூன்று மணிக்கு வரச் சொன்னாள். பார்த்துவிட்டு வரணும்...'' என்று ருக்மிணியையும் பார்த்துச் சொல்லிக் கொண்டாள் சந்திரா. அடுத்த கணம் சைக்கிள் வெளியே ஓடிற்று.

'' பார்த்தாயோ இல்லையோ ? இவளுக்கு என்னத்துக்கு வேலை ?''

''இரண்டு வேலையிலே ஏதாவது ஒன்று செய்துதானே ஆகணும்.''

'' இரண்டு வேலை என்றால் ?''

'' பெண்டாட்டி வேலை.- இல்லா விட்டால் வேறு வேலை. ஒன்றையும் செய்யாமல் யார்தான் வீட்டில் இருக்க முடியும், இந்த வயசில் ?''

'' நீ என்னமோ எல்லாம் கண்டு விட்டாற் போல்தான் பேசுகிறாய்.''

'' எனக்கு ஒரு வேலையைப் பற்றி நன்றாகத் தெரியும். இரண்டும் செய்யாமலும் இருந்த காலமும் நினைவில் இருக்கிறது...அதுவும் பார்த்து, பேசி, பழகி, விட்டு விட்டுப் போய் விட்டால் அவளை வேறு என்ன செய்யச் சொல்கிறாய் ?... நாகம்... இப்ப சொல்லு. யார் அவன்? என்ன செய்து கொண்டிருக்கிறான் ? முன்னாலேயே தெரியுமா ?''

' முன்னாலேயும் தெரியாது, பின்னாலேயும் தெரியாது. இந்தக் காலேஜ் வாத்திச்சிகள் இருக்காளுகளேயல்லியோ....... நான் சொல்லுகிறேன் என்று கோபித்துக் கொள்ளாதேயம்மா! உங்கள் ஊரில் எப்படியோ? இங்கே நடக்கிற அநியாயம் சகிக்கலை. 'பொம்மனாட்டிப் பசங்களை' யெல்லாம் வெளியிலே தெருத் தெருவாக நூறு டிக்கெட்டைத் தலையிலே கட்டி அனுப்பி விடுகிறது ! நாள் கிடையாது, பொழுது கிடையாது. காலேஜிலே ராத்திரிப் பள்ளிக்கூடமாம் அனாதைகளுக்கு. அதுக்கு நாடகமாம்! ஹாஸ்டல் கட்டுகிறார்களாம், அதுக்கு நாடகமாம். நாடகக் கொட்டகை கட்டுகிறார்களாம், அதுக்கு நடனக் கச்சேரியாம். பள்ளிக்கூடத்தை ஆரம்பித்து வைத்தானும் ஒரு மகானுபாவன். அவனுக்கு அறுபது வயசாகப் போகிறதாம். அதுக்குக் கொண்டாட்டமாம். இவ்வளவு நல்ல காரியம் பண்ணினவன் என்னத்துக்கு அறுபது வயசு வரைக்கும் உசிரை வைத்துக் கொண்டிருக்கிறான் என்றுதான் கேட்கிறேன். 'பாபி சிராயுஸ்' என்று சொல்லுவார்கள். பாபிகள்தான் தீர்க்காயுசோடு வாழ்ந்து புதிது புதிதாகப் பாவத்தைப் பண்ண வேண்டும், உலகத்தைக் கதறக் கதற அடிக்க வேண்டும் என்று தலையிலே எழுதி யிருக்கான் ஆண்டவன். நல்லவன் சுருக்கப் போய்ச் சேரப்படாதோ ? அவனுக்கு அறுபது வயசு. அப்புறம் பள்ளிக்கூடம் கட்டி இருபத்தைந்து வருஷங்கள். இப்படி ஏதாவது கூத்துக் கட்டி யடிக்கிறார்கள். இந்தக் குட்டிகளை அவிழ்த்து விட்டு விடுகிறார்கள். இவர்கள் இடம் போது தெரியாமல், கடைத்தெரு, பெரிய மனிதர்கள் வீடு, ஆபீசுகள் - இப்படிப் போய்ப் பிச்சைக்கு நிற்கின்றனர். அதிலே வந்த வினைதான். ஒரு காரியத்துக்கும் நாதியில்லாதவர்கள் காலேஜ் கட்டுவானேன் ? சொந்தப் பணத்தை எடுத்துச் செலவு பண்ணுகிறாற்போல் நீட்டி முழக்குவானேன் ?''

''இந்தக் கை காலு எல்லாம் பகவான் போட்ட பிச்சைதானே, நாகம்! அதையும் பிச்சை வாங்காமே உபயோகப் படுத்துகிறதிலே என்ன நஷ்டம்?''

''இத பாரு, நீ என் வயிற்றைக் கிளறாதே. இவள் இப்படித்தான். ஒரு தடவை நூறு டிக்கட்டை எடுத்துக் கொண்டு போனாள், பெரிய வாத்தியார்ச்சி சொன்னாள் என்று. சின்னக் குட்டிகள் பிச்சைக்கு வந்தால் கொடுக்காமலிருக்க மாட்டார்கள். ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால் சும்மாவா கொடுப்பார்கள்? ஹிஹிஹி என்று பல்லையும் இளிக்கத்தானே செய்வார்கள்? பத்திலே அஞ்சாவது அப்படித்தான் இருக்கும்.''

''மீதி அஞ்சும் அப்படித்தான். ஆனால் தைரியம் கிடையாது. ' உம்'மென்று முகத்தை வைத்துக் கொண்டு அந்த இளிப்பை மறைத்துக் கொள்ளும்; பார்த்தால் கோபம் மாதிரி இருக்கும்.''

''அதென்னமோ - அதைப் பார்த்துப் பயந்து கொண்டாவது போக முடியும்! ஆனால் முதல் அஞ்சிலே ஒன்றுதான் இவளிடம் இருக்கிற நூறில் இருபது டிக்கெட்டை வாங்கிக் கொண்டது. மீதியிலே நாற்பது டிக்கெட்டைத் தானே விற்றுக் கொடுத்தது. அஞ்சு டிக்கெட்டு, பத்து டிக்கெட்டு என்று கொஞ்சம் கொஞ்சமாகப் பணத்தைக் கொடுத்தது. அதை முழுதும் வாங்குவதற்குள் இவள் பத்துப் பன்னிரண்டு நடை அந்தக்

கடைக்கு நடந்து விட்டாள். ஒவ்வொரு தடவையும் காப்பி வரவழைப்பானும், ஐஸ்க்ரீம் வரவழைப்பானும். இவள் என்ன படிக்கிறாள், யாரு, என்ன என்று பேச்சுக் கொடுத்தானும்.''

''கடை வைத்திருக்கிறானா அவன்?''

''ஆமாம். அவன் அப்பாவுக்கு இரும்புக்கடை. இவன் ரேடியோ, மின்சார விசிறி, சைக்கிள், வர்ணம் இன்னும் என்னென்னவோ எல்லாம் வியாபாரம் செய்கிறானாம். மூவாயிரம் ரூபாய்க்கு அவனே டிக்கெட் விற்றுக் கொடுத்திருக்கிறான்.''

''நீ பார்த்ததே இல்லையா அவனை?''

''பார்க்காமல் என்ன? இங்கேதான் வந்து பழியாகக் கிடப்பனே.''

''நீ பழகின வரையில் எப்படித் தெரிந்தது?''

''ஆள் நன்றாக இருப்பான். இத்தனைக் கத்தனை உயரம். பிள்ளையாண்டானுக்குக் கோபமே வராது. எது கேளு! எங்கே தான் போவானோ, என்ன தான் பண்ணுவானோ, அரைமணி நேரத்திலே கொண்டு கொடுத்து விடுவான். அம்மாவுக்குப் பிடிக்குமே என்று வாங்கிவந்தேன் என்று ஒரு வீசை காய்ந்த திராட்சை வாங்கி வருவான். திடீர் திடீரென்று எதையாவது வாங்கிக் கொண்டு வந்து நிற்பான். வேண்டாமென்றுசொன்னால் கேட்க மாட்டான்.''



''படித்திருக்கிறானா?''

''எம். ஏ. படிச்சிருக்கானாம். ஒரு வருஷம் அக்கௌண்டன்ட் ஜெனரல் ஆபீசிலே வேலை பார்த்தானாம். அப்புறம் கைகட்டிச் சேவகம் பண்ணவாவது என்று விட்டு விட்டுக் கடை வைத்தானாம். பணம் சம்பாதிக்கிறதிலே சூரன்! அதேமாதிரி வாரி இறைக்கிறதிலேயும் தான். பாலும் சர்க்கரையும் சொட்டச் சொட்டப் பேசுவான். அப்படிப் பேசிப் பேசிச் சொக்குப் பொடி தூவி விட்டான். அண்ணாகூட 'என்ன ரங்கனைக் காணவே இல்லை?' என்று அவன் ஒருநாள் வராவிட்டால் கேட்க ஆரம்பித்து விடுவார். அண்ணாவையே மயக்குகிற பேர்வழி எப்படி யிருக்கணும் என்று பார்த்துக்கோயேன்.''

''தினமும் வருவானா அப்படி?''

''இப்பத்தான் சொன்னேன். மறுபடியும் கேட்கிறியே. தினமும் வருவான். மாமா மாமாவென்று அண்ணாவோட பேசுவான். இதோ பிரான்சிலே பிரமாதமா ஒருத்தன் துப்பறியும் நாவல் எழுதக் கிளம்பியிருக்கான் மாமா என்பான். அவரிடம் ஏழெட்டு புஸ்தகத்தைத் தள்ளிவிட்டுப் போவான். இவளைக் காலேஜிலே கொண்டு விடுகிறேன் என்பான். கடைசியில் கடற்கரைக்குக் காரிலேயே அழைத்துப் போவான். கடற்கரை, சினிமா, எக்ஸிபிஷன் இப்படிப் போய்க் கொண்டே யிருந்தது. திடீரென்று பத்து நாட்கள் ஆளைக் காணவில்லை. பிறகு வந்தான். 'சந்திராவுக்குப் பரீட்சை சமயம். நான் வந்து பேசிப் பேசிக் கொன்று விடுவேன் என்று பயமாகப் போய் விட்டது. அதுதான் வரவில்லை' என்றான். இவ்வளவு இனம் தெரிந்த பிள்ளையா யிருக்கே என்று நானே மாய்ந்து போய் விட்டேண்டி'' என்று நாகம்மாள் அழாத குறையாக நிறுத்தினாள்.

''அது சரி, அப்புறம் என்ன ஆச்சு?''

''ஒன்றும் ஆகவில்லை. மறுபடியும் திடீரென்று இரண்டு வாரங்கள் ஆளைக் காணோம். அப்புறம் அவன் ஒருமாதிரி என்று பராபரியாகக் காதில் விழுந்தது. சகவாசம் சரியாயில்லை. கூத்தாடி சிநேகங்கள் உண்டு என்று தெரிந்தது. அப்புறம் இரண்டு மூன்று தடவைகள் இந்தப் பெண்ணே பார்த்து விட்டது. யாரோ ஒரு பெண்ணைக் காரில் பக்கத்தில் வைத்துக் கொண்டு சுற்றுகிறானாம். கடற்கரையில் ஒரு தடவை, சினிமாவில் ஒரு தடவை பார்த்துவிட்டாள் இவள். அப்புறம் ஒருநாள் வீட்டுக்கு வந்தான். இவள் அது யாரு, என்ன என்றெல்லாம் குடைந்திருக்கிறாள். 'கெக்கெபிக்கே' என்று மழுப்பியிருக்கிறான். சரியான பதில் இல்லை. இரண்டு நாட்கள் கழித்து வந்தான். மறுபடியும் கேட்டிருக்கிறாள். அதே மழுப்பல். பேசாமல் உள்ளே வந்து விட்டாள். அப்புறம் நாலைந்து தடவை வந்தான். நானும் பேசவில்லை. அவனும் பேசவில்லை. பேசாமல் திரும்பிப் போய் விட்டான். ஒரு மாசத்துக்கு மேலாகி விட்டது. ஆளைக் காணோம். சாயம் வெளுத்துப் போய்விட்டது. இனிமேல் ஏன் வருகிறான்? இது சிறுசு. அப்படியே

வெம்பிப் போய்விட்டது. மறந்து தொலைக்க வேண்டுமே, அதற்காகத்தான் இப்படி லைப்ரரி, சிநேகிதி என்று அலைந்து திரிந்து கொண்டிருக்கிறாள். என்ன செய்வது?"

"அண்ணாவிடம் சொல்லவில்லையா?"

"அண்ணா எப்பொழுதோ ஊருக்கு வருகிறார். அவருக்கு இருக்கிற பிடுங்கல் போதாதா? வீட்டுக்கு வந்து தங்குகிற ஒருநாள் இரண்டு நாளை இதைச் சொல்லியா கலக்கணும்? இரண்டு மூன்று தடவைகள் கேட்டார். நான்தான் 'மூந்தா நாள் வந்திருந்தான், நேற்று வந்தான்' என்று சொல்லி மழுப்பி விட்டேன்."

ருக்கு இதைக் கேட்டுத் தரையைப் பார்த்துக் கொண்டே அசையாமல் நின்றாள். கார் நிற்கிற முகப்புச் சுவரின்மீது கைகளை வைத்துச் சாய்ந்தாற்போல் நின்றாள் அவள்.

"நீ அவளைப் பார்த்தாயோ...?" என்று மறுபடியும் பேசத் தொடங்கிய நாகம்மாள் பெருமூச்சுவிட்டு, "த்ஸ.. சரி! பன்னிப் பன்னிச் சொன்னேனா? நாம் ஜாக்கிரதையாக இருந்திருக்கணும். ஏண்டி ருக்கு! நீயே சொல்லேன். நான் என்னமோ அசட்டுப் பிசட்டு என்று நினைக்காதே. இந்தப் பெண் அழகா யிருக்காளா இல்லையா? உன் கண்ணுக்கு எப்படிப் படுகிறது? சொல்லு!"



ருக்குவின் உதட்டில் ஒரு புன்னகை ஓடியது. அவள் மனக்கண்முன் சந்திராவின் உருவம் எழுந்தது. "அது தான் நானும் யோசித்துக் கொண்டிருக்கிறேன். இத்தனை அழகு, உயரம், கம்பீரம் - இவையெல்லாம் பார்க்கிறபோது, ஏன் இப்படி இந்தப் பெண் கஷ்டப் படுகிறது என்று எனக்குப் புரியவில்லை."

"நிஜமாகச் சொல்கிறேண்டி ருக்கு...காலேஜுக்கு லட்சம் பெண்கள் போறது. நானும் எத்தனையோ பெண்களைப் பார்த்திருக்கிறேன். இந்தப் பெண்ணோடு நிற்கும்படியாக மூன்று நாலைக்கூட நான் பார்த்ததில்லை. என்னடா பிரமாத அதிசயமாகப் பெற்று விட்டாற்போல் பேசுகிறாள் என்று நீ நினைத்துக் கொள்ளலாம். எனக்கு அப்படித்தான் படுகிறது."

"என்ன நாகம் இது! என்ன இப்படிப் பேசுகிறே! ஒரு நல்ல காரியத்தைச் செய்துவிட்டு, அதை என்னமோ குற்றம் செய்து விட்டாற்போலவா சொல்லிக்கொள்ள வேண்டும்! உன்னுடைய பெண்மாதிரி பிறக்கத் தவம் பண்ணியிருக்க வேணும். வழி வழியா கட்டியாளுகிற வம்சத்திலே பிறந்து அழகிலேயும் கம்பீரத்திலேயும் ஊறி ஊறித் தெகட்டிப் போயிருக்கணும்."

ருக்கு பேசிக் கொண்டே யிருக்கும் போது ஓங்கி மண்டையில் அறைகிறாற் போல்,'' மல்லி! மல்லீப் !'' என்று காம்ப வுண்ட் சுவருக்கு வெளியே ஒரு குரல் பீறிட்டுக் கத்தியது. உடனே கேட்டைத் திறந்துகொண்டு உள்ளேயும் வந்தது. ஆறு முழம் தொடுத்த மல்லிகைப் பூவை நாகம்மாள் கையில் தந்து விட்டு மீண்டும் வெளியே நடந்தான் அவன். மறுபடியும் அதே அலறல்.

''என்னடி சிரிக்கிறே ருக்கு?'' என்று கேட்டாள் நாகம்.

''இல்லே நாகம்! இந்த மல்லிகைப் பூவை இன்னும் கொஞ்சம் அழகாகக் கூவி விற்கக்கூடாதோ ? இச் சத்தத்தை, இந்தக் கர்ணகடூரத்தைக் கேட்டே அது வாடிப் போய்விடும் போலிருக்கிறதே?''

நாகம்மாள் அதைக் கேட்டுச் சிரித்தாள். ருக்கு எது பேசினாலும் அவளுக்குப் பெருமை பொங்கிக் கொண்டு வரும். ஒரு கணம் யோசித்தாள். ''நீ சரியாகச் சொன்னாய். நான் இத்தனை நாட்களாக மாவுமிஷின் மாதிரி அலறுகிற இந்த அலறலைக் கேட்டு வருகிறேன். மல்லிப் பூவுக்கு இப்



படி ஏன் கத்த வேண்டும் என்று தோன்றவே இல்லையடி'' என்று சிரித்தாள். சரத்தில் பாதியைச் சுவரிலேயே தேய்த்துக் கிள்ளி அவளிடம் நீட்டினாள். ''எனக்கு ஒன்றே ஒன்று தோன்றுகிறது ருக்கு!'' என்று இழுத்தாள் நாகம்.

''என்ன?''

''இந்த ஆண் பிள்ளைகளுக்கு, நல்ல தேர்ந்த அழகு என்றால் பயம் வந்து விடுகிறது. அது கம்பீரமாக நிமிர்ந்து பார்க்கிற பொழுது, வெட்கப்பட்டுக் கொண்டோ நடுங்கிக் கொண்டோ ஓடி விடுகிறார்கள். அதற்குப் பதிலாகச் சகதியிலாவது விழுந்து புரளுவேன் என்று ஓடுகிறார்கள். இல்லாவிட்டால் காஷாயத்தைக் கட்டிக் கொண்டு சுற்றுவான்கள்...இல்லையா?''

''நிஜம்மாவா?'' என்று கேட்டு நிமிர்ந்தாள் ருக்கு.

''நீதான் பார்த்தாயே - மல்லிப்பூவை அதைக் கத்தி கத்திப் பயமுறுத்துகிறான். இல்லாவிட்டால் ஒரு பொம்மனாட்டி கையில் தூக்கிக் கொடுத்துவிட்டு ஓடுகிறான். இந்த வாசனையைத் தாங்காமல் தெருமுனையிலே ஒரு பிடியைப் பிடித்துக் கொண்டு நிற்பான்.''

ருக்குவுக்குச் சிரிப்பாக வந்தது. ''ஏய், நாகம்! படிக்கலே படிக்கலே என்கிறே. இப்படி உடம்பு, மனசெல்லாம் சுடச் சுடப் பேசறியே...'' என்று கூறி மீண்டும் சிரித்தாள்.

அந்தச் சிரிப்பு நாகம்மாளுக்கு இதமாயிருந்தது. மனசிலிருக்கிற அவள் கவலைகளையெல்லாம் அது தாற்காலிகமாக அடித்துக் கொண்டு போயிற்று. ''வாடி, இந்தப் பெண் வந்தவுடனே இன்னிக்கு ஏதாவது சினிமாவுக்குப் போய்விட்டு வருவோம்'' என்றாள்.

''ஏன் உனக்கு அழுது மாளவில்லையா?'' என்று ருக்கு சொன்னதும் மீண்டும் நகைத்துக் கொண்டே உள்ளே போனாள் நாகம்மாள்.

வழக்கம்போல் பதினொரு மணி வரையில் பேசிவிட்டு நாகம்மாள் தூங்கிவிட்டாள். சந்திராவின் அறையிலும் வெளிச்சமில்லை. அவளும் பத்தரை மணி வரையில் படிப்பதுபோலிருந்தது. பிறகு விளக்கு அணைந்தது. அவள் படுத்து விட்டாள் போலிருக்கிறது.

ருக்குவுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. சலசலவென்று தோட்டத்து மரங்கள் காற்றோடு பேசிக் கொண்டிருந்தன. இந்த வீட்டில் ஒரு தனிக் குளிர்ச்சி நிறைந்துதான் இருக்கிறது. டில்லியைப் போல் தரையும் காற்றும் இரவும் வெதவெதவென்று சுடவில்லை. காற்றில் இலேசாக ஒரு நைப்பு. புழுக்கம் இல்லை. சென்னையின் மனநிலையே தனி. அமுதக் காற்றாக அள்ளி வீசும். திடீரென்று என்னவோ நினைத்துக்கொண்டு காற்றையெல்லாம் சுருட்டிப் பிடித்துக் கொண்டு மூச்சை முட்ட வைக்கும். இன்று அதற்கு உற்சாகம். காற்றை எங்கும் தாராளமாக அவிழ்த்து விட்டிருந்தது. மரமல்லிகையின் மணம், தூவிவிட்டாற்போல் ஜன்னல் வழியே விட்டுவிட்டு வந்தது. ஜன்னல் ஓரமாக, கும்பலாகச் செழித்துப் பரந்திருந்த விபூதிப் பச்சையின் மணம்கூடச் சற்றைக்கொருமுறை எழுந்து வீசிற்று. நாய் குரைத்தது. 'டட் டட் டட்' என்ற சத்தம். காவல் காக்கிற கூர்க்கா கைத்தடியால் தட்டித் தட்டி ஊரைக் காப்பாற்றிக் கொண்டே நடந்து கொண்டிருந்தான்.

படுக்கை கொள்ளாமல் எழுந்து, கதவை மெதுவாகத் திறந்துகொண்டு வாசல் தாழ்வாரத்தின் ஓரமாக, பிடிச் சுவர்மீது உட்கார்ந்தான் ருக்கு. மரங்களின் சலசலப்பு பெருகியது. ஏதோ ஒரு மரத்தில் பல்லியோ என்னவோ 'குக் குக் குக்'கென்று சூள் கொட்டிற்று. வடக்கு வானில் ஸப்தரிஷிக் கூட்டம் வாலை மேலே மேற்குப் பக்கம் தள்ளி மல்லாந்து கொண்டிருந்தது.

ருக்குவுக்கு மனத்திலே அமைதி அற்றுவிடவில்லை. கலக்கமோ, ஒரு தெளிவின்மையோ கண்டு விடவில்லை. ஆனால் ஒரு தவிப்பு, ஒரு புதிய தவிப்பு, நீண்ட பயணம் கிளம்புவதற்கு முதல் நாள் இரவில் சலசலக்கிற தவிப்பு. இருப்புக் கொள்ளாத ஒரு விழிப்பு அவளை இலேசாக அலைத்துக் கொண்டிருந்தது.

இந்த உலகில் எது நடக்காது? மாப்பிள்ளை அழைக்கிற அன்று காணாமற் போகிற மாப்பிள்ளை! முப்பது வருஷங்கள் கழித்து இங்கே ஏன் அவரைப் பார்க்க நேர்ந்தது? அவள் நினைத்தால் இஷ்டப்படி. இஷ்டப்பட்டவனைக் கலியாணம் செய்துகொண்டிருக்கலாம். ஆனால் அது நடக்கவில்லை. அவள் படிக்கும் போது, படிப்பை முடித்து ஆசிரியை ஆனபொழுது, ஆசிரியர் மகாநாடுகளில் கலந்துகொண்ட பொழுது. யார் யாரோ அவளைச் சற்றுக் கவனித்து அர்த்தத்தோடு, கண்ணில் இதயம் தெரியும்படி பார்த்திருக்கிறார்கள். சிவசங்கரன், குல்கர்ணி, தேஜ்சிங், அனில் ஜோஷி - வால்டர் என்ற ஒரு வெள்ளைக்காரன் கூட.....ஆனால் இந்தப் பார்வைகள் எல்லாம் ஒரு கணம், ஒரு நிமிஷம். அதிகமாகப் போனால் பத்து நிமிஷங்கள் தான். அதற்குப் பிறகு அவள் அதை நினைக்கவில்லை. மனத்தின் வாசற்படியிலேயே அவற்றை நிற்க

வைத்து, விடை கொடுத்து, மனக் கதவைச் சாத்திக் கொண்டு உள்ளே வந்து விட்டாள். பார்த்துப் பார்த்துச் சோர்ந்து போய் அவர்கள் மறைந்து விட்டார்கள். கண்ணாடியில் முகம் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே, அது வேகமாக ரசம் அழிந்து, பொட்டையாகி, வெறும் கண்ணாடி போல் மாறினால் எப்படியிருக்கும்! எத்தனைநேரம் அதில் முகத்தைப் பார்க்க முயலுவார்கள்!

டில்லியிலே இதேமாதிரி, இதைவிட அழகான மரங்கள் உண்டு. கண்ணையும் நெஞ்சையும் ஆத்மாவையும் ஜில்லென்று தொட்டுக் குளிரவைக்கும் டில்லி வசந்தம் தோன்றும் பொழுதெல்லாம் அவள் சாலை சாலையாக நடந்து நடந்து தன்னையே ஆட்கொள்ளுமாறு அதனிடம் ஒப்படைத்துக் கொண்டு விடுகிற வழக்கம். பொல்லென்று பூத்த வேப்பஞ் சாலை, பளபளவென்ற தளிர்த்த நாவல் மரச்சாலை, தீ தீயாக செம்பூக்குடையாய்க் கனியும் வாதரட்சை மரம் பரந்த சாலைகள், நீலக் கிரீடம் தரித்து நிற்கும் ஜகராண்டா மரங்கள், நெடிது வளர்ந்த தெருவோரங்கள்—அங்கெல்லாம் நடந்து வசந்தத்தை நுகர்ந்திருக்கிறாள். ஆனால் அந்த வர்ணமும், நிழலும், குளிர்ச்சியும், கண்ணைக் கடந்து உள்ளே சென்று விடவில்லை. ஆயிரம் ஆயிரம் பட்சி கீதங்களாக வடிந்த அந்த வசந்தக்குரலும் காதைக் கடந்து உள்ளே வழிந்து விடவில்லை.

இத்தனையையும் பார்த்துக் கேட்டு வீட்டுக்குள் வந்ததும் சாப்பிட்டுவிட்டு, புத்தகம், புத்தகம், புத்தகம்! எப்படி அவ்வளவு கண்டிப்பாக அதையெல்லாம் வாசலிலேயே மறந்துவிட்டு வந்தோம், இருந்தோம் என்று — அவளுக்குப் புரியவில்லை. அந்தமாதிரி இத்தனை காலமும் இருந்திருக்கிறோம் என்பதே இப்பொழுது தான் புலப்பட்டது அவளுக்கு.

நாளைக் காலை, நாளைக்காலை? இன்று வந்தது மாதிரி, இன்று வந்ததுமாதிரி? அதே நேரத்துக்கு, அதே நேரத்துக்கு? திருப்பித் திருப்பித் தனக்குள்ளே கேட்டுக் கொண்டிருந்தாள் அவள். அவசியமாக வரவேண்டுமா என்று நாகம்மாளிடம் இன்று காலை கேட்டார் அனந்தசாமி...சதாகாலமும் மலர்ச்சியும் முறுவலும் மறையாத அந்த முகத்தைக் கண்டு...கண்டு? அந்தக் கேள்வியைக் கேட்கவேண்டும். ஏன் ஓடினீர்கள்? ஊர் முழுவதும் சூள் கொட்டி இரக்கப்படும் நிலைக்கு ஏன் ஒரு பெண்ணை இறக்கினீர்கள்? கேட்டால் அந்த முகத்தில் கல்லில் செதுக்கினதுபோல் நிலைத்துக் கிடக்கிற மலர்ச்சி வாடிவிடுமா? எந்த விதச் சொற்கள் விடையென்று வரப் போகின்றன?

சட்டென்று வாசல் தாழ்வாரத்தில் ஒளி தெரிந்தது. ருக்கு திரும்பினாள். வாசற்படியளவுக்கு வெளிச்சம் நறுக்கி விழுந்து கிடந்தது. ஒரு நிழலும் மெதுவாக நடந்து வந்தது.

நாகம்மாள்தான். வெளியே வந்தவள் சுற்றுமுற்றும் பார்த்தாள்.

"ருக்கு!"

"ம்!"

"இங்கேயா உட்கார்ந்திருக்கிறாய்?"

"க்கும்!"

"தூங்கவில்லை?"

"தூக்கம் வரவில்லை!"

நாகம்மாள் ஹால் விளக்கை அணைத்து விட்டுத் திரும்பி வந்து அவள் பக்கத்திலேயே உட்கார்ந்து கொண்டாள்.

சிறிதுநேரம் மௌனமாயிருந்தார்கள்.

"அப்படியானால் என்ன செய்கிறதாக உத்தேசம்?" என்று கேட்டாள் நாகம்மாள் திடீரென்று.

"எப்படியானால்?"

"ஒன்றுமே தெரியாததுபோல் என்ன கேள்வி இது? நாம் இரண்டு பேருமே அனந்தசாமியைப் பற்றித்தானே நினைத்துக் கொண்டிருக்கிறோம்!"

ருக்கு பதில் சொல்லவில்லை.

"எனக்கு எல்லாம் மர்மமாக இருக்கிறது" என்றாள் நாகம்மாள்.

"எதெல்லாம்?"

"இந்தக் காற்று, குளிர்ச்சி, நிசப்தம்—இவைகளைப் பார்த்து..."

"மர்மம் என்ன இதில்?"

"மர்மம் தான். கிட்டத்தட்ட ஒரே வயசு. ஆனால் ஒரு மனசைப் பின்னால் திரும்பி ஓடச் செய்கிறது இந்தக் காற்று. இன்னொரு மனசை முன்னால் ஓடச் செய்கிறது..."

"........."

"ஒருவருக்குப் பழங்கால ஞாபகம். இன்னொருவருக்கு வருங்கால ஞாபகம். ஒருவருக்கு எல்லாம் தீர்ந்து விட்ட நிறைவு. இன்னொருவருக்கு இனிமேல் தான் எல்லாம் ஆரம்பிக்கப் போகிற ஆவல்...."

"நாகம்மா?"

"ம்?"

"உன் பெண் உள்ளே படுத்துக்கொண்டிருக்கிறாள். நான் ருக்கு. சந்திரா இல்லை தெரியுமா?"

"தெரியும்."

"பின்னே இது என்ன பேச்சு?"

"ஒரே வயசு. மர்மம் என்று அதனால் தான் பீடிகை போட்டேன்." என்றாள் நாகம்மாள். (தொடரும்)

திருக்கோட்டியூர் திருமால்

தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்

பல்லவ மன்னர்களில் நந்தி வர்மன் என்பவன் ஒருவன். தெள்ளாற்றில் நடந்த போரில் வெற்றி பெற்றதன் காரணமாக, தெள்ளாற்றெறிந்த நந்தி வர்மன் என்று சரித்திரப் பிரசித்தி பெற்றவன். அதைவிட நந்திக் கலம்பகம் என்னும் சிற்றிலக்கியத்தின் மூலமாக இலக்கியப் பிரசித்தியும் உடையவன். நந்திக் கலம்பகம் எழுந்த வரலாறு மிக மிக ரஸமானது. இந்தப் பல்லவ மன்னன் நந்திக்கு ஒரு சகோதரன்; காடவர் கோன் என்று. இருவருக்கும் தீராப் பகை. பகை முற்றியபொழுது நந்தி தன் தம்பியை நாடு கடத்தி விடுகிறான். தம்பியோ கவிஞன். போரில் வெல்ல முடியாத அண்ணனை, அறம் வைத்துக் கலம்பகம் ஒன்று பாடி, முடித்து விடக் கருதுகிறான். அப்படியே பாடுகிறான். தான் பாடிய கலம்பகத்தை எடுத்துக்கொண்டு நாட்டுக்குள் இரகசியமாக நுழைந்து ஒரு கணிகையோடு தங்கி மறைந்து வாழ்கிறான். ஒரு நாள் வெளியே சென்ற தம்பி வர நேரம் ஆகிறது. கதவைத் திறந்துவைத்துக் காத்துக் கொண்டிருந்த கணிகை தூங்கி விடுகிறாள். அகாலத்தில் வீட்டுக்கு வந்த கவிஞன், தூங்குகிற தன் காதலியை எழுப்ப, கொஞ்சம் சந்தனக் குழம்பை எடுத்து அவள் மீது தெளிக்கிறான். தெளிக்கும்போது கலம்பகப் பாடல் ஒன்று ஞாபகத்துக்கு வருகிறது. பாடிக்கொண்டே தெளிக்கிறான்.

செந்தமிழின் சாற்றைப்
பிழிந்து செழுஞ்சிறச்
சந்தன மென்றுரோ
தடவினர் - பைந்தமிழை
ஆய்கின்ற கோன் நந்தி
ஆகம் தழுவாமல்
வேகின்ற பாவியேன்
மீது

என்பது பாடல். இந்தப் பாடல் அச்சமயம் அங்கு மாறுவேடத்தில் நகரைச் சுற்றிவந்த காவலனை நந்தியின் காதில் விழுகிறது. பாட்டின் சுவையை அறிகிறான்; தம்பியின் குரலைத் தெரிகிறான். தம்பியைக் கண்டு தழுவித் தன்னுடன் அழைத்துச் செல்கிறான். அவன் கலம்பகம் பாடியிருக்கும் விவரம் அறிந்து அப் பாடல்களைக் கேட்க விரைகின்றான். தம்பியோ அண்ணனது அளப்பரிய அன்பினை நினைந்து, 'பாட்டில் அறம் இருக்கிறது. நீ கேட்டால் இறந்து போவாய்' என்று பாட மறுக்கிறான். அரசனோ விடவில்லை. இப்படி அருமையான பாடல் ஒன்றைக் கேட்பதற்கே உயிரை விடலாமே. நூறு பாடலா? இதற்கு உயிரை மட்டுமா கொடுக்கலாம், உடல் பொருள் எல்லாவற்றையுமே கொடுக்கலாமே என்று சொல்கிறான். ராஜ்யத்தைத் தம்பிக்கே கொடுத்து விட்டு அரண்மனையிலிருந்து சுடுகாடு வரை நூறு பந்தல்கள் அமைத்து ஒவ்வொரு பந்தலிலும் நின்று ஒவ்வொரு பாட்டுக் கேட்டு, கடைசியில் நூறாவது பாட்டையும் காஷ்டத்தில் ஏறிக் கொண்டே கேட்டு உயிர் துறக்கிறான். இது உண்மையான கதையோ என்னவோ? நந்திக் கலம்பகத்தால் மாண்ட கதை நாடறியும் என்று சிவஞான முனிவர் பாடி விட்டார். ஆனால் உண்மையாகவே இருக்க வேண்டும் என்பது இல்லை. தமிழ்ப் பாடல்களைக் கேட்பதனால் உயிரே துறக்க நேரிடும் என்றாலும் அப் பாடல்களைக் கேட்க நந்தி தவறமாட்டான் என்பதே இந்தக் கதையின் உள்ளுறைப் பொருள். இவனைப்போலவே இன்னொருவர் குருவினிடம் கேட்ட மகா மந்திர உபதேசத்தை, 'இதை நீ பிறருக்குச் சொல்லக் கூடாது. சொன்னால் உன் தலை வெடித்து விடும்' என்று எச்சரித்திருந்த போதிலும், அந்த எச்சரிக்கையை யெல்லாம் மதியாமல் தான் கேட்ட மகா மந்திர உபதேசத்தை, ஊரில் உள்ளவர்களை அழைத்து வைத்து மதில் மேல் ஏறி நின்று உபதேசித்தார் என்றால் அது எவ்வளவு பாராட்டுக்கு உரியது.

நாம் இன்புறுவது
உலகு இன்புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்

என்றார் வள்ளுவர். ஆனால் இவரோ உலகு இன்புறக் காணுவதில் தாம் துன்பமுற்றாலும் பரவாயில்லை என்று துணிந்திருக்கிறார். அப்படித் துணிந்து தான் பெற்ற உபதேசத்தை மக்களுக்கு எல்லாம் சொன்னவர்தான் வைஷ்ணவ பரமாசாரியாரான ராமானுஜர். அப்படி அவர் மதில் மேல் ஏறி நின்று எல்லோரையும் வாருங்கள் என்று கூவி உபதேசித்த தலம்தான் திருக்கோட்டியூர். அந்தத் திருக்கோட்டியூருக்கே செல்கிறோம் நாம் இன்று.

திருக்கோட்டியூர், ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள சிறிய ஊர். மானாமதுரை - திருச்சி லயனில் கல்லல் ஸ்டேஷனில் இறங்கி வண்டி பிடித்துக் கொண்டு பத்து மைல் மேற்கு நோக்கிப் போக வேணும். இந்த வழியில் வேறு வசதி கிடையாது. மதுரையிலிருந்து திருப்புத்தூர் வந்து அங்கிருந்து தெற்கு நோக்கிப் பத்துப் பன்னிரண்டு மைல் பஸ்ஸிலோ காரிலோ வந்தால் திருக்கோட்டியூர் சென்று சேரலாம். இல்லையென்றால் ரயிலிலோ பஸ்ஸிலோ சிவகங்கை சென்று அங்கிருந்து பதினாறு மைல் வடக்கு நோக்கிச் சென்றாலும் போய்ச் சேரலாம். சிவகங்கை வழியாகச் செல்வதுதான் எளிதான வழி. சிவகங்கை — திருப்புத்தூர் ரோட்டின் பேரிலேயே கோயில் இருக்கிறது. கோயிலுக்கும் ரோட்டுக்கும் கிழக்கே தெப்பக்குளம் இருக்கிறது. வாயிலைக் கடந்ததும் பெரிய விஸ்தாரமான வெளிப் பிராகாரம். அங்கேயே பொன் வேய்ந்த கருடக் கம்பம் இருக்கிறது. இனி கோயிலுள் நுழையு முன் ஏன் இத்தலம் கோட்டியூர் என்று அழைக்கப்படுகிறது என்று

தெரிய வேண்டாமா? இரணியன் மூவுலகையும் ஆட்சி செய்கிறான், அவன் ஆட்சியில் தேவர்களெல்லாம் நைகின்றனர். அவனை எப்படி ஒழிப்பது என்று தெரியவில்லை. கதம்ப முனிவரது சாபத்தால், துஷ்டர்கள் ஒருவரும் நெருங்கக் கூடாது என்று ஏற்பட்டிருந்த இத்தலத்தினையே தேவர்கள் எல்லாம் தேர்ந்தெடுத்தனர். தேவர்களோடு, தேவர்க்கும் தேவராம் தேவர் மூவரும் கோஷ்டியாகச் சேர்ந்து ஆலோசனை நடத்திய இடம் ஆனதால் இதனைக் கோஷ்டியூர் என்றனர். அது காரணமாகவே, இத் தலத்தில் பிரும்மா, விஷ்ணு, சிவன்மூவருஞ்சேர்ந்தே காட்சி யளிக்கிறார்கள்.



வடவேசுவரன்

தவக்கோலத்தில் இருக்கிறார். மேலும் படியேறி இரண்டாவது தளம் சென்றால் அங்கே நின்ற கோலத்தில் சௌம்ய நாராயணன் இருக்கிறார். அதற்கும் அடுத்த மூன்றாவது தளத்தில்தான் இருந்த கோலத்தில் ஸ்திதநாராயண வைகுண்டநாதன் கோயில்கொண்டிருக்கிறான். எல்லோரும் சுதையாலான வடிவங்களே. கோயிலின் தென்புறத்திலே இரணியனோடு யுத்தஞ் செய்யும் மூர்த்தியும் வடபுறத்திலே இரணியனை வதம் புரியும் நரசிம்மரும் சிலை உருவில் இருக்கிறார்கள். இவர்களையே தக்ஷிணேசுவரன், வடவேசுவரன் என்று அழைக்கிறார்கள்.

பிரதான கோயிலின் தென் பகுதியிலேதான் தாயார் சந்நிதி இருக்கிறது. தாயாரைத் திருமா மகள் என்கிறார்கள்.

இக் கோஷ்டியூரிலிருந்துதான் கதம்ப முனிவர் பிரும்மாவை நோக்கித் தவம் புரிகிறார். அவர் தவத்தை மெச்சிப் பிரும்மா அவர் முன் தோன்றுகிறார். கதம்ப முனிவரோ, பெருமாளைப் பாற்கடலில் பள்ளி கொண்ட கோலத்திலும் தேவர்களைக் காக்க நின்ற கோலத்திலும், இரணியனை வதம் செய்ய ஆலோசனை சபை கூடியபோது இருந்த கோலத்திலும், இன்னும் இரணியனோடு போர்புரிந்த கோலத்திலும், அவன் உடல் கிழித்து உதிரம் குடித்த கோலத்திலுமே காண வேண்டும் என்கிறார். (ஒன்றே ஒன்று இதற்குப் பிரும்மாவை நோக்கித் தவம் கிடப்பானேன். பரந்தாமனையே நோக்கித் தவங் கிடந்திருக்கலாமே!) பிரும்மாவும் கதம்ப முனிவர் வேண்டியபடியே விசுவகர்மன் முதலிய தச்சர்களைக் கொண்டு இக் கோயிலை அமைக்கவும், சிறந்ததொரு விமானம் அமைக்கவும் உத்தரவிட்டிருக்கிறார். அவர்களும் மூன்று தள விமானம், மூன்று பதங்களுடன் கூடிய மூலமந்திரம் போலவும் மூன்றெழுத்துக்களுடன் கூடிய பிரணவம் போலவும் அமைத்துக் கட்டி முடிக்கிறார்கள்.

கோயிலின் அடித்தளத்தில்தான் பெருமானின் சயனத் திருக்கோலம். உரகமெல்லணையான் என்ற பெயரோடு அறிதுயில் அமர்ந்திருக்கிறான். இவனையும் முந்திக் கொண்டு ஒரு சிறு கோயிலில் சிவபிரான் எழுந்தருளியிருக்கிறார். இவரை வலம் வந்தே நாம் கோயிலின் பிரதான மண்டபத்தில் நுழைகிறோம். அங்கு நம் கண் முன் நிற்பவர் நர்த்தன கிருஷ்ணன். காளிங்க நர்த்தனனாக நிற்கிறார். இனி கோயிலின் முதல் தளத்தில் ஏறி அங்கு துயில் கொள்ளும் உரக மெல்லணையானைக் காணலாம். இப்பள்ளி கொண்டானின் தலைமாட்டிலேதான் கதம்ப மகரிஷி

நிலமகள் செவ்வி
தோய வல்லான்
திருமா மகளுக்கு
இனியான்

என்று தானே பெருமானை அழைக்கிறான் மங்கை மன்னன். இன்னும் இங்குள்ள உத்சவமூர்த்தி வெள்ளியால ஆனவன் என்பதையும் மங்கை மன்னனே,

வெள்ளியான் கரியான்
மணிநிற வண்ணன்
விண்ணவர் தமக்கு இறை, எமக்கு
எள்ளியான் உயர்ந்தான்
உலகேழும் உண்டு உமிழ்ந்தான்.

என்றே பாடுகிறான்.

இக்கோயிலின் மூன்றாவது தளத்தில் ஏறியதும் அங்குள்ள விமானத்தையும் காணலாம். இதனை அஷ்டாங்க விமானம் என்பர். அஷ்டாக்ஷர மந்திரத்தின் அறிகுறியாக விளங்குவதே இந்த விமானம். இந்த விமானத்தின் தென் பக்கத்து மதிலிலேதான் ராமானுஜரது சிலை திசையை நோக்கிய வண்ணம் உபதேசக் கிரமத்தில் இருக்கிறது. இன்னும் தெற்காழ்வான் சந்நிதிக்கு முன்னால் ராமானுஜரும், திருக்கோஷ்டி நம்பிகளும் குரு சிஷ்ய பாவத்தில் எதிர் எதிராக எழுந்தருளியிருக்கின்றனர். இராமானுஜர் திருக்கோஷ்டியூர் நம்பிகளிடம் உபதேசம் பெற பதினெட்டுத் தடவை இத்தலத்துக்கு வந்திருக்கிறார். நம்பியும் பதினேழு தடவைகள் தட்டிக் கழித்திருக்கிறார். கடைசியில் ராமானுஜர் பிடிவாதமாக இருக்கவே, நம்பி ஒரு நிபந்தனையுடன் திருமந்திர



கோயிலும் விமானமும்

உபதேசம் செய்ய இசைகிறார். நிபந்தனை இதுதான். அவர் கூறும் மந்திரத்தை ஒருவருக்கும் சொல்லிக் கொடுக்கக் கூடாது என்பதே. குருவின் நிபந்தனைக்கு உட்பட்டே உபதேசம் பெறுகிறார் ராமானுஜர். ஆனால் உபதேசம் பெற்ற உடனேயே அஷ்டாங்க விமானத்தில் ஏறி ஊராரை யெல்லாம் 'வாருங்கள் வாருங்கள்' என்று கூவி அழைத்து, தாம் பெற்ற இன்பத்தை உலகிலுள்ளோரும் பெறட்டும் என்று மந்திர உபதேசம் செய்து விடுகிறார். தான் ஒருவன் குருவின் கட்டளையை மீறியதால் நரகம் புகுவதானாலும், உலகம் உய்யட்டும் என்ற நல்லெண்ணம் அவரிடம் இருந்ததை யறிந்த நம்பிகளும் அவரை அன்று முதல் எம்பெருமானார் என்றே அழைக்கிறார்.

பெரியாழ்வாரது வாழ்வோடு இத்தலம் நெருங்கிய தொடர்பு உடையது. ஸ்ரீவில்லிப் புத்தூர்வாசியான பெரியாழ்வார் இத்தலத்துக்கு வந்திருக்கிறார். இங்கு ராஜ புரோகிதராகவும், பரம பாகவதராகவும் இருந்த செல்வநம்பியைக் கண்டு அளவளாவி யிருக்கிறார். இருவரும் சேர்ந்து ஸ்ரீ ஜயந்தி நாளிலே திருக்கோட்டியூர்த் திருமாலை வணங்க அவரது எண்ணமெல்லாம் துவாபரயுகத்திலே சென்றடைந்திருக்கிறது. கோட்டியூர் நந்தகோபன் மாளிகையாகவும் அங்குள்ள கோகுலம், ஆய்ப்பாடியாகவும், கோயிலில் உள்ள நர்த்தனமூர்த்தி கண்ணனாகவும் காட்சி கொடுத்திருக்கின்றனர். அப்படி அவர் பெற்ற அனுபவத்தில்தான்,

வண்ணமாடங்கள் சூழ் திருக்கோட்டியூர்
கண்ணன் கேசவன் நம்பி பிறந்தினில்
எண்ணெய் சுண்ணம் எதிர் எதிர் தூவிடக்
கண்ணன் முற்றம் கலந்து அன்று
ஆயிற்றே

என்று தொடங்கும் பாடல்களைப் பாடி மகிழ்ந்திருக்கிறார். இத்தலத்திலுள்ள பரம பாகவதர்களையும் நினைந்து நினைந்து,

பூதம் ஐந்தொடு வேள்வி ஐந்து
புலன்கள் ஐந்து, பொறிகளால்
ஏதமொன்றும் இலா வண்கையினர்கள்
வாழ்திருக் கோட்டியூர்
நாதனை, நரசிங்கனை, நவின்று
ஏத்துவார்கள் உழக்கிய
பாததூளி படுதலால் இவ்
வுலகம் பாக்கியம் செய்ததே.

என்றும் பாடி யிருக்கிறார். இத்தலத்துப் பெருமாளை, பெரியாழ்வாரையும் மங்கை மன்னனையும் தவிர, பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசை ஆழ்வார் மூவரும் மங்களாசாசனம் செய்திருக்கின்றனர்.

இக்கோயிலில் நிறையக் கல்வெட்டுக்கள் உண்டு. ராஜராஜசோழனது கல்வெட்டில், இக் கோயிலிலுள்ள செவியைத் திரு மயான தேவன் என்று குறிப்பிட்டிருக்கிறது. முதல் குலோத்துங்கன் காலத்திய கல்வெட்டு ஒன்றும், கீழைத் திருநிலையில் இருக்கும் உரக மெல்லணையான் கோயிலில் நந்தா விளக்கு எரிப்பதற்கு ஏற்படுத்தப்பட்ட நிபந்தமும் காணப்படுகின்றன. திருமயத்தில் உள்ள கல்வெட்டின்படி ஒன்றும் இங்கிருக்கிறது. அதன்படி நாராயண ஸ்ரீ குமாரபட்டர் என்பவர் இரண்டு கோவில்களுக்கும் உள்ள வழக்கை எப்படித் தீர்த்து வைத்தார் என்பதும் தெரிகிறது. இந்தப் பஞ்சாயத்துக்கு ஹொய்சல வீரசோமேசுவரனின் பிரதிநிதி தலைமை வகித்தான் என்றும் அறிகிறோம். இந்தக் கல்வெட்டு சுந்தர பாண்டியனின் காலத்தியது. இதனையெல்லாம் இக்கோயில் கி. பி. பத்தாம் நூற்றாண்டிலேயே பிரசித்தமாயிருந்திருக்கிறது என்பதையுமே உணர்கிறோம்.

வங்கம் என்றும் மக்கள் மனத்தில் நின்று நிலவும் பெயர் பெற்று விட்டது. கவி ரவீந்திரரைப் பாரத நாட்டுக்கு, ஏன் அகில உலகுக்குமே படைத்தளித்த பாக்கியம் பெற்றதல்லவா? கீதாஞ்சலிமூலம் அகில உலகப் புகழ்பெற்று நோபெல் பரிசும் பெற்று இந்தியாவின் பெருமையை உயர்த்திய மகாகவி டாகுரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளில் சிலவற்றை அடுத்த பக்கத்திலுள்ள புகைப்படங்களில் காணலாம்.

1. சுதேசி இயக்கத்தின் தலைவராகத் தோற்றமளிக்கிறார் குருதேவர். 2. உலகமகா கவிஞர் பெருமானும், மாநிலத்தை வாழ்விக்க வந்த மகாத்மாவும். 3. பதினான்கு வயதில் கவியரசர் டாகுரின் முதல் புகைப்படம். 4. 'வால்மீகி பிரதிபா' என்ற தமது நாடகத்திலே மகாகவி வான்மீகி பாத்திரமேற்று நடித்துக் கவிஞர் பெருமான் நாடகக் கலைஞராகத் தோற்றமளிக்கிறார். 5. தமது அருமைத் திரு மனைவியார் மிருணாளினி தேவியுடன் ரவீந்திரர். 6. அமரசிருஷ்டிகளை உருவாக்கிய குருதேவருக்கு வாழுமில்லமாகத் திகழ்ந்த 'உத்தராயன்'. 7. கலைவளர்த்துக் கனிந்த கவியரசர் டாகுர்.


3
4
5
6
7



நரிவேட்டை 4
கதை : ஜெயந்தி
சித்திரம் : வினு
குமாருக்குச் சந்தேகம் உண்டாகும் வகையில் நடந்து கொண்டதற்காகக் கிழவன் டெஸிமோவைக் குள்ளநரிகளின் தலைவன் கோபித்துக் கொள்கிறான்.
குமாரிடமிருந்து டில்லியில் கவரப்பட்ட இந்தக் குறிப்புக்கள் என்ன சொல்கின்றன, தெரியுமா?
நம்மிடையே ஒரு துரோகி இருப்பதைத்தான்..
ஆனால் அந்தத் துரோகி, குமாரைச் சந்திக்கா-மல் இருக்கவேண்டிய ஏற்பாடுகளைச் செய்தாகி விட்டது! இதோ பார்!
தாகம்! தண்ணீர்!
அடப்பாவிகளா! ரஹீமைச் சித்திரவதை செய்கிறீர்களே!
ஹி ஹி ஹி
கிழவன் வெளியேற, தலைவன் கட்டளைப்படி இரட்டையர் அவன் அறியாமல் அவனைப் பின் தொடர்கின்றனர்.
உன்னையும் எச்சரிக்கிறேன் டெஸிமோ! எனக்கு ஏமாற்ற மனிக்காதே!


கிலன்மார்க் ஓட்டலில்.
அப்பா! ஏன் உங்கள் உடம்பு இப்படி நடுங்குகிறது?
ஒன்றுமில்லை லின்யி!
எப்படியாவது இந்த அக்கிரமத்துக்கு ஒரு முடிவு காண வேண்டும். நண்பன் ரஹீமை விடுவிக்க வேண்டும்.
குமாரைக் கண்டு வரக் கிளம்புகிறாள் லின்யி.......
லின்யி! குல்மார்க்கில் தங்கியிருக்கிறான் குமார் என்றாயே! அவனை நாளைக் காலை எட்டு மணிக்கு அந்த ஓட்டல் வாசலில் பார்ப்பதாய்ச் சொல்லு....
ஆகட்டும், அப்பா
கிழவனை நான் கவனித்துக் கொள்கிறேன். நீ இவள் பின்னோடு போ!
சில நிமிஷங்களுக்குப் பின்...
உங்கள் அறைக்குவர அப்பா தயங்குகிறார். நாலுபேருக்கு மத்தியில் தெருவில் நடந்தவாறே பேசினால் பயமில்லையாம்.


அன்று துரத்தி அடித்தவர் இன்று எதற்குக் குழைகிறார்?
தெரியவில்லையே
இவளை முற்றிலும் நம்புவதற்கில்லை! ஆனால் நம்புவது போல் பாசாங்கு செய்வது நமக்கு நல்லது.
இதையெல்லாம் கேட்டு விட்டு ஓர் உருவம் அங்கிருந்து மெல்ல நழுவுகிறது
சரி, வின்மி! அவர் விருப்பப்படி செய்கிறேன்.
வழக்கம் போல மாலை நேரம் உல்லாசமாகக் கழிகிறது வின்மிக்கு.
அப்பா ஏதோ தகாத செயல்களில் ஈடுபட்டிருக்கிறார் என்று ஊகிக்கிறேன். அவருக்கு ஆபத்து ஏதும் நேராமல்....
பாது காக்க முயலுகிறேன்!
குமார்! நீங்கள் வேடிக்கையாகப் பொழுது போக்கக் காலிம் பாங்குக்கு வரவில்லை என்று என் இதயம் கூறுகிறது.
சாமர்த்திய சாலிதான் இந்த வின்மி! நாம் ஏமாறக் கூடாது
உங்களை அபாயம் சூழ்வதாகவும் தோன்றுகிறது. ஜாக்கிரதை-யாக இருப்பீர்களா?
என்னிடம் உனக்கேன் இவ்வளவு அக்கறை?
இன்னுமா என்னை நீங்கள் புரிந்து கொள்ளவில்லை?
தொடரும்

மணிபல்லவம்

32 - மாறித் தோன்றிய மங்கை



ஆத்திரத்தோடு திரும்பிச் கரமஞ்சரியின் தந்தையை உறுத்துப் பார்த்தான் இளங்குமரன். அவனுடைய கையை அழுத்திப் பற்றியிருந்த அவர் பிடி இன்னும் தளரவில்லை.

"கையை விடுங்கள், ஐயா!" என்று அவன் கூறிய சொற்களைக் கேட்டு அவர் மெல்ல நகைத்தார். அந்த நகை இளங்குமரனின் கோபத்தை இன்னும் வளர்த்தது. உடனே விரைவாக ஓங்கி உதறித் தன் கையை அவருடைய பிடியிலிருந்து விடுவித்துக்கொண்டான் அவன். கரமஞ்சரியின் தந்தை கோபப்படாமல் அதே பழைய நகைப்புடன் அவனை நோக்கிக் கேட்டார்:


"யாருக்கும் பிடி கொடுக்காத பிள்ளையாயிருப்பாய் போலிருக்கிறதே?"

"பிடித்தவர் பிடியில் எல்லாம் சிக்கிச் சுழல்வதற்கு நாம் அடிமையில்லை. நீங்கள் ஆண்டானும் இல்லை."

"நீ பொதுவாகப் பேசுவதற்கு வாய் திறந்தாலே உன் பேச்சில் ஒரு செருக்கு ஒலிக்கிறது, தம்பீ! ஆத்திரத்தோடு பேசினால் அதே செருக்கு மிகுந்து தோன்றுகிறது. ஆனால் இப்போது யார் முன்னால் நின்று என்ன பேசுகிறோம் என்று நீ கவனமாக நினைவு வைத்துக் கொண்டு பேசுவது தான் உனக்கு நல்லது."

"எங்களைப் போன்ற அநாதைகளுக்குச் செல்வமில்லை: சுகபோகங்கள் இல்லை. இந்தச் செருக்கு ஒன்றுதான் மீதமிருக்கிறது. இதையும் விட்டுவிடச் சொல்கிறீர்களே! எப்படி ஐயா விட முடியும்?"

அப்போது அந்த இருள் மயங்கும் வேளையில் எந்தச் சூழ்நிலையில் எவர் முன்பு நின்று பேசிக்கொண்டிருக்கிறோம் என்பது இளங்குமரனுக்கு நன்றாகப் புரிந்துதான் இருந்தது. தனிமையான ஆலமுற்றத்து மணல் வெளியில் கரமஞ்சரியின் தந்தையும் அவருக்குத் துணைபோல் வந்திருந்த ஒற்றைக் கண் மனிதனுமாக எதிரே நிற்கும் இருவரும் தனக்கு எவ்வளவு பெரிய தீமையையும் செய்யத் தயங்காதவர்கள் என்பதை உணர்ந்திருந்தும் இளங்குமரன் அஞ்சவில்லை. ஊன்றிச் சிந்தித்துப் பார்த்த போது அன்று மாலை வேளையில் தொடக்கத்திலிருந்து அங்கு நடந்தவை அனைத்துமே திட்டமிட்டுக் கொண்டு செய்யப்பட்ட சூழ்ச்சியாக இருக்குமோ என்று சந்தேகப்பட்டான் இளங்குமரன்.



நா. பார்த்தசாரதி

சற்று முன் படைக்கலச் சாலையின் திட்டி வாயிற்கதவருகே சுரமஞ்சரியும் அவள் தோழியும் வருவது போல் போக்குக் காட்டி விட்டு மறைந்தது கூடத் தன்னை உள்ளிருந்து வெளியே வரவழைப்பதற்காகச் செய்யப்பட்ட தந்திரமாக இருக்குமோ என்றும் இளங்குமரன் எண்ணினான். இவ்வாறு எண்ணிக் கொண்டே அந்தப் பெண்கள் எங்காவது தென்படுகிறார்களா என்று மீண்டும் நான்கு புறமும் தன் கண் பார்வையைச் செலுத்தினான் அவன். அப்போது சுரமஞ்சரியின் தந்தை ஏளன மாகச் சிரித்துக் கொண்டே அவனை நோக்கிக் கேட்டார் :

" எதற்காக இப்படிச் சுற்றும் முற்றும் பார்க்கிறாய் என்று எனக்குத் தெரியும், தம்பீ ! 'பெண்களுக்குப் பின்னால் துரத்திக் கொண்டு வந்து இப்படி இந்த ஆண்களுக்கு முன்னால் வகையாக மாட்டிக் கொண்டு விட்டோமே' என்று தானே பார்க்கிறாய் ?"

" இன்னும் ஒரு முறை அப்படிச் சொல்லாதீர்கள், ஐயா! பெண்களுக்குப் பின்னால் துரத்திக் கொண்டு போகிற வழக்கம் எனக்கு இல்லை. அநாவசிய மாக உங்கள் பெண்தான் எனக்குப் பின்னால் விடாமல் துரத்திக் கொண்டு வருகிறாள். நான் அதை விரும்பவில்லை. வெறுக்கிறேன். என்னைத் தேடிக் கொண்டோ, துரத்திக் கொண்டோ உங்கள் பெண் இனிமேல் வரக்கூடாது என்று கண்டித்துச் சொல்வதற்காகத் தான் இப்போது நான் வந்தேன்."

" அதற்கு இப்போது அவசியமில்லை தம்பீ ! நீ யாரைக் கண்டிக்க வேண்டுமோ, அவள் இப்போது இங்கு வர வில்லை. அவள் வரும்போது நன்றாகக் கண்டித்துச் சொல்லி அனுப்பு. நீ அப் படிக் கண்டிப்பதைத்தான் நானும் வர வேற்கிறேன்" என்று அவர் பதில் கூறியபோது இளங்குமரன் பொறுமை யிழந்தான்.

"ஏன் ஐயா இப்படி வாய் கூசாமல் பொய் சொல்லுகிறீர்கள் ? உங்கள் பெண் சுரமஞ்சரி தன் தோழியுடன் இப்போது இந்த வழியாக வந்ததை நான் நன்றாகப் பார்த்தேனே. 'வர வில்லை' என்று நீங்கள் பொய் சொல்லு கிறீர்களே...?"

" நான் பொய் சொல்லுவதற்குப் பல சமயங்கள் நேர்ந்திருக்கின்றன, தம்பீ. சில சமயங்களை நானே ஏற்படுத் திக் கொண்டதும் உண்டு. அவற்றுக் காக நான் வருத்தமோ, வெட்கமோ அடைந்ததில்லை. இனியும் அப்படி பொய் கூறும் சந்தர்ப்பங்கள் ஏற்பட் டாலும், ஏற்படுத்திக் கொண்டாலும் அவற்றுக்காக நான் வெட்கமடையப் போவதில்லை. நான் பெரிய வாணிகன். மலை மலையாகச் செல்வத்தைக் குவித்துக் கொண்டிருப்பவன். உண்மையை நினைத்து, உண்மையைப் பேசி உண்மை யைச் செய்து செல்வம் குவிக்கமுடியாது.

'நல்லவை எல்லாஅந் தீயவாம், தீயவும் நல்லவாம் செல்வம் செயற்கு' ,

என்று செல்வம் செய்வதற்கு வகுத்திருக் கும் விதியே தனி வகையைச் சேர்ந்தது, தம்பீ ! இந்த நகரில் எவரும் பெறுவ தற்கு அரிய எட்டிப் பட்டமும், எண்ணி அளவிட முடியாத பெருஞ் செல்வமும் பெற்று மாபெரும் சோழ மன்னருக்கு அடுத்தபடி வசதியுள்ள சீமானாயிருக் கிறேன் நான். ஆனால் என்னுடைய இந்தச் செல்வத்துக்கு அடியில் நியாய மும், நேர்மையும், உண்மையும் தான் தாங்கிக் கொண்டிருக்க வேண்டுமென்று நீ நினைத்தால் அது பொய். நான் குவித்திருக்கும் செல்வத்தின் கீழே பல ருடைய நியாயம் புதைந்து கிடக்கலாம். அதைப் பற்றியும் எனக்குக் கவலையில்லை; வெட்கமுமில்லை ஆனால் வாய் தவறி நான் சில உண்மைகளையும் எப்போதா வது சொல்வதுண்டு. அவற்றில் இப் போது சிறிது நேரத்துக்கு முன் உன் னிடம் கூறியதும் ஒன்று."

" எதைச் சொல்லுகிறீர்கள்?"

" என் மகள் சுரமஞ்சரியும் அவள் தோழியும் இன்று இப்போது இங்கு வரவேயில்லை என்பதை மறுபடியும் உனக்கு வற்புறுத்திச் சொல்வதற்கு விரும்புகிறேன். இதுதான் உண்மை."

"அந்தப் பெண்கள் இருவரும் இந்தப் பக்கமாக வந்ததை என் கண்களால் நானே பார்த்துவிட்டபின் நீங்கள் சொல்கிற பொய்யை மெய்யாக எப்படி ஐயா நம்ப முடியும் ?"

இளங்குமரனின் இந்தக் கேள்வியைக் கேட்டதுமே படர்ந்து முதிர்ந்த தமது முகத்தில் குறும்பும் விஷமத்தனமும் பரவச் சிரித்தார் சுரமஞ்சரியின் தந்தை. அருகிலிருந்த நகைவேழம்பரும் அதே போலச் சிரித்தார்.

" நான் சொல்வதை நீ நம்ப வேண் டாம். ஆனால் மறுபடியும் உன் கண்க ளால் நீயே பார்த்தால் நம்புவாயல் லவா?" என்று சொல்லிக் கொண்டே பக்கத்து ஆலமரத்தை நோக்கித் திரும் பிக் கைதட்டி, 'மகளே, இப்படி வா" என்று இரைந்து கூப்பிட்டார் அவர். அடுத்தகணம் பருத்த ஆலமரத்தின் அடிமரத்து மறைவிலிருந்து சுரமஞ்சரி மெல்லத் தலையை நீட்டினாள். அவள் பக்கத்தில் உடன் வந்த தோழிப் பெண்

ஹும் இருளில் அரைகுறையாகத் தென்பட்டான். இளங்குமரன் அதைக் கூர்ந்து நோக்கி விட்டு அவர் பக்கம் திரும்பிக் கேட்கலானான் :

"நன்றாகப் பாருங்கள். அதோ ஆல மரத்தடியில் சுரமஞ்சரியும் அவள் தோழியும்தானே நிற்கிறார்கள் ? சுரமஞ்சரி இங்கு வரவில்லை என்று நீங்கள் கூறியது பொய்தானே ? ஏன் ஐயா இப்படி முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கப் பார்க்கிறீர்கள் ?"

இளங்குமரனுக்குப் பதில் ஒன்றும் கூறாமல் அவன் முகத்தையே இமையாமல் பார்த்தார் சுரமஞ்சரியின் தந்தை.

"எதற்கும் இன்னொரு முறை நன்றாகப் பார்த்து விட்டுச் சொல்லுங்களேன்" என்று கூறியவாறே இளங்குமரனுக்குப் பக்கத்தில் வந்துநின்று கொண்டு ஒற்றைக் கண்ணரும் அவன் பொறுமையைச் சோதிக்கவே, அவனுக்குக் குழப்பத்தோடு கோபமும் மூண்டது.



"நிறுத்துங்கள், ஐயா! ஒற்றைக் கண்ணால் உலகத்தைப் பார்க்கிற நீங்கள், எப்படி இரண்டு கண்களாலும் நன்றாகப் பார்த்துத் தெரிந்துகொள்வது என்பது பற்றி எனக்கு அறிவுரை கூற வேண்டாம். உங்கள் இரண்டு பேருக்கும் ஏற்பட்டிருக்கிற குழப்பத்தை உங்களோடு வைத்துக் கொள்ளுங்கள். என்னையும் சேர்த்துக் குழப்பாதீர்கள். வேண்டுமானால் ஆல மரத்தடியிலிருந்து அவளை இங்கே இழுத்துக் கொண்டு வந்து நிறுத்தி, 'அவள் தான் சுரமஞ்சரி'-என்று விளக்க வேண்டியதுதான்."

"அப்படி யெல்லாம் விளக்குவதற்கு அவசியம் ஒன்றுமில்லை தம்பி! ஆலமரத்தடியில் நிற்பவள் என்னுடைய மற்றொரு மகள் வானவல்லியாகவும் இருக்கலாமே? உனக்கு ஏன் அந்தச் சந்தேகமே எழவில்லை?" என்று சுரமஞ்சரியின் தந்தை வெளிப்படையாக விட்டுச் சொல்லிச் சிரித்தபோதும் இளங்குமரன் நம்ப மறுத்து விட்டான்.

"உங்கள் பெண்கள் இரட்டையர் என்பது எனக்குத் தெரியும் ஐயா! ஆனால் இன்று இங்கு வந்திருப்பது வானவல்லி யல்லள். சுரமஞ்சரியேதான்! அவர்கள் வரும்போது இட்டி வாசலிலிருந்து நான் தான் நன்றாகப் பார்த்தேனே. நீங்களிருவரும் ஏதோ காரணத்துக்காக என்னை ஏமாற்றிச் சுரமஞ்சரியை வானவல்லியாகக் காண்பிக்க முயல்கிறீர்கள். வானவல்லி இங்கு வரவேண்டிய காரணமேயில்லை. வந்தால் சுரமஞ்சரிதான் இங்கு என்னைத் தேடி வந்து எனக்குக் கெட்ட பெயரும் வாங்கி வைப்பாள். எப்படியாவது போகட்டும். யாராக வேண்டுமானால் இருந்து தொலைக்கட்டும். எனக்கென்ன வந்தது? சுரமஞ்சரி வந்தால் என்ன? வானவல்லி வந்தாலென்ன ? இவர்கள் யாருமே என்னைத் தேடி எனக்காக இங்கு வரக்கூடாது என்பதுதான் என் கவலை. நீங்கள் பொய் கூறுகிறீர்களே என்பதற்காகத்தான் இவ்வளவு நேரம் வீணாக என் ஆற்றலையும் பேச்சையும் செலவழித்து மறுக்க முயன்றேன்" என்று மேலும் தன் கருத்தில் பிடிவாதமாக இருந்தே பேச்சை முடித்தான் இளங்குமரன்.

அருகில் நெருங்கிச் சிரித்துக் கொண்டே மறுபடியும் அவன் கைகளைப் பற்றினார் சுரமஞ்சரியின் தந்தை. முன்பு பிடித்தது போலன்றி அன்புப் பிடியாக இருந்தது இது.

"நீ சாதுரியமானவன் என்பதில் சிறிதும் சந்தேகமே இல்லை, தம்பீ ! இப்போது நாங்கள் இருவரும் உண்மையை ஒப்புக் கொண்டு விடுகிறோம். அதோ நிற்கிறவள் சுரமஞ்சரியேதான். உன்னுடைய திறமையைப் பரிசோதிப்பதற்காகத் தான் இவ்வளவு நேரம் என்னென்னவோ சொல்லி ஏமாற்ற முயன்றோம். நீ இறுதிவரை உறுதியாக இருந்து உண்மையையே வற்புறுத்தி விட்டாய். உன்னுடைய நினைவாற்றலைப் பாராட்டுகிறேன்" என்று தன் கையைப் பிடித்துக்கொண்டே தழுவிக் கொள்கிறாற்போல் அருகே நெருங்கிக் குழைந்தபோது இளங்குமரன் விலகித் தன்னை விடுவித்துக் கொண்டான்.

"கையை விடுங்கள் ஐயா! நான் யாருக்கும் பிடிகொடுக்காதவன் என்று நீங்களே ஒப்புக் கொண்டிருக்கிறீர்களே?" என்று அவரிடமிருந்து விடுவித்துக் கொண்டு இளங்குமரன் திரும்பி நடந்தபோது, "நீ யாருக்கும் பிடிகொடுக்காதவன்தான் தம்பீ ! ஆனால் இப்போது என்னிடம் சரியாகப் பிடி கொடுத்திருக்கிறாயே!" என்று புன்னகையோடு மர்மமான குரலில் கூறினார் அவர். வேறு பொருள் செய்துகொள்ள இடமிருந்தும் இந்தச் சொற்களை அவ்வளவுக்குப் பெரியனவாக மனத்தில் ஏற்றுக் கொண்டு சிந்தனையை வளர்க்காமல் வந்த வழியே

திரும்பிப் படைக்கலச் சாலையை நோக்கி நடந்தான் இளங்குமரன்.

"பட்டினப்பாக்கத்துப் பக்கமாக வந்தால் மாளிகைக்கு அவசியம் வந்து போ, தம்பீ!" என்று அவர் கூறிய உபசாரச் சொற்களையும் அவன் இலட்சியம் செய்யவில்லை. ஆனாலும் பெரிய சூழ்ச்சி ஒன்றின் அருகில் போய்விட்டு மீண்டு வந்ததுபோல் அவன் மனத்தில் ஒரு குழப்பம் இருந்தது.

இளங்குமரன் படைக்கலச்சாலைக்குள் புகுந்து திட்டிவாசற் கதவை அடைத்துக் கொள்கிற ஒலியையும் கேட்ட பின்னர் ஆலமுற்றத்தில் நின்று கொண்டிருந்த நகைவேழம்பர் தம் எதிரே நிற்கும் எட்டிப்பட்டம் பெற்ற பெருநிதிச் செல்வரிடம் இப்படிக் கேட்டார்:

"வாழ்நாளிலேயே ஒரே ஒரு தடவை உண்மையைச் சொல்ல முன் வந்திருக்கிறீர்களே என்று பார்த்து வியந்து கொண்டிருந்தேன். கடைசி விநாடியில் அதையும் பொய்யாக மாற்றி எப்படியோ முடித்து விட்டீர்களே?"

"நான் வாணிகம் செய்பவன். ஊதியம் கிடைப்பதாயிருந்தால் எதையும் எப்படியும் மாற்றிச் சொல்ல வேண்டியதுதானே? வானவல்லியைச் சுரமஞ்சரி என்று தவறாகப் புரிந்துகொண்டு சாதித்தான் அந்தப் பிள்ளை. நானும் மறுத்துத்தான் பார்த்தேன். நான் மறுக்க மறுக்க அவன் தன் பிடிவாதத்தை உறுதியாக்கினான். கடைசியில் 'அவன் சொல்லியதே மெய்' என்று ஒப்புக்கொண்டு விட்டது போல நடித்து நானும் பாராட்டினேன். என்ன காரணம் தெரியுமா, நகைவேழம்பரே? அவன் கண்களில் வானவல்லி சுரமஞ்சரியாகத் தென்படுவதைப் பயன்படுத்திக் கொண்டு நாம் சில காரியங்களைச் சாதித்துக் கொள்ளலாம்! அந்த அளவில் நமக்கு ஊதியம் தானே?' என்றார் அவர்.

"உங்கள் திட்டமெல்லாம் நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் இந்தப் பிள்ளையாண்டானை இவ்வளவு எளிதில் ஏமாளியாக்கிவிட முடியுமென்று எனக்குத் தோன்றவில்லை" என்றார் நகைவேழம்பர்.


33. பூ மழை பொழிந்தது! பூம் புனல் பரந்தது!

மறுநாள் பொழுது புலர்வதற்குச் சில நாழிகைகள் இருக்கும்போதே கதக்கண்ணன் படைக்கலச்சாலைக்கு வந்து இளங்குமரனை நீராட்டு விழாவுக்கு அழைத்துக்கொண்டு போய் விட்டான். இளங்குமரனுக்கும் அன்று தனியாகப் படைக்கலச்சாலையிலேயே அடைந்து கிடக்க விருப்பமில்லை. எனவே கதக்கண்ணன் வந்து அழைத்தவுடன் மறுப்புச் சொல்லாமல் உடன் புறப்பட்டு விட்டான்.

பூம்புகாரில் வழக்கமாக இந்திரவிழா நிறைவு நாளில் மழை பெய்வதுண்டு. சில ஆண்டுகளில் சாரல்போல் சிறிதளவு மழையோடு ஓய்ந்துவிடும். இன்னும் சில ஆண்டுகளில் மேகமூட்டத்தோடு வானம் அடைத்துக் கொண்டு தோன்றுமே தவிர மழை பேருக்குத் தூறி ஓய்ந்துவிடும். மிகச் சில ஆண்டுகளில் மட்டும் இந்திரவிழா இறுதியில் தொடங்குகிற மழை பெருங் கோடை மழையாக மாறி வளர்ந்து சில நாட்களுக்குத் தொடர்ந்து பெய்யும். ஒவ்வொரு பருவகாலத்துக்கும், அதன் சூழ்நிலைக்கும் ஏற்பத் தங்கள் வாழ்க்கையை அழகுற அமைத்துக் கொண்டிருந்த பூம்புகார் மக்கள் இதற்கு 'இந்திரவிழா அடைப்பு' என்று பெயர் சூட்டியிருந்தார்கள்.

அன்று காலை இந்திர விழா அடைப்புப் பூம்புகாரின்மேல் வானவெளியை அழகிய மேக நகைகளால் அணி செய்திருந்தது. அலங்காரக் கோலத்துடன் தலையைக் கவிழ்ந்துகொண்டு நாணி அமர்ந்திருக்கும் புதுமணப் பெண்ணைப்போல் வானம் முகில்கள் நிறைந்து கவிந்து காட்சியளித்தது. பூஞ்சிதறலாக அங்கொன்றும் இங்கொன்றுமாய்ச் சிறு தூறல் தூறிக்கொண்டிருந்தது. பொற்பட்டறையில் தான் உருக்கிய விலைமதிப்பற்ற பொன் உருக்குக் குழம்பைக் கரி படிந்த தன் உலைக்களத்துத் தரையில் வெப்ப நடுக்குடன் தாறுமாறாக ஊற்றும் கொல்லனைப்போல் வெள்ளியுருக்கி வீசிய மின்னல்கள் கரிய வானில் நீண்டு ஓடிச் சரிந்து மறைந்து கொண்டிருந்தன. கோடையிடிகள் வேறு கொட்டி முழக்கின. வானமும் இருவிழாக் கொண்டாடியது.

போது விழித்தும் புலரி விழியாத வானின்கீழ் இரவு விடிந்தும் இருள்



'நல்லவேளை, எப்படியாப்பட்ட அழுக்கையும் தொலைச்சுக்கட்ட வழி இருக்கு என் கையிலே... ஸன்லைட்டைத்தான் சொல்றேன் .. பளிச்சன்னு வெளுப்பான சலவை -- சுத்தம்னு அதான்! துரைதானே? வேண்டிய மட்டும் கொழிச்சுக்கும்; கேக்கணுமா, சுளுவா முடிஞ்சுடும் வேலை. கண்டிப்பாச் சொல்றேன், ஸன்லைட்டுக்கு மிஞ்சி இன்னொரு சோப்பை இனிமேலேதான் பாக்கணும்.'

பம்பாய் வாசியான ஸ்ரீமதி ஆத்மராம் செய்யும் சலவை: தூய, மென்மை வாய்ந்த ஸன்லைட் சலவை. ஸன்லைட் உங்கள் துணிகளையும் ஆதரிப்பதாக!

ஸன்லைட்



ஸன்லைட் அருமை -- நம் துணிகளுக்கு நன்மை!

S.29-X52 TM

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

விடியாத அந்த நேரத்தில் இளங்குமரனும், கதக்கண்ணனும் குதிரைகளில் சென்று கொண்டிருந்தார்கள். குளிர்ந்த சூழலும் மழைச்சூல் கொண்ட வானமும். அந்த நேரத்தின் அழகும், மக்களெல்லாம் காவிரி முன்துறைக்குப் போயிருந்ததனல் நகரமே அதிக ஒலிகளற்றிருந்த சூழலும். காவிரிப்பூம் பட்டினத்தைக் கண் நிறைந்த கனவு நகரமாகக் காட்டின. அந்த அழகை இளங்குமரன் ஆழ்ந்த சிந்தனையுடன் அநுபவித்துப் பார்த்து மகிழ்ந்தான்.

''மனிதக் கும்பலும் அவர்களின் ஓசைகளும், பூசல்களும் பிரிந்து தனியாகத் தெரியும்போது இந்த நகரம் எவ்வளவு அழகாக இருக்கிறது பார்த்தாயா, கதக்கண்ணு?'' என்று மனம் நெகிழ்ந்த குரலில் கூறினன் இளங்குமரன். இயக்கமும், ஓசை ஒலிகளுமற்றிருந்த கோலத்தில் நகரமே வானத்திலிருந்து நீள நெடுந்திரை கட்டிச் சுற்றிலும் தொங்க விட்ட ஓவியம்போல் தோன்றியது அவனுக்கு.

அவர்கள் குதிரைகள் நகரின் ஒரு பகுதியில் இருந்த 'உலக அறவி' என்னும் பொது மன்றத்தைக் கடந்தபோது, அந்த மன்றத்தின் இருபுறமும் அகன்ற திண்ணைகளில் முடங்கிக் கிடந்த பல நூறு பிச்சைக்காரர்களைக் கண்டு வருந்தினன் இளங்குமரன். காவிரிப்பூம் பட்டினத்தில் வாழ்வதற்கு வேறு வழிகளின்றி யாசிப்பதையே தொழிலாகக் கொண்டு வயிறு துடைக்கும் பாமரர்களின் உறைவிடம்தான் இந்த உலக அறவி. 'சோறூட்டும் விழாவுக்குத் தவிக்கும் இவர்களுக்கு நீராட்டுவிழா ஏது?' என்று எண்ணிய போது, 'உலகம் முழுவதிலும் ஏழைகளே இல்லாதபடி செய்துவிட வேண்டும்' போல அந்தக் கணமே அவன் மனத்திலும் தோள்களிலும் ஒரு துடிப்பு ஏற்பட்டது. குதிரையை நிறுத்திக் கீழே இறங்கி உலக அறவியின் திண்ணையை ஒட்டினற்போலச் சிறிது தொலைவு நடந்தான் இளங்குமரன். முன்னல் சென்றிருந்த கதக்கண்ணனும் குதிரையைத் திருப்பிக் கொண்டு வந்து இறங்கி இளங்குமரனேடு பின்னல் நடந்து சென்றான்.

தங்கள் பிச்சைப் பாத்திரங்களையே தலைக்கு அணைவாக வைத்துக் கொண்டு உறங்குபவர்களையும், பாத்திரமுமில்லாமல் வெறும் முழங்கையை மடித்து வைத்துக் கொண்டு உறங்குபவர்களையும் வரிசையாகப் பார்த்துக் கொண்டே நடந்தான் இளங்குமரன். 'என்னைப் போல் செல்வம் சேர்ப்பவர்களுக்கு வகுத்திருக்கும் விதியே தனி வகையைச் சேர்ந்தது. நாங்கள் உண்மையைப் பொய்யாக்குவோம். பொய்யை உண்மையாக்குவோம்' என்று முதல் நாள் மாலை தன்னிடம் ஆலமுற்றத்தில் திமிர் கொண்டு பேசிய செல்வரையும், இப்போது கண்டு கொண்டிருக்கும் உலக அறவிப் பிச்சைக்காரர்களையும் சேர்த்து நினைத்துப் பார்த்தான் இளங்குமரன். படைத்தவனே கைத் தவறுதலாக ஏதோ பிழை செய்து விட்டது போல் உணர்ந்து மனம் கொதித்தான் அவன். சிறிது நேரத்துக்கு முன் கனவு நகரம் போல் அழகு கொண்டு தோன்றிய காவிரிப்பூம் பட்டினத்தின் தோற்றம் இப்போது அப்படித் தோன்றவில்லை அவனுக்கு.

'' என்ன பார்க்கிறாய், இளங்குமரா? இங்கே படுத்திருப்பவர்களில் யாரையாவது தேடுகிறாயா?'' என்று கேட்டான் கதக்கண்ணன்.

'' படைத்தவனின் அநியாயத்தைப் பார்க்கிறேன், நியாயத்தைத் தேடுகிறேன். இவர்களுக்குக் கிடைக்க வேண்டிய சோறும், துணியும், வீடும்,

வாழ்வும், வேறு எவர்களிடம் இருக்க முடியுமென்று பார்க்கிறேன்" என்று குமுறியபடி பதில் வந்தது இளங்குமரனிடமிருந்து. கதக்கண்ணனுக்கு இவையெல்லாம் புதிய பேச்சுக்களாயிருந்தன. எதை விளங்கிக் கொண்டு எப்படி மறுமொழி கூறுவதென்றும் அவனுக்குத் தெரியவில்லை. ஆகவே மௌனமாக இளங்குமரனைப் பின் தொடர்ந்தான். அவர்கள் உலக அறவிக்கு அப்பாலிருந்த சக்கரவாளத்தையும், சம்பாபதி கோவிலையும் கடந்து மேலே சென்றார்கள்.



'என் தந்தையும், முல்லையும் நம் வரவை எதிர்பார்த்து அங்கே கழார்ப் பெருந்துறையில் காத்துக் கொண்டிருப்பார்கள். நாம் விரைவாகச் செல்வது நல்லது" என்று நடுவில் ஒருமுறை இளங்குமரனை அவசரப்படுத்தினான் கதக்கண்ணன்.



பூம்புகார் வீதிகளில் மீண்டும் அவர்கள் குதிரைப் பயணம் தொடர்ந்தது. 'இலஞ்சி மன்றம்' என்னும் பெரிய ஏரியின் கரையருகே வந்ததும், இளங்குமரன் மீண்டும் குதிரையை நிறுத்திக் கீழே இறங்கினான். அந்தக் குளத்தின் கரையிலுள்ள அம்பலத்தில் மேடைகளிலும், திண்ணைகளிலும் காவிரிப்பூம்பட்டினத்தின் அநாதை நோயாளிகள் நிறைந்து கிடந்தார்கள். மண்ணின் மேல் மனிதர்களுக்கு எத்தனை வகைக் கொடிய நோய்கள் எல்லாம் வர முடியுமோ, அத்தனை வகை நோய்களும் வந்த நோயாளிகள் இலஞ்சி மன்றத்தில் இருந்தார்கள். தூக்கம் வராமல் அலறித் தவிக்கும் நோயாளி, கூச்சமிழந்து, வலியினால் துடிக்கும் நோயாளி, தொழு நோயாளி, புழு நோயாளி, நொண்டி, கூன் குருடு, இன்னும் சொல்லி அடங்காத நோயாளிகளையெல்லாம் சேர்த்துப் பார்க்க முடிந்த இடம் இலஞ்சி மன்றம். அழுகை ஒலி, வேதனைக் குரல், அலறல், அரற்றல் நிறைந்த அந்தக் குளக் கரையில் நின்று சிந்தித்தபோது இளங்குமரனுக்கு உலகமே இருண்டு தோன்றியது. உலகமே நோய் மயமாகத் தோன்றியது.

"சொப்பனபுரியாகவும், கந்தர்வ நகரமாகவும் இந்தப் பட்டினத்தை வருணனை செய்து பாடியிருக்கிற கவிகளைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய், கதக்கண்ணா?"

"நினைப்பதற்கு என்ன இருக்கிறது? உள்ளவற்றில் நல்லவற்றைச் சிறப்பித்து மட்டும் பாடி யிருக்கிறார்கள் அவர்கள். மரபும் அதுதானே?"

"மரபாக இருக்கலாம்! ஆனால் நியாயமாக இருக்க முடியாது. சோழ மன்னரும் அவருடைய அரண்மனையும்





சுற்றி யிருக்கும் எட்டிப் பட்டம் பெற்ற செல்வர்களும்தான் காவிரிப் பூம்பட்டினம் என்றால் இந்தக் காவிரிப் பூம்பட்டினம் மிகவும் சிறியதாகக் குறுகிவிடும். செல்வமும் பீடும் தவிர வறுமையும் நோயும்தானே மிகுதியாக இருக்கின்றன? அவற்றை ஏன் மறைக்க வேண்டும்?''

கதக்கண்ணன் இதற்கு மறுமொழி சொல்லி மேலே பேச்சைத் தொடர இடங்கொடுக்காமல் குதிரையில் தாவி ஏறினான். இளங்குமரனும் தன் குதிரையில் ஏறிக் கொண்டான். அவன் மனத்தில் பல வினாக்கள் ஏறிக் கொண்டு துளைத்தன. அவற்றுக்கு விடை கேட்கவும், விவாதம் செய்யவும் கதக்கண்ணன் ஏற்புடையவனாகத் தோன்றாததால் தன் மனத்திலேயே அவற்றைச் சிந்தித்துக்கொண்டு செல்வதைத் தவிர வேறு வழி அவனுக்குப் புலப்படவில்லை.

அவர்கள் காவிரியின் கழார்ப் பெருந்துறைக்குப் போகும் திருமஞ்சனப் பெருவழியில் நுழைந்த போது நன்றாக விடிந்து ஒளி பரவத் தொடங்கியிருந்தது. முன்பு பூஞ்சிதறலாக இருந்த மழைத் தூற்றல்







இப்போது சாரலாகப் பெய்து கொண்டிருந்தது. காவிரித் துறை நெருங்க நெருங்கச் சாலையில் கூட்டமும், தேரும், யானையும், குதிரையும் மிகுந்து நெருக்கமான போக்குவரவு இருந்ததனால் அவர்களால் தங்கள் குதிரைகளை விரைந்து செலுத்த முடியவில்லை. மெல்லச் செலுத்திக் கொண்டு சென்றார்கள்.


காவிரியில் நீராடுவதற்காகத் தோழிகள் வாசனைத் தைலங்கள் பூசவும், ஆலவட்டம் வீசவும், பட்டுக் குடை பிடிக்கவும், பணிப் பெண்கள் புடைசூழச் செல்வக்குடி நங்கையர்கள் அலங்காரமான சூழ்நிலையின் நடுவே விளங்கித் தோன்றினர். தங்களுக்கு நீந்தத் தெரியாததனால் தோழிகளின் கைகளைப் பிடித்துக் கொண்டு ஒருவரோடொருவர் கரங்கோத்தபடி நீரில் இறங்கின செல்வப் பெண்களைக் கரையிலிருந்த நீந்தத் தெரிந்த பெண்கள் நகைத்து ஏளனம் செய்தனர். தண்ணீரில் இறங்க மனமின்றிச் சாரலில் நனைந்துகொண்டே கரையில் நின்று கொண்டிருந்தவர்களை அவர்கள் நண்பர்கள் பின்புறமாக வந்து பிடித்துத் தள்ளி வேடிக்கை பார்த்தார்கள். மற்றொரு புறத்தில் ஆண்களும், பெண்களுமாக இளம்பருவத்தினர் சிறுசிறு படகுகளை விரைந்து செலுத்தி எவரால் வேகமாகப் படகு செலுத்த முடிகிறதென்று தங்கள் திறமையைச் சோதித்துப் பார்த்துக் கொண்டிருந்தனர். தண்ணீர்ப் பரப்பிலேயே மிதக்கும் சிறு வீடுகளைப் போல் அணி செய்து அமைக்கப்பட்டிருந்த 'நீரணி மடம்' என்னும் படகு இல்லங்களில் மிதந்து சென்று நீராட்டு விழாவை அநுபவித்துக் கொண்டிருந்தார்கள் சிலர்.

*வாயில் நிறைய அவலை அடக்கிக் கொண்டு வாயையும் திறக்காமல் நீரையும் குடிக்காமல் உள்ளே அவலை மென்று தின்று கொண்டே வேகமாக நீந்தும் விளையாட்டு ஒன்றைப் பெண்கள் கூடி விளையாடிக் கொண்டிருந்தார்கள். அப்படி நீந்தி முதலில் வருகிறவருக்கு வெற்றி என்று முடிவு செய்வது வழக்கம். இந்த விளையாட்டு நிகழ்ந்து கொண்டிருந்த துறையில் பெண்களின் கூட்டம் கணக்கற்றுக் கூடியிருந்தது. துறையருகிலும், மணற்பரப்பிலும், எங்கும் அவல் சிதறிக் கிடந்தது. ஆவலும் பரவித் தெரிந்தது.

எல்லாருடைய உற்சாகத்தையும், ஆர்வத்தையும், தூண்டும் இந்த விளையாட்டு நிகழ்ந்து கொண்டிருந்த துறையருகே வந்ததும் இளங்குமரனும், கதக்கண்ணனும் தத்தம் குதிரைகளை நிறுத்திக் கொண்டு அவற்றில் அமர்ந்தபடியே பார்க்கலாயினர்.

அவலை வாய் நிறைய அடக்கிக் கொண்டு பெண்கள் கூட்டம் ஒன்று காவிரி நீர்ப் பரப்பில் வரிசையாக அணி வகுத்துப் புறப்பட்டு நீந்தியது. அந்த வரிசையில் பன்னிரண்டு பெண்கள் நீந்திக் கொண்டிருந்தார்கள். அவர்கள் சிறிது தொலைவு சென்றபின் இளங்குமரன் மறுபடியும் எண்ணிப் பார்த்தபோது பதினொரு பெண்கள் தான் தெரிந்தனர். 'யாரோ ஒருத்தி நீரில் மூழ்கியிருக்க வேண்டும் அல்லது சுழலில் சிக்கிக் கொண்டிருக்க வேண்டும்' என்று தோன்றியது. தனக்குத் தோன்றியதைக் கதக்கண்ணனிடம் கூறினான் இளங்குமரன். "நீரில் மூழ்கியிருந்தாலுமே நாம் என்ன செய்ய முடியும்" என்று கதக்கண்ணன் பதில் சொன்னான். "என்னால் அப்படி நினைத்துப் பேசாமல் இருக்க முடியாது! அப்புறம் நானும் ஆண் பிள்ளை என்று நிமிர்ந்து நடக்க என்ன இருக்கிறது?" என்று கூறிக் கொண்டே, குதிரையிலிருந்து கீழே குதித்து விரைந்தான் இளங்குமரன். 'வேண்டாம் போகாதே' என்று நண்பன் தடுத்துக் கூவியதை அவன் கேட்கவில்லை. **(தொடரும்)**

*இப்படி மகளிர் விளையாடும் ஆடல் ஒன்று அக்காலத்திலிருந்ததைப் **புறநானூறு** 63-வது பாடல் கூறும்.



பின்னியின் ஹனாவா ஸூட்டை அணிந்து பொலிவுடன்
விளங்குகிறார்—திருமணத்திற்கென்று தைக்கப்பட்டதானாலும்
பல வருடங்களுக்கு உழைக்கவல்லது.

பின்னியின் ஹனாவா கவர்ச்சியாகவும், வன்மையாகவுமுள்ள ஒரு உயர்தர ஸூட்டிங். பின்னியின் விசேஷ 'ஆன்டிகிரீஸ்' முறையினால் தேவையற்ற சுருக்கங்கள் தவிர்க்கப்படுகின்றன. பல சலவைகளுக்குப் பின்பும் புதிய தோற்றத்துடனேயே விளங்குகிறது.

பின்னியின் ஹனாவா நீங்கள் அணிவதற்கேற்றதொரு ஸூட்டிங்.

பக்கிங்ஹாம் & கர்னாடிக் கம்பெனி லிமிடெட்
உரிமையாளர்:
பின்னி & கம்பெனி (மதராஸ்) லிமிடெட்

QUALITY FABRICS

BINNY & CO. (MADRAS) LTD.

உங்களுக்குத்தேவையான பின்னி துணிகளை இந்த அடையாளம் காணப்படும் அனுமதிபெற்ற கடைகளிலிருந்து கண்ட்ரோல் விலைக்கே வாங்கவும்

JWT-BC HN 1212a

இன்னா செய்தார்க்கும்..

பி.எஸ்.மணி

தென்காசி ரயில் நிலையத்திலிருந்து திருக்குற்றாலம் செல்லும் சாலையில் கார் ஐம்பது மைல் வேகத்தில் ஓடிக்கொண்டிருந்தது. வளைந்து வளைந்து பாம்பு போல் நீண்டு செல்லும் சாலையில் காரும் சக்கரவட்டமிட்டுச் சென்றது. நெடிதுயர்ந்த மலைத் தொடர்களிலிருந்து குளிர்ந்த காற்று வீசி மனத்தைக் குளிரச் செய்தது. ஆனால் இதென்ன? கார் டிரைவரின் முகம் 'ஜிவ் ஜிவ்' வென்று ரத்தச் சிவப்பாக ஏன் மாறியிருக்கிறது? கார் ஏன் இப்படி நிலைகொள்ளாமல் வெகு வேகமாக வளைந்து வளைந்து பயங்கரமாகச் சாடிக் கொண்டிருக்கிறது? அந்த டிரைவருக்கு என்ன வந்து விட்டது? ஒரு வேளை அவனுக்கு மரை கழன்று பைத்தியம் பிடித்து விட்டதோ....? இருக்காது... பிறகு அவன் ஏன் இப்படிக் காரை ஓட்டுகிறான்? திருக்குற்றாலம் வருகிறவரை உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு செல்ல வேண்டுமோ?

முன் ஸீட்டில் டிரைவரோடு அமர்ந்திருந்த நான்தான் இப்படிப் பலவிதக் குழப்பங்களுக்கு உள்ளாகியிருந்தேனே தவிர, பின் ஸீட்டில் உட்கார்ந்திருந்த பாலசந்திரன் ஒரு கவலையுமின்றிக் குளிர்ந்த காற்றின் ஸ்பரிசத்தில் மெய்மறந்து போயிருந்தான்.

பாலசந்திரனைப் படாதிபதி நாயகம் பங்களாவில் இறக்கிவிட்டு, என்னை ஐந்தலைக்குக் கார அழைத்துச் சென்றது.

ஐந்தலை வந்ததும், "அப்பா! உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு குற்றாலம் வந்து விட்டோம். இனி பயமில்லை. இன்று ஏனோ எங்கள் உயிர் எங்கள் கையில் இல்லை!" என்றேன் டிரைவரிடம்.

"ஸார்! என்னை மன்னித்து விடுங்கள். இன்று நான் மனிதனிலிருந்து அரக்கனாக ஆரும்படியாகிவிட்டது. எனக்கிருந்த கோபத்தில் அந்தப் பாலசந்திரனை ஸ்டியரிங் ராடாலேயே ஒரு போடு போட்டிருப்பேன். அப்போதுதான் என் கோபம் குறைந்திருக்கும், என் மனசு நிம்மதி யடைந்திருக்கும்!" என்றான் டிரைவர். அவன் பற்களை நற நறவென்று கடித்துக் கொண்டு கூறிய சொற்கள் தணலாக வந்து விழுந்தன.

"ஏன்? என்ன நடந்தது? அந்தப் பாலசந்திரன் உனக்கு என்ன தீங்கு செய்து விட்டான்?" என்று கேட்டேன்.

"ஸார்! எனக்குப் பெரும் அவப் பெயரை ஏற்படுத்தி, இரக்க குணமற்ற அரக்கனாக நடந்து கொண்டு விட்டான், அவன்! தென்காசி ரயில் நிலையத்தில் அவன் காரில் வந்து ஏறியபோது என் நெஞ்சு எப்படித் துடித்தது, தெரியுமா? அவனைத் தீர்த்துக் கட்ட இந்தக் காரை எங்கேயாவது மரத்தில் மோதி...."

"அப்பா! நல்ல காலம்! நான் அதிகம் இன்ஷ்யூர் செய்யவில்லை. ஆயிரம் ரூபாய் தான் செய்திருக்கிறேன், என் குடும்பத்தை ஒரு வருஷத்துக்குக்கூடக் காப்பாற்றக் காணாது அது! அப்படிச் செய்யாமலிருந்தாயோ, பிழைத்தாயோ? இல்லாவிட்டால் என் குடும்பத்தாரின் சாபம் உன்னைச் சும்மா விடாது!"

"ஸார்! கோபம் பொல்லாதது என் பார்கள். ஆனால் அந்தச் சமயத்திலும் நான் உன்னுறப் பொருமினேனே தவிர அந்த அயோக்கியனிடம் ஏதாவது தவறுதலாக நடந்து கொண்டேனா? நான் அதிகம் படிக்கா விட்டாலும் எனக்கும் கொஞ்சம் மனிதப் பண்பு உண்டு!"

"ஆமாம்! இல்லா விட்டால் உனக்கு உள்ளூற இருந்த ஆத்திரத்தில் எங்களையெல்லாம் கூண்டோடு கைலாசம் அனுப்பியிருப்பாயே? அது சரி! அந்தப் பாலசந்திரன் உனக்கு என்ன தான் கொடுமை செய்தான்? அதைச் சொல்லு முதலில்!" என்றேன்.

ஐந்தலை வாசலில் கார் வந்து நின்றும் இறங்க மனமில்லாமல் டிரைவரின் மனக்கஷ்டத்தை அறிந்து கொள்வதில் ஆர்வம் மேலிட்டது. டிரைவருக்கும் தன் உள்ளத்துக்குள் பொருமிக் கொண்டிருந்த எரிமலையைக் கொட்டிவிட வேண்டும் என்று தோன்றியது.



சென்னையிலிருந்து படக்காட்சிப் பிடிப்புக்காகப் பட அதிபர் நாயகம் குற்றாலத்துக்கு வந்திருந்தார். அவரோடு படத் தொழிலில் ஈடுபட்ட பெருங் கோஷ்டியும் வந்திருந்தது. படத் தொழிலில் சம்பந்தமில்லாத, ஆனால் பெரிய மனிதரின் வாலைப் பிடிக்கும் பாலசந்திரனும் அந்தக் கோஷ்டியில் கலந்திருந்தான்.

பாலசந்திரன் சில்க் ஷர்ட்டும், ஜரிகை வேஷ்டியும், கையில் சிகரெட்டு டப்பாவும், பார்த்தால் லட்ச ரூபாய்க்கு மதிப்பிடும் அளவுக்கு டாம்பீகமாக விளங்குபவன். அந்தக் காலத்தில் அவன் தகப்பனார் வட்டிக்கு வட்டி பணத்தை விட்டுப் பிறகு அவற்றை வீடாகவும் வாசலாகவும் இரட்டிப்பு மடங்கும் பன்மடங்குமாகப் பலர் வாயிலடித்துச் சேர்த்துப் பணக்காரரானவர். எத்தனையோ பேரை நடுத்தெருவிலே நிற்க வைத்துப் புண்ணியம் கட்டிக் கொண்ட புண்ணிய புருஷர். அந்தப் பணம் நிலைத்து நிற்குமா? அவ்வளவு சொத்தையும் வந்த சுவடு தெரியாமல் தண்ணீராகப் பல தீய வழிகளில் ஈடுபட்டுப் பாழ்படுத்தினான் மகன். கடைசியில் பணமிழந்து, பல பெரிய மனிதர்களின் சிநேகம் மட்டும் அவனுக்கு மிஞ்சியது. முகஸ்துதி மன்னனாகி எப்படியோ காலத்தை ஓட்டிக் கொண்டிருந்தான். அத்தனை செல்வங்கள் போயும் அவன் இன்னும் தன் டாம்பீக வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி போடாதவன்.

அன்று காலை ஏழு மணியிருக்கும். காலை இளம் வெய்யிலில் இனிய மலர்கள் பங்களாவில் பொன்மயமாக ஒளிர்ந்து கொண்டிருந்தன. பாலசந்திரன் முகஸ்துதி மலர் தொடுத்துப் படாதிபதி நாயகத்தைப் பூசித்து, " ஸார்! இன்றுதான் படப்பிடிப்பு இல்லையே?



உங்கள் காரைக் கொடுத்தீர்களானால் திருவனந்தபுரம் வரையில் போய் வரலாம் என்றிருக்கிறேன்'' என்றான்.

''அதற்கென்ன? பேஷாய்ப் போய் வாருங்கள். இந்தாப்பா, கோபால்! ஐயாவைக் காரிலே நீ அழைச்சிக்கிட்டுப் போய் வா'' என்றார் பட அதிபர் நாயகம்.

முதலாளியின் கட்டளையைச் சிரமேற்கொண்டு டிரைவர் கோபால் பாலசந்திரனை அழைத்துக் கொண்டு புறப்பட்டான்.

செங்கோட்டை அடுத்ததும் கார் வளைவும் நெளிவும் செறிந்த பாதைகளில் ஓடியது. கீழே பார்த்தால் அதளபாதாளம்; மேலே கண்ணுக்கெட்டாத தூரம் நெடுமுடி. பல திருப்பங்களையும் வெகு லாகவமாகக் கடந்து கார் கொட்டாரக்கரா வந்தடைந்தது. கார் ஒரு திருப்பத்தில் திரும்பும்போது பிரேக் போட்டும் நிற்காமல் ஓடியது. கோபால் காரைச் சிறிது ஒடித்தான். கார் ஒரு லாரியில் மோதிவிட்டது. போக்குவரத்தைச் சரி செய்து கொண்டிருந்த கேரள போலீஸ்காரர் இந்த விபத்து ஏற்பட்டதைக் கண்டதும், கோபாலின் காருக்கு அருகில் வந்து, ''நிங்கள் வண்டி தன்னே லாரிதன்னில் மோதிக் களஞ்சது. டேசனுக்கு வர்ாம்!'' என்றார்.

''எங்கள்மீது குற்றமில்லே. பின்னால் வந்த வண்டியினால்தான் இந்த விபத்து ஏற்பட்டது'' என்று வாதிட்டான் கோபால். அவனுடைய தமிழ் வியாக்கியானம் அந்த மலையாளப் போலீஸ்காரருக்குப் புரியவில்லே. கோபாலைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துப் போவதில் முனைந்து நின்றார் அவர்.

பாலசந்திரன் ஆள்தான் பிரமாதமாக வாட்டசாட்டமாக இருந்தானே தவிர உள்ளுக்குள் ஆராய்ந்தால் பயந்தாங்கொள்ளிகளில் முதல் நம்பர்! பாலசந்திரனுக்குப் பயமாய்ப் போய்விட்டது; தன்னையும் இந்த வழக்கில் சாட்சியாய்ப் போட்டு மாட்டிவைத்து விடுவார்களோ என்று. சட்டென்று தான் தப்ப ஒரு வழி தேடினான். வண்டியை விட்டு இறங்கி, ''என்ன டிரைவர்! உன்னை நம்பிக்கிட்டு இந்தப் பாஷை தெரியாத ஊரிலே வந்து நடுத்தெருவிலே நிற்கும்படியாகி விட்டது. உன்மாதிரி அரைகுறை டிரைவர் கிட்டே நாயகம் காரை நம்பிக் கொடுத்ததே தப்பு!'' என்று சத்தம் போடத் தொடங்கி விட்டான். கோபால் அவ்விருவரிடமும் மாட்டிக் கொண்டு என்ன செய்வதென்று தெரியாமல் திண்டாடினான்.

''ஸார்! நீங்களே பார்த்துக்கிட்டுத்தானே இருந்தீங்க. அவன்தானே வந்து நம்ம வண்டியிலே மோதினான்! நம்ம பேரிலே என்ன தப்புங்க?'' என்றான்.

''உனக்குக் காரைச் சரியாக ஓட்டத் துப்பில்லே. நான் இனிமே அரை நிமிஷம் இங்கே நிற்க மாட்டேன். நீ எக்கேடும் கெட்டுப்போ! நான் வேறே வாடகைக் காரைப் பிடிச்சுக்கிட்டுப் போறேன்!'' என்று கூறி அங்கிருந்து நகர்ந்தான் பாலசந்திரன்.

''ஸார்! ஸார்! என்னை இப்படி ஊர், பாஷை தெரியாத ஊரிலே நிர்க்கதியா விட்டுட்டுப் போறீங்களே? இது நியாயமா?'' என்றான் கோபால்.

"பெரிய நியாயத்தைக் கண்டு விட்டா நில்லே இவரு! உன்னாலே என் பிரயாணத் திட்டங்களெல்லாம் வீணாகப் போச்சு!" என்று கடிந்த வண்ணம் அவனைச் சிறிதும் லட்சியம் செய்யாமல் அவ்விடத்தை விட்டு அகன்றான் பாலசந்திரன்.

கோபால் காரோடு அந்தப் போலீஸ்காரருடன் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனான். அவன்மேல் வழக்குப் பதிவாயிற்று. 'நூறு ரூபாய் அபராதம் கட்ட வேண்டும். கட்டத் தவறினால் ஒரு வாரம் சிறைவாசம்' என்று நீதிபதி தீர்ப்பு வழங்கினார். ஊர் பேர் தெரியாத இடத்திலே அவன் நூறு ரூபாய்க்கு எங்கே போவான்? எனவே, சிறைத் தண்டனைக்கு உள்ளாகும்படியான நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. பாலசந்திரனோ அவனைத் தவிக்க விட்டு விட்டுத் திருவனந்தபுரத்துக்குச் சென்று நாலைந்து நாட்களை ஆனந்தமாகக் கழித்து விட்டுக் குற்றாலம் திரும்பினான்.

தம் காரில் வராமல் வண்டியில் வந்திறங்கிய பாலசந்திரனைக் கண்டதும், நாயகத்துக்குப் பிரமிப்பாக இருந்தது. நாலைந்து நாட்கள் அவர் காரில்லாமல் அவஸ்தைப்பட்டது அவர் கண் முன்னால் வந்து நின்றது.

"என்ன ஐயா! நம்ம காரு என்ன ஆச்சு? ஆக்ஸிடெண்டா? இல்லே, காரை எங்கேயாவது அடகு வைத்துவிட்டு வந்து விட்டீரா?" என்று கேட்டார் அவர். பாலசந்திரன்மீது அவருக்குத்தான் என்ன நம்பிக்கை!

"அதை ஏன் கேட்கறீங்க? உங்க காரிலே போனதினாலே ஏக நஷ்டம்! ஓர் அரைகுறை டிரைவர்கிட்டே காரைக் கொடுத்தா எப்படியிருக்கும்? கொட்டாரக்கராவிலே ஒரு காரோடு மோதி விட்டான். அவனைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு இழுத்துக்கிட்டுப் போயிட்டாங்க!" என்றான்.

"ஆமா! போலீஸ் ஸ்டேஷனுக்குக் கோபாலை இழுத்துக்கிட்டுப்போனா நீங்க என்ன செய்தீங்க?"

"நம்ம புரோகிராம் அப்சட்டு ஆகக் கூடாது, பாருங்க! அதனால் வேறு டாக்ஸி பிடித்துக்கிட்டுப் போயிட்டேன்! இந்தக் கற்றுக்குட்டிப் பயல் கோபாலை முதல்லே வேலையை விட்டு நீக்குங்க!" என்று உபதேசம் செய்தான் பாலசந்திரன்.

"ஏன் ஐயா, இந்தமாதிரி நடந்துபோச்சுன்னு ஒரு தந்தி கொடுத்திருக்கக் கூடாது?"

"அடடா! அந்த யோசனை என் மனசுக்கு எட்டவே யில்லையே!"

"எப்படி எட்டும்? காரை ஓசிக்குக் கொடுத்தால் இத்தனை கஷ்டங்களும் அனுபவிக்க வேண்டியதுதான்...."

"நீங்க ஓசிக்குக் காரைக் கொடுத்தாலும் கொடுத்தீங்க. என் பாக்கெட் காலியாப் போச்சு. இப்போ பட்டணம் போகிறதுக்கு நீங்கதான் பணம் கொடுக்கணும்!"

"அது வேறு தண்டமா?" என்று எரிச்சலுடன் கூறிக் காரையும் டிரைவர் கோபாலையும் வரவழைக்கும் பணியில் இறங்கினார் நாயகம்.

கோபால் அன்று மாலையே நாலைந்து நாட்கள் சிறைவாசம் புரிந்து விட்டுத்

தளர்ந்துபோய்த் திரும்பி வந்தான்; நாயகத்தின் காரும் வந்து சேர்ந்தது.

"ஸார்! பாலசந்திரன் அன்னிக்கு எங்க முதலாளிக்குத் தந்தியடிச்சிருந்தா நான் சிறைக்குச் சென்றிருக்க வேண்டாமில்லே?"

"ஆமாம்."

"அதுமட்டுமா? முதலாளி விட்டப்போய் என் சம்பளத்திலே நூறு ரூபாயைப் பிடிக்கச் சொல்லி வேறு ஓதிவிட்டான், ஸார்! நல்லவேளை முதலாளியினுடைய நல்ல மனசினாலே என் வேலை தப்பியது. ஏன் சார்! இப்படிப்பட்ட அயோக்கியனைக் காரிலே ஏத்தலாமா, நீங்களே சொல்லுங்க!" என்றான் டிரைவர் கோபால்.

பின்னால் மற்றொரு காரின் ஹார்ன் 'பாம், பாம்' என்று வழிவிடச் சத்தமிட்டது. கோபாலும் தன் காரை ஒதுக்கிவிட்டுச்செல்வதில் முனைந்தான். நானும் அந்தக் காரைவிட்டுக் கீழே இறங்கினேன்.

அன்று காலையில் நாயகம் மனம் குழம்பிப்போய் ஓர் இடத்தில் நிற்காமல் பல இடங்களுக்கு அலைபாய்ந்து கொண்டிருந்தார். அவர் பர்ஸில் வைத்திருந்த பெருந்தொகையைக் காணவில்லை. அவருக்கு அந்தப் பணம் அவ்வளவு இலட்சியமில்லை. ஆனால் துணிந்து இப்படித் தம்மிடமே கைவரிசையைக் காட்டத் துணிந்து விட்டார்களே என்றுதான் மனம் நொந்தார். எப்படியாவது அந்தத் திருடனைக் கண்டு பிடித்துவிடவேண்டும் என்று எண்ணினார். அவருக்கு முக்கியமாக ஒரு ஆசாமியிடம் சந்தேகம். அதைத் தீர்த்துக் கொள்ளவேண்டி, அவர் டிரைவர் கோபாலை அழைத்து, "ஏன், அப்பா! இன்று காலையில் நம் அறைக்கு யார் யார் வந்தார்கள்?" என்று கேட்டார்.

"எனக்குத் தெரியாதுங்களே! நான் கார் ஷெட்டை விட்டு நகரல்லியே!" என்றான்.

"பர்ஸிலிருந்து பணம் மாயமாக மறைந்திருக்கிறது. யாரோ அபேஸ் பண்ணி விட்டான்கள்! அவனைக் கண்டு பிடிக்கிறவரை என் மனசுக்கு நிம்மதி கிடையாது!" என்றார்.

'இந்தத் தலைவேதனை வேறா? அன்றைக்குக் கார் மோதினபொழுது நடுத்தெருவிலே நிறுத்திவிட்டுப் போன அந்த ஆளின் வேலைதானோ இது? நம்மை நல்லா வாழவிட மாட்டான் போலிருக்கிறதே!' என்று எண்ணிய கோபாலுக்கு மனத்தை என்னவோ செய்தது. அதை ஒட்டினாற்போல் 'முதலாளி தன்னை மட்டும் அழைத்து எதற்காகக் கேட்க வேண்டும்? தன்பேரில் அவருக்கு நம்பிக்கை இல்லையோ? ஏழை யென்றால் இளப்பம்தானோ? யாருமே இலேசில் பழி சுமத்திவிடலாமோ?' என்று எண்ணியவன் உள்ளம் பொருமினான். ஆனால் முதலாளி தம் உள்ளத்தில் இருந்த ஐயத்தை அவனிடம் விண்டு சொல்லவில்லையே!

செண்பக அடவியில் அருவி சோவென்று இரைச்சலுடன் கொட்டிக் கொண்டிருந்தது. படாதிபதி நாயகம், பாலசந்திரன், நான்-மூவரும் அன்று மாலை மலைமீதேறிச் செண்பக அடவி அருவியில் குளிக்க வந்திருந்தோம். கோபாலும் எங்களுடன் துணைக்கு வந்திருந்தான். பாலசந்திரன் அட்டகாசம் செய்து கொண்டு அருவியில் வேகமாகக் குளிக்கப் போனான். முன்னே பின்னே அந்த அருவியின் பக்கம் சென்றிருந்தால் அங்குள்ள வழுக்குமிடங்களைப் பற்றித் தெரிந்திருக்கும். அதோடு அந்தச் சமயம் பார்த்து அவன் கரையில் வைத்திருந்த சட்டை காற்றில் படபடத்தது. அதை எங்கே காற்று அடித்துக் கொண்டு போய்விடுமோ என்ற பரபரப்பில் 'ஐயையோ!' என்று பாலசந்திரன் கூச்சலிட்டவாறு திரும்பினான். அவசரத்தில் தவறிக் காலை வழுக்கலில் வைத்தவன் அருவி விழுந்து பெருகியுள்ள கசத்தில் மாட்டிக் கொண்டு விட்டான். எங்களால் பரிதாபப் படத்தான் முடிந்ததே தவிர, அவனைக் காப்பாற்றும் தைரியம் எங்கள் யாருக்கும் இல்லை. பாலசந்திரனின் வாழ்வு முடிந்து விட்டது என்றே தீர்மானித்தோம். ஓர் உருவம் திடீரென்று தண்ணீரில் பாய்ந்தது. யார் அது? நம்ப முடிய வில்லையே? கோபாலா! யாரைக் கண்டு கோபால் பொருமிக் கொண்டிருந்தானோ, அவனுக்காகவா தன் உயிரையும் பொருட்படுத்தாமல் குதித்து விட்டான்! இருக்காது, அப்படியிருக்காது. பழி வாங்கவே அவன் குதித்திருப்பான்!

எமனுடன் போராடிக் கொண்டிருந்த பாலசந்திரனுக்குத் தண்ணீரில் நீந்தி வந்த கோபால் எமனைக் காட்டிலும் பயங்கரமானவனாகக் காட்சி அளித்திருக்க வேண்டும்.

கோபாலின் வாய்மொழியாகக் கதையைக் கேட்டிருந்த எனக்கும் அது பழி தீர்த்துக் கொள்ளும் படலமாகவேதான் பட்டது. ஆனால்....கோபால் நொடிப் பொழுதில் கசத்துக்குள் ஒரு முங்கு முங்கிப் பாலசந்திரனைப் பிடித்துக் கரைப் பக்கமாக ஒரு தள்ளுத் தள்ளினான். பாலசந்திரன் கழற்றி வைத்திருந்த சட்டையையும் காற்றுத் தள்ளியது. அதிலிருந்து நோட்டுக்கள் சிதறிக் காற்றில் பறந்து நீரில் விழுந்து மிதந்தன. காலையில் காணாமற்போன நாயகத்தின் நோட்டுக்கள்தான் அவை.

பாலசந்திரன் உயிர் தப்பினான். ஆனால், கோபால்....பாலச்சந்திரனின் உயிரைக் காப்பாற்றிய கோபால்....

நோட்டுக்கள் பாலசந்திரனின் சட்டையிலிருந்து பறந்து விழுந்ததை அவன் கண்களும் பார்த்திருக்க வேண்டும். சாகப்போகும் தருணத்தில், தன்னைத் திருடன் அல்ல என்று காட்டிக் கொடுத்த அந்த நோட்டுக்களுக்கு அவன் உள்ளத்துள் வணக்கம் செலுத்துவதற்குள்ளாகவே கசத்தில் மூழ்கும்படியாகி விட்டது. தம் கண்ணெதிரே தமது நம்பிக்கைக்குப் பாத்திரமான கோபால் தெய்வமானதைக் கண்டு மெய்சிலிர்த்தார் நாயகம். பாலசந்திரனின் விழித் திரைகளுக்கோ எதுவுமே தட்டுப்படவில்லை. தான் இங்கு இழைத்தும் தனக்கு நல்லதே செய்ய முனைந்த கோபாலின் நினைவில் மெய் விதிர்த்த அவன் நிலைக்குத்தலிட்டு நின்றான்!

நரை மயிரென இயற்கையைக் குறைகூறுதல் முறையோ?



"இயற்கையாகவே என் கேசம் நரைத்துவிட்டது ஐயா; என்ன செய்ய முடியும்?" —இவ்வாறு பலர் குறைகூறுவதை நாம் கேட்டிருக்கிறோம். ஆனாலும் நரை மயிருக்காக இயற்கையைக் குறைகூறுபவர், ஒருவருடைய கேசம் ஏன் நரைக்கிறது என்று ஆராய்வதுண்டா? 90 சத விகிதம் இளமையில் நரை, சரியான கேச பராமரிப்பு இல்லாமையாலும், சுகாதாரமற்ற இடங்களில் வசிப்பதாலும், மற்றும் மட்டரகமான கூந்தல் தைலங்களை உபயோகிப்பதாலும் ஏற்படுகின்றன என்று பரிசோதனைகள் மூலம் தெளிவாகியுள்ளது. விஞ்ஞான முறையில் அகமதாபாத்தில் உள்ள ஒரு மிக்க நவீனமான பாக்டரியில் தயாரிக்கப்படும் "லோமா" நரை மயிர் ஏற்படுவதைத் தடுக்க சிறந்த மூலதாரப் பொருட்களுடன் சீரிய முறையில் செம்மையாகத் தயாரிக்கப்படுகிறது. "லோமா"வை வாங்குங்கள், இந்தியாவிலும் மற்றும் வெளிநாடுகளிலும் பல இலட்சக்கணக்கான மக்கள் ஏன் "லோமா"வில் பரிபூரண நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பதை நீங்களே உணர்வீர். ஞாபகமிருக்கட்டும். "லோமா" என்பதன் பொருள், சிறந்த தரம் என்பதே—நீங்கள் எதிர்பார்ப்பதும் அதுவே!



கேசத்தைக் கருமையாக்குவதில் **லோமா** பாரினில் புகழ்பெற்றது.

பூரண ஏஜெண்டுகளும் ஏற்றுமதியாளர்களும்:

எம். எம். கம்பாத்வாலா

அகமதாபாத்-1 (இந்தியா) ஏஜெண்டுகள்:

ஸி. நரோத்தம் & கம்பெனி பம்பாய்-2

MPS-TAM

சென்னை ஏஜண்டுகள்: ஜே. பாலபாய் & கம்பெனி, 260, எஸ்பிளனேட், மதராஸ்-1

இலங்கை ஏஜண்டுகள்: செர்ருன் கதீர் & கோ., 41, 43, இரண்டாம் குறுக்குத் தெரு, கொழும்பு-11


சொர்க்கத்தின்
நிழல்
ஜெகசிற்பியன்

அத்தியாயம் முப்பத்தேழு

காலை ஓவியன் உலகமெனும் சித்திரச் சாலைக்குத் திறப்புவிழா செய்யத் தொடங்கினான். அனந்தகோடி ஆண்டுகளாக அநுதினமும் தவறாமல் நடைபெற்று வரும் விழாதான் இது என்றாலும் இன்றைய அதன் நிகழ்ச்சி நிரலில் ஒரு விசித்திரப் பரபரப்பு கலவை யிட்டிருப்பதாகத் தோன்றியது தேவகிக்கு. பாசிக் குளத்தில் பாலை ஊற்றிக் குழப்புவதைப் போலப் புலரும் அந்தக் காலைப் போதை உவகை பொங்கப் பார்த்துக் கொண்டிருந்தாள் அவள்.

"புறப்படலாமா தேவகி? மணி ஆறாகி விட்டது" என்று கேட்டுக் கொண்டே மாடியறைக்கு வந்தார் சிவப்பிரசாசம். பட்டுச் சட்டையும் பட்டு அங்கவஸ்திரமுமாக உற்சாகத்துடன் காணப்பட்டார் அவர்.

உஷைக் கன்னியின் ஒரு மானசிக வடிவாய் நின்று உஷையின் லாவண்ய கோலங்களில் மனத்தைப் பறிகொடுத்து விட்டிருந்த தேவகி மெள்ளத் திரும்பித் தன் தந்தையின் அருகில் வந்தாள். கடந்த இரண்டு வார காலமாக அவள் இருந்த நிலைக்கு முற்றிலும் மாறுபட்டு இப்போது தோற்றமளிப்பதைக் கண்டு சிவப்பிரகாசத்தின் மனம் பூரித்தது. தமது பழைய கவலைகளையெல்லாம் மறந்தவராய் அவளைப் பாசப் பரிவோடு ஏறிட்டு நோக்கினார்.

"மணி ஆறுதானே அப்பா ஆகிறது? இதற்குள்ளாகவா கிளம்பிவிட்டீர்கள்?" என்று சிறிதே தயக்கத்துடன் கேட்டாள் தேவகி

"நீயும்தானே புறப்படுவதற்குத் தயாராகி நிற்கிறாய்?" என்றார் சிவப்பிரகாசம் புன்முறுவலுடன்

"எட்டு மணிக்குத்தானே முகூர்த்தம்? அதற்குள் அங்கு போய் என்ன செய்வது?" என்று இழுத்தாள் தேவகி.

இதைக் கேட்டுக் கடகடவென்று நகைத்த சிவப்பிரகாசம், "என்ன மகளே இப்படிச் சொல்கிறாய்? பிள்ளை வீட்டாருக்கு நெருங்கிய உறவினர்கள் போல் இருக்கும் நாம்தானே முகூர்த்தத்தை முன் நின்று நடத்தி வைக்க முன்னதாகச் செல்ல வேண்டும்?" என்றார் உற்சாகத்துடன்.

"நீங்கள் வேண்டுமானால் மாப்பிள்ளை வீட்டார் சார்பில் காரியங்களைக் கவனிக்க முன்னதாகப் போங்கள். நான் பெண் வீட்டார் சார்பில் சற்றுப் பின்னால் வருகிறேன்!" என்று குறும்புக் குரலில் கூறிச் சிரித்தாள் தேவகி.

விவேகானந்தனை மணக்க மறுத்த அவள் அவனுடைய கல்யாண வைபவத்தில் முன்னதாகப் போய் உட்கார லஜ்ஜைப்பட்டே இவ்வாறு சொல்கிறாள் என்று எண்ணிய சிவப்பிரகாசம், "அப்படியானால் சரி, மகளே! நான் முதலில் புறப்பட்டுச் செல்கிறேன். நீ முகூர்த்த நேரத்தைத் தவற விடாமல் அங்கு வந்து சேர்ந்து விடவேண்டும். தெரிந்ததா?" என்றார். மீண்டும் அவர் தொடர்ந்து, "இங்கே பார் தேவகி! எதையாவது மனத்தில் வைத்துக் கொண்டு கல்யாணத்துக்கு வராமல் இருந்துவிடப் போகிறாய். அல்லது அன்றைக்கு நம் கம்பெனி மானேஜரின் வீட்டுக் கல்யாண விருந்தில் கலந்து கொள்வதாகச் சொல்லி வேறெங்கோ போய்விட்டாயே. அப்படியும் செய்து விடப் போகிறாய். நீ வராமலிருந்தால் நம் ராமநாதனும் சுந்தரியம்மாளும் மிகவும் வருந்துவார்கள். மேலும், நம்முடைய வீட்டில் இன்னும் சில வாரங்களில் இது போன்ற விசேஷ வைபவம் ஒன்று நடக்கவிருக்கிறது அதற்கு அவர்களுடைய உதவியெல்லாம் நமக்கு வேண்டும். அதனால்தான் நான் இவ்வளவு தூரம் சொல்கிறேன்" என்று புன்முறுவலுடன் 'கூறியவாறு அங்கிருந்து செல்லத் திரும்பியவர் சட்டென்று நின்று தம் மகளை அன்பு கனியப் பார்த்து, "தேவகி! இன்னொரு விஷயம் சொல்ல மறந்து விட்டேனே! நாளைக் காலை ராமநாதனையும் சுந்தரியம்மாளையும் அழைத்துக் கொண்டு அந்தப் புல்லாங்குழல் வித்வானின் வீட்டுக்குப் போகப் போகிறேன். அவன் அவன் தாயாருடைய சம்மதத்தைப் பெறுவதற்காகத்தான்!" என்றார் முகமெல்லாம் சிரிப்பாக.

தேவுகி தங்கப் பதுமைபோல் தலை குனிந்து நின்றாள். அவள் முகம் நாணத்தால் கன்றிச் சிவந்தது அந்த அறையில் மாட்டப் பெற்றிருந்த தம் மனைவியின் புகைப் படத்தை ஒரு கணம் உற்றுப் பார்த்து ஏதோ எண்ணிப் பெருமூச்சு விட்ட சிவப்பிரகாசம் மௌனமாகத் திரும்பிப் படிகளில் இறங்கினார்.

மகிழ்ச்சிக் குறுகுறுப்படைந்த தேவகி மானெனத் துள்ளியோடி நிலைக் கண்ணாடியின் எதிரில் நின்று தன் எழில் வதனத்தின் பிரதிபிம்பத்தைப் பார்த்துக் கண்களைச் சிமிட்டி முறுவலித்தாள். விவேகானந்தனின் கல்யாணத்துக்குத் தான் தாமதமாக வருவதாய்ச் சொன்னதைக் கேட்டுத் தன் தந்தை கற்பித்துக்

கொண்ட காரணத்தை எண்ணியே அப்படிச் சிரித்தாள்.

ஆமாம்; தன் தந்தையுடன் புறப்படாமல், பிறகு வருவதாக அவள் சொன்னதற்குக் காரணம், மோகனசுந்தரத்தின் வீட்டுக்குப் போய் அவனையும் அவன் தாயையும் தன்னோடு காரில் அழைத்துக் கொண்டு அந்தக் கல்யாணத்தில் போக வேண்டும் என்று ஏற்கெனவே திட்டமிட்டிருந்ததுதான்!

இப்படி ஏன் அவள் செய்ய வேண்டும்? மணப்பெண்ணான கோமதியின் கல்யாணத்துக்கு இவள் அழைத்தாலும் அழைக்காவிட்டாலும் மோகனோ அவன் தாயோ போகாமல் இருப்பார்களா? தன் குருவின் மகள் கல்யாணத்துக்கு மோகன் கலந்து கொள்ளாமலிருக்க மாட்டான் என்பது தேவகிக்கு நன்றாகத் தெரியும். அப்படியிருக்க அவனை அழைத்துச்செல்லும் பொருட்டு இவள் ஏன் அவன் வீட்டுக்குச் செல்ல வேண்டும்? அதற்கு ஒரு காரணம் இருக்கவே செய்தது. இன்று எப்படியும் தன் மனத்தின் சுகந்தக் கனவை மோகனிடம் சமர்ப்பித்துவிட வேண்டும். உடைபடா முத்திரையாயிருக்கும் தனது உள்ளக் காதலை அவனிடம் தெரிவித்து, அதே நிலையில் கிடந்து அலைமோதிக் கொண்டிருக்கும் அவனை ஆனந்த சாகரத்தில் ஆழ்த்த வேண்டும். இந்த இனிய காதல் உறவைத் தன் தந்தை ஏற்றுக் கல்யாணம் செய்து வைக்க இசைந்திருக்கும் செய்தியையும் அவனிடம் சொல்லி விடவேண்டும். ஏனென்றால் இதுபற்றிப் பேச நாளை மாலை அவளது தந்தையும், ராமநாதனும், சுந்தரியம்மாளும் அவன் வீட்டுக்குப் போகப் போகிறார்கள். அதற்குள் இந்த விவரங்களை அவன் தெரிந்து கொள்வது நல்லது. சற்றும் எதிர்பாராத விதமாக இந்த இன்பச் செய்திகளைக் கேட்டால் மோகனசுந்தரம் என்ன செய்வான்! வியப்பால் திக்கித் திணறுவான்; மகிழ்ச்சியால் துள்ளிக் குதிப்பான்; உணர்ச்சி வயப்பட்டு அவள் கரங்களை இறுகப் பற்றி யிழுத்துத் தன் முகத்தோடு முகம் வைத்து...

தேவகி சட்டென்று முகத்தைப் பொத்திக்கொண்டு வெட்கத்துடன், பொங்கிப் பொங்கிச் சிரித்தாள். சிரித்துக் கொண்டே, தந்த நிற விரல்களால் மறைக்கப்பட்ட தன் முகத்தை அவ்விரல்களின் இடைவழியே கண்ணாடியில் பார்த்தாள். மறு கணம், அவள் நெஞ்சில் நிறைந்திருந்த மகிழ்ச்சி மறைந்து சோகத்தின் கறைப் படலம் கப்பியது.

'ஐந்து நாட்களுக்கு முன்னும் அதற்கு முந்திய ஒரு தினமும் இப்படித்தானே முகத்தைப் பொத்திக் கொண்டு அந்த நெஞ்சறுக்கும் காட்சிகளைப் பார்த்தேன்?' - தொய்ந்து துவண்டு நாற்காலியில் அப்படியே அயர்ந்துபோய் உட்கார்ந்து விட்டாள் தேவகி.

ஆமாம்; அந்தச் சம்பவங்களை நினைக்கும் போதெல்லாம் அவள் மனம் இப்படித்தான் அரண்டு மிரண்டு நடுங்க ஆரம்பித்து விடுகிறது. பக்கத்திலுள்ள பெரும் பள்ளத்தைக் கவனியாமலே அதன் விளிம்பின் ஓரம் மின்னல் வேகத்தில் ஓடிக் கொண்டிருப்பது போலவும், திடீரென்று அதைத் திரும்பிப் பார்த்துத் திகைப்பது போலவுமான ஒரு பயங்கர உணர்ச்சி அவளை ஆட்கொண்டு விடுகிறது. இப்படி அவள் மிரட்சியுறக் காரணமான அந்தச் சம்பவங்கள்தான் என்ன....?

ஏற்கெனவே ஒருமுறை அவன் பார்த்து மனம் குமைந்த சம்பவம் போன்றவைதாம். அன்றொரு நாள் தெருவோரம் நின்று கொட்டாங்கச்சிப் பிடில்காரனின் இனிய வாசிப்பைக் கேட்டுக்கொண்டிருந்த மோகனசுந்தரம் அந்த மத்தாப்புச் சிங்காரியின் கையாட்களோடு சேர்ந்து போய்க் கொண்டிருந்தானல்லவா? அதைப் பார்த்த தேவகி என்ன செய்வதென்றே தெரியாமல் ஒரு கணம் திகைத்து நின்றாள். பிறகு சட்டென்று ஏதோ முடிவுக்கு வந்தவளாய் அவ்வழியே சென்ற டாக்ஸியொன்றை நிறுத்தி, அதில் ஏறிக் கொண்டு மோகனசுந்தரத்தின் அருகில் போய் நின்று, ''நீங்கள் வீட்டுக்குத் தானே போகிறீர்கள்? இந்த வண்டியில் ஏறிக் கொள்ளுங்கள். நான் உங்கள் வீட்டுப் பக்கம்தான் போகவேண்டியிருக்கிறது. அப்படியே இறக்கி விட்டுச் செல்கிறேன்'' என்றாள். மோகனசுந்தரம் அவளைப் பார்த்துத் திருதிருவென விழித்தான். பிறகு அந்த முரட்டு ஆசாமிகளுக்கு ஒரு கும்பிடு போட்டுவிட்டு டாக்ஸியில் ஏறிக் கொண்டான். வண்டி புறப்பட்டது. வழியில் தேவகி ஒன்றுமே பேசவில்லை. முகத்தை 'உம்'மென்று வைத்துக் கொண்டிருந்தாள். மோகனசுந்தரத்தின் வீட்டெதிரில் டாக்ஸி நின்றது. கீழே இறங்கிய மோகன் தேவகியைத் தன் வீட்டுக்கு வரும்படி அழைத்தான். அதைக் காதில் வாங்கிக்கொள்ளாத தேவகி ''உங்களை என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை'' என்று கோபமாகவே சீறினாள். மந்தகாசப் புன்முறுவலுடன் அவளைப் பார்த்த மோகன், ''கோபித்துக் கொள்ளாதே, தேவகி! பாவம், அவர்கள் பசிக்கிறது என்றார்கள். என் கையில் பணம்

இல்லை. வீட்டுக்கு வந்து சாப்பிட்டு விட்டுப் போங்கள் என்றேன். சரி என்று என்னோடு வந்தார்கள். மற்றப்படி நான் அவர்களோடு எங்கும் போகவில்லை, தேவகி!'' என்றான் பயந்த குரலில் இதைக் கேட்ட தேவகி, இப்படியும் ஓர் அப்பாவி மனிதன் இருப்பானா என்று வியந்தாள்.

'' சரி ; சாயந்திரம் வந்து உங்களுடன் ஒரு முக்கிய விஷயம் பற்றிப் பேசப் போகிறேன்'' என்று சொல்லிவிட்டு வீட்டுக்குத் திரும்பினாள் நேரே தன் தந்தையிடம் சென்று மோகனசுந்தரத்தை மணக்க விரும்புவதாகத் தெரிவித்தாள். இதைக்கேட்டுத் திகைத்த சிவப்பிரகாசம் ஒன்றுமே பதில் சொல்லவில்லை. ஆனால் தேவகி தன் முடிவுக்கு மாறாகத் தந்தை எதுவும் சொல்ல மாட்டார் என்ற நம்பிக்கையுடன் அன்று மாலை மோகனின் வீட்டுக்குச் சென்றாள். அப்போது அவன் வீட்டிலில்லை யாரோ இரண்டு பேர் வந்து அவனை எங்கோ அழைத்துச் சென்றிருப்பதாகக் கவலையுடன் சொன்னாள் அபரஞ்சியம்மாள். சந்தேகப்பட்ட தேவகி அந்தப் புதிய காலனியின் பக்கம் போய்ப் பார்த்தாள் அவள் யூகித்தபடியே அந்தப் பாழடைந்த வீட்டின் மொட்டை மாடியில் மோகனசுந்தரம் அமர்ந்து புல்லாங்குழல் வாசித்துக் கொண்டிருந்தான் அன்றொருநாள் இரவு அந்த மாடியில் என்னென்ன நடந்தனவோ. அவை யெல்லாம் இன்றும் நடந்து கொண்டிருந்தன தேவகியின் மனம் பூகம்பமாக அதிர்ந்தது. வெறுப்பும் வேதனையும் அடைந்தவளாய்த் தன் வீட்டுக்குத் திரும்பி வந்தாள். காலையில் சொன்ன முடிவைத் தான் மாற்றிக் கொண்டு விட்டதாகத் தன் தந்தையிடம் கூறிவிட்டு அன்றைய இரவை அழுது அழுதே கரைத்துத் தீர்த்தாள். மறுநாள் மோகன் மீது கொண்ட வெறுப்பின் தீவிரம் சிறிதே தணிந்து, அவன் என்ன கதியானானோ என்ற அநுதாப உணர்ச்சி மேலிட்டது. உடனே அவனுடைய வீட்டுக்குப் புறப்பட்டுச் சென்றாள் தேவகி.

அங்கே அவன் அனல் வீசும் ஜுரத்தோடு பிரக்ஞையற்ற நிலையில் ஏதேதோ பிதற்றிக் கொண்டு படுத்துக் கிடந்தான். இந்த நிலையில் அவனைப் பார்த்த தேவகியின் மனம் உருகிக் கரைந்தது. உடனடியாக அவனுக்குச் செய்ய வேண்டிய சிகிச்சைகளுக்கு ஏற்பாடு செய்தாள் ஜுரம் தணிந்து ஒருவாறு தெளிவடைந்த மோகன் அவள் முகத்தைப் பார்க்கவே நாணிக் கூசினான் திரும்பத் திரும்ப அவளிடம் மன்னிப்புக் கேட்டுக் கெஞ்சினான். இனி ஒருபோதும் அந்த வஞ்சகர்களின் வலையில் விழமாட்டேன் என்று வாக்குறுதி யளித்தான். தேவகியின் மனம் மீண்டும் அவன் மீது அன்பைச் சொரிந்தது. தன் தந்தையிடம் வந்து மோகனையே தான் மணக்க விரும்புவதாகத் தெரிவித்தாள். குழப்பமடைந்த சிவப்பிரகாசம் ஒன்றும் சொல்லத் தோன்றாமல் மௌனமாகவே இருந்து விட்டார். மறு நாள் மோகனைப் பார்க்கச் சென்ற தேவகி திடுக்கிட்டாள். காரணம் அவன் பழையபடி அந்தப் பாழடைந்த வீட்டுக்குப் போய்விட்டிருந்தான் !

உடைந்த உள்ளத்துடன் இல்லம் திரும்பிய தேவகி தன் தந்தையிடம், தனக்கு இனி கல்யாணமே வேண்டாம் என்று கதறிக் கூறினாள். சிவப்பிரகாசத்துக்குக் கோபம் வந்து விட்டது. என்றுமில்லாதவிதமாகத் தம் மகளைச் சினந்து கடிந்து கொண்டார் அவர்.

தேவகி புழுவாய்த் துடித்தாள். தன் வாழ்வே அஸ்தமித்து விட்டதாக எண்ணிக் குமைந்தாள். மோகனசுந்தரத்தின் போக்கை அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஏதோ ஒரு பெரும் ஏமாற்றத்துக்கு உள்ளாகி அதனால் பிறந்த ஏக்கத்தையும் கவலையையும் மறக்கவே அவன் அப்படியெல்லாம் நடந்து கொள்கிறான் என்று அவளுக்குத் தோன்றியது இந்த யூகத்தை உறுதிப்படுத்திக்கொண்ட அவள் அதன் காரணத்தை ஆராய முற்பட்டாள். தன்னை அவன் தீவிரமாகக் காதலிக்கிறான் என்றும் ஆனால் அதை வெளிப்படச் சொல்ல அஞ்சுகிறான் என்றும் அவளுக்குப் பட்டன தனது செல்வ நிலையும், சமூக உயர் அந்தஸ்தும். பட்டப் படிப்பும் அவனைப் பயமுறுத்தி அவனது உள்ளக் காதலை வெளிப்படுத்த விடாமல் தடுக்கின்றன என்றும் இயற்கையிலேயே பயந்த சுபாவமும் தாழ்வு மனப்பான்மையும் கொண்டவனாதலால்தான் இவ்வாறு உள்ளூற அஞ்சிக் குமைகிறான் என்றும் அவளுக்குத் தோன்றியது. அன்றொரு நாள் அவன் தேவகியிடம் ஏதோ ஓர் உதவி கோரி, அதற்கான தன் மனக் குறையைச் சொல்ல வாய் திறந்தபோது சிவப்பிரகாசம் வந்ததால் அதை வெளியிடாமலே போய்விட்டான் அல்லவா ? அந்தச் சம்பவத்தை எண்ணியே அவள் இந்த முடிவுக்கு வந்தாள். ஆனால் இப்போது என்ன செய்வது ? தானாகப் போய்த் தன் மனத்தை அவனிடம் திறந்து காட்ட முடியாத சூழ்நிலை இப்போது அவளுக்கு ஏற்பட்டு விட்டதே ! அவள் தந்தை அதற்குக்



குறுக்கே வந்து நின்று விட்டாரே!... அவசரப்பட்டு அவரிடம் அப்படிச் சொன்னது எவ்வளவு தவறாகிவிட்டது!

இருதலைக்கொள்ளி எறும்பின் நிலையில் சிக்கித் தவித்தாள் தேவகி. மோகனசுந்தரம் தன்னைக் காதலிக்கிறான் என்ற எண்ணம் உறுதிப்பட்டுச் செல்லச் செல்ல, அவனைக் காண வேண்டுமென்ற ஆவல் புயலாக எழுந்து அவள் மனத்தை அலைக்கழிக்க ஆரம்பித்தது. தன் தந்தையின் விருப்பத்துக்கு மாறாக எதையும் செய்யத் துணிவது என்ற முடிவுக்கு அவள் வந்த சமயம், எதிர்பாராத விதமாகச் சிவப்பிரகாசம் தமது பிடிவாதத்தைக் கைவிட்டு விட்டார்! அதாவது, மோகனசுந்தரத்தையே அவளுக்கு மணம் செய்விக்க முயலப் போவதாகத் தெரிவித்தார்.

தேவகியின் மகிழ்ச்சி எல்லை கடந்தது. ஆனாலும் தயக்கம். மோகனின் காதல் மனத்தை அறிய, முதலில் தன் மனத்தையல்லவா அவனுக்குத் திறந்து காட்ட வேண்டியிருக்கிறது? இதைத் திடீரென்று எப்படிச் செய்வது? இதற்கு ஏதேனும் ஒரு நல்ல சந்தர்ப்பம் வாய்க்க வேண்டுமே!

இத்தகையதொரு குழப்பத்தில் தவித்துக் கொண்டிருந்த அவளுக்கு, அந்த அரிய சந்தர்ப்பத்தை அளிக்கும் வகையில், விவேகானந்தன்-கோமதி கல்யாண அழைப்பிதழ் வந்து சேர்ந்தது.

அந்தத் திருமண அழைப்பிதழைப் பார்த்துப் பெரு வியப்படைந்தாள் தேவகி. இப்படி ஓர் அதிசயம் நிகழுமென அவள் கற்பனைகூடப் பண்ணவில்லை. இதை நம்புவதற்கும் முடியாமல் வெகு நேரம் சிரமப்பட்டுக் கொண்டிருந்தாள். இறுதியில் அன்று அந்தப் பெண் கோமதி இவ்வீட்டிலே பிரக்ஞை இழந்த நிலையில் படுத்துக் கிடந்தபோது பிதற்றிய சில வார்த்தைகளும், பிறகு அவள் இவளை மிரட்சியுடன் பார்த்து, 'போ, போ' என்று விரட்டியதும் நினைவுக்கு வரவே ஒருவாறு விஷயத்தை நம்ப முயன்றாள். எது எப்படியிருப்பினும், மோகனிடம் தன் காதல் மனத்தைத் திறந்து காட்டப் போவதற்கு இந்தக் கல்யாண வைபவத்தையே ஒரு வாய்ப்பாக்கிக் கொள்ளலாம் என்று அவள் எண்ணிக் குதூகலித்தாள். அப்படி எதிர்பார்த்த நாளும் நேரமும் இதோ வந்து விட்டன!...

சுவர்க் கடிகாரம் மணி ஆறரை என்பதை ஓசையாக அறிவித்து ஓய்ந்தது.

உள்ளங்கையில் முகத்தை ஏந்தியவாறு சோர்ந்து உட்கார்ந்திருந்த தேவகி இந்த ஒலி கேட்டுச் சட்டென்று எழுந்தாள். 'சே, வீணான சிந்தனைகளில் எவ்வளவு நேரத்தை வீணாக்கி விட்டேன்' என்று தனக்குள் சலிப்புடன் முனகிக்கொண்ட அவள், ஒரு துள்ளுத் துள்ளித் திரும்பி மாடியறையிலிருந்து கீழே இறங்கி ஓடி வந்தாள். ஒடுங்கியிருந்த உற்சாகம் மீண்டும் அவளுள் ஊற்றெடுத்தது.

பெரிய காரில் சிவப்பிரகாசம் கல்யாண வீட்டுக்குப் புறப்பட்டுப் போய்விட்டிருந்தார். சிறிய கார் வாசலில் நின்று கொண்டிருந்தது.

பம்பரமாகச் சுழன்று வராந்தாவை நோக்கி ஓடிய தேவகிக்கு ஒரு சந்தேகம் எழுந்தது. 'எத்தனை மணிக்கு முகூர்த்தம்? எட்டா அல்லது எட்டரை மணிக்கா?' - அவசரமாகத் திரும்பி உள்ளே வந்த அவள், ரேடியோகிராம் பெட்டியின் அருகில் அந்தப் புல்லாங்குழல் இசைத் தட்டின் கீழே செருகி வைக்கப் பெற்றிருந்த கல்யாண அழைப்பிதழை அலட்சியமாக இழுத்தெடுத்துப் பிரித்துப் பார்த்துக் கொண்டே காரை நோக்கி விரைந்தாள்.

அவளுக்குப் பின்னால் ஏதோ படீரென்ற சத்தம். அந்தக் கல்யாணப் பத்திரிகையை அவள் உருவியெடுத்த வேகத்தில் அதன் மேலிருந்த இசைத் தட்டு நழுவிக் கீழே விழுந்து உடைந்த ஒலிதான் அது. தேவகி அதைக் கவனியாமலே புறப்பட்டு விட்டாள்!

பொலிவற்று வெறிச்சோடிக் கிடந்தது அந்த வீடு. வீட்டின் கதவுகள் ஜன்னல்களெல்லாம் பரக்கத் திறந்து கிடந்தன. ஆனால், உள்ளே யாரும் இருப்பதாகத் தெரியவில்லை.


'மோகனசுந்தரம் எங்கே? அவனுடைய தாயார் அபரஞ்சியம்மாளைக் கூடக் காணோமே?' -

காரை விட்டிறங்கி உள்ளே வந்த தேவகி சுற்றுமுற்றும் பார்த்துத் திகைத்தாள். ஒரு கணம் அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை. நெஞ்சு நிலைகொள்ளாமல் அடித்துக் கொண்டது.

'வீட்டைக் கூடச் சாத்தாமல் அவர்கள் எங்கே போய் இருப்பார்கள்? ஒருகால், அந்தக் கல்யாணத்துக்குச் சென்று விட்டிருப்பார்களோ? அப்படியானால் வீடு ஏன் திறந்து கிடக்கிறது?'-

தேவகியின் சிந்தனை முடங்கிக் கொண்டது. இதற்குமேல் அவளால் சிந்திக்கவே முடியவில்லை. தாள முடியாத ஏமாற்றத்தால் தலை கனத்து, கண்கள் குளமாயின.





'இப்போது என்ன செய்வது? கல்யாண வீட்டுக்குப் போய் மோகனைக் காண வாமா? ..ஆமாம்; அதைத் தவிர இப்போது வேறு வழி இல்லை!' -

வேகமாகத் திரும்பித் தன் காரை நோக்கி நடந்த தேவகி, சட்டென்று ஏதோ ஒன்றால் தடுத்து நிறுத்தப்பட்டவள்போல் நின்றாள். பரபரப்போடு அங்குமிங்கும் பார்த்தாள்.

ஆகா! என்ன இனிமையான குழல் கானம்! மால்கோஷ் ராகத்தின் மிக மெல்லியச் சுருள் அலைகள்!...ஆனால், அந்த அற்புத இசையலை எங்கிருந்து ஜனிக்கிறதென்று தெரியவில்லையே?...

சஞ்சீவிக் காற்றை உட்கொண்டவள் போல் குதாகல வீறு பெற்ற தேவகி அவ்வொலி வரும் இடம் அறிய வீட்டின் ஒவ்வோர் அறைக்குள்ளும் ஓடிச் சென்று தேடினாள். எங்கும் யாரையும் காணோம். மோகனசுந்தரம் எங்கே? அதோ, அவனுடைய குழல் கானம் மட்டும் கேட்கிறது!

மின்னலைப் போல் அங்குமிங்குமாக நெளிந்து அலைந்த தேவகி, திறந்து கிடந்த பின்பக்க வாசல் வழியே வெளியில் பாய்ந்து சென்றவள் திடுக்கிட்டு நின்றாள். வியப்பால் அவளது புருவங்கள் வில்லாக வளைந்து நெற்றி மேட்டுக்கு ஏறிவிட்டன.

அங்கே, அவ்வீட்டின் மதில் சுவர் ஓரம், நீரின்றி வாடிக் கருகிக் கிடந்த ஒரு முல்லைக் கொடிப் பந்தலின் கீழ் பழைய சாய்வு நாற்காலியொன்றில் மெலிந்து துவண்டு சாய்ந்தவாறு புல்லாங்குழல் வாசித்துக் கொண்டிருந்தான் மோகனசுந்தரம். அவனைச் சுற்றி இந்தாறு காலிப் புட்டிகளும் கண்ணாடிக் கப்ளர்களும் அலங்கோலமாக உருண்டு கிடந்தன.

இந்த எட்டிக் காட்சியைக் கண்ட தேவகியின் நெஞ்சம் வெட்டுப் பட்டாற் போல் துடிதுடித்தது. வெடவெடக்கும் கால்களை மெல்லப் பெயர்த்து அவனை நோக்கிச் சென்றாள்.

மோகனின் மென்மையான செவிப் புலன் இதை எப்படியோ அவனுக்கு உணர்த்தியிருக்க வேண்டும். கைகளின் பிடிப்பிலிருந்து புல்லாங்குழல் விடுபட்டு விழத் தட்டுத்தடுமாறி நிமிர்ந்த அவன் தேவகியை அச்சப் பரபரப்போடு ஏறிட்டு நோக்கினான். தயங்கி நின்ற அவளும் அவனை விழியசைக்காமல் பார்த்தாள்.

தவறு செய்த சிறுபிள்ளை தன் தாயைக் கண்டு ஒடுங்குவது போல், உடம்பை ஒடுக்கிக் குறுக்கிக் கொண்டு நாணப் புன்முறுவலுடன் தலைகுனிந்த மோகனசுந்தரம் கம்மிக் கரகரத்த குரலில், "வா, தேவகி! உன்னைத்தான் இப்போது நினைத்துக் கொண்டிருந்தேன். உன் வீட்டுக்கு வரலாமா என்றும் எண்ணினேன். அதற்குள் நீயே இங்கே வந்து விட்டாய்!" என்றான்.

தேவகியின் கூம்பிய மனம் இதைக் கேட்டுச் சிறிதே மலர்ச்சியுற்றது. ஆவல் பொங்க அவனைப் பார்த்து அழகொழுகப் புன்னகை பூத்தாள் அவள்.

வெட்க உணர்ச்சியாலும் வேறு ஏதோ ஒரு இறக்கக் கனத்தாலும் தொய்ந்து கவிழ்ந்திருந்த தலையை நிமிர்த்த முடியாமலே தணிந்த குரலில் மீண்டும் சொன்னான் மோகன்: "ஆமாம், தேவகி! உன் வீட்டுக்கு வரவேண்டுமென்று ஒவ்வொரு கணமும் நினைக்கிறேன். ஆனால், அங்கு வர எனக்குப் பயமாக இருக்கிறது. நீ ஒரு கௌரவமான பெரிய குடும்பத்துப் பெண். கேவலமான பழக்க வழக்கங்களைக் கைக் கொண்டு விட்ட என் போன்றவர்கள் உன் வீட்டு வாசலை மிதிக்கவே அருகதையற்றவர்கள். அப்படி நான் வருவதை நீ அநுமதித்தாலும் உன் தந்தை ஒருபோதும் விரும்ப மாட்டார். இதையெல்லாம் எண்ணிப் பயந்துதான் உன் வீட்டுப் பக்கமே தலை காட்டவில்லை!......மேலும், என்மேல் உனக்கு அளவு கடந்த கோபம் இருக்கும். அதனால்தான் சில நாட்களாக என்னைப் பார்க்கக்கூட வருவதில்லை. அது நியாயம் தான். உன்போன்றவர்களால் சகித்துக் கொள்ள முடியாத தவறுகள் நான் செய்தபின் வருந்துகிறேன். மீண்டும் அதே தவறுகளைச் செய்ய ஓடுகிறேன். பிறகு வெட்கப்படுகிறேன். கவலை கொள்கிறேன். இவ்வளவு மோசமான ஒருவனை உன் போன்றவர்களால் மன்னிக்க முடியுமா? முடியாது! அதனால்தான் நீ என்னைப் பார்க்க விரும்பவில்லை...சே, நான் எவ்வளவு மோசமான மனிதனாக மாறி விட்டேன்! அட தெய்வமே!"-நெற்றியில் ஓங்கி அறைந்து கொண்ட மோகன் இரு கைகளாலும் தன் தலையை அழுத்திப் பற்றி ஒரு குலுக்குக் குலுக்கினான். சட்டென்று ஏதோ நினைத்துக் கொண்டவன் போல் அவளை நேருக்கு நேர் நிமிர்ந்து நோக்கினான். கண்கள் இலேசாகக் கலங்கின. உதடுகள் நெளிந்து துடித்தன. பரிதாபமாக முகத்தை வைத்துக் கொண்டு கெஞ்சும் குரலில் கூறினான்: "ஆமாம்; தேவகி! இனியும் என்னால் அதை மறைத்து வைக்க முடியாது. என் உள்ளத்தைக் கசக்கிப் பிழியும் அந்த வேதனையை உன்னிடம் சொல்லத்தான் போகிறேன். ஏனென்றால் உன்னைத் தவிர வேறு யாரிடமும் என் உள்ளக் குமுறலை வெளியிட

முடியாது. அதைக் கேட்டு அநுதாபப் படவும், ஆறுதல் கூறவும், உதவி செய்ய வும் உன்னைத் தவிர இப்போது எனக்கு வேறு யாருமே கிடையாது.''

அவன் என்ன சொல்லப் போகிறான் என்பதை அந்தக் கணமே 'புரிந்து' கொண்ட தேவகி உணர்ச்சி வயப்பட்டு நடுநடுங்கினாள். அப்படி நடுங்கிக் கொண்டே நெளிந்து வளைந்த அவள் சரேலெனப் பாய்ந்தோடி மோகனின் முன்னால் முழந்தாளிட்டு அமர்ந்து அவன் மடியில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மி அழுதேவிட்டாள்.

ஆனால் மோகனசுந்தரமோ இதனால் எவ்விதப் பரபரப்பும் அடையாமல் அமைதியாக ஒரு சோகப் புன்முறுவல் பூத்தான். பிறகு தன் மடியில் புதைந்திருந்த தேவகியின் முகத்தை நிமிர்த்தி மூடிக் கிடந்த அவளது காயாம்பூக் கண்களை உற்று நோக்கினான். அவன் முகம் மலர்ந்தது. ''தேவகி, நீ மிகவும் நல்லவள்! உத்தமமான பாரிஜாத மலர் போன்றவள்! உன்னால்தான் என் உள்ளச் சுமையை இறக்க முடியும். ஆமாம். உன்னால்தான் என் உயிருக்குயிரான இதயராணி கோமதியின் இருப்பிடத்தைக் கண்டுபிடித்து அவளை என்னிடம் கொண்டு வந்து ஒப்படைக்க முடியும். இந்தப் பேருதவியை எனக்கு நீ செய்வாயா, தேவகி?'' துக்கம் தொண்டையை இறுக்க, நம்பிக்கை ஒளி கண்களில் பளிச்சிட இப்படிச் சொல்லி நிறுத்தினான் மோகனசுந்தரம்.

அடுத்தகணம், துவண்ட கொடியாய்ச் சரிந்து கிடந்த தேவகி தூக்கியெறியப் பட்டவள் போல் துடித்துப் பதறி எழுந்தாள். எழுந்த வேகத்தில் அவளது கையில் பற்றியிருந்த அந்தக் கல்யாணப் பத்திரிகை மோகனசுந்தரத்தின் மார்பில் போய் விழுந்தது.

''என்ன, தேவகி! ஏன் இப்படி விழித்துப் பார்க்கிறாய்?'' என்று குழறிக் கேட்டுக் கொண்டே தடுமாறி எழுந்த மோகனசுந்தரம், தன் மார்பின்மீதிருந்து கீழே நழுவி விழுந்த அந்தக் கல்யாணப் பத்திரிகையைப்பார்த்து, ''இது என்ன?'' என்று கேட்டவாறு அதைக் குனிந்து எடுத்துப் பிரித்தான்.

''சிரஞ்சீவி விவேகானந்தனுக்கும், சௌபாக்கியவதி கோமதிக்கும்...''

படீரென்ற ஒரு பேரொலி. பயங்கரப் பிளிறலிட்ட போகன் கோபாவேசமாகச் சாய்வு நாற்காலியைத் தூக்கி மதில் சுவரின்மேல் வீசியெறிந்துவிட்டு மதுவுண்ட பேயைப்போல் ''துரோகி! துரோகி!'' என்று அலறிக் கொண்டே எங்கோ தலை தெறிக்கப் பாய்ந்தோடினான்.

அத்தியாயம் முப்பத்தெட்டு

'**வா**ழ்க்கை என்பது என்ன? அது முள்ளின் முனையில் துளித்து நிற்கும் கடுகளவுத் தேனை நாவினால் சுரண்டிச் சுவைக்க எடுத்துக் கொள்ளும் ஒரு நித்திய முயற்சிதானா?'

பட்டுக் கூறைச் சேலையும், பன்னீர்ச் செம்பும், பளபளக்கும் வைர நகைகளும், புஷ்பக் குவியலுமாக நிறைந்திருந்த பெரிய வெள்ளித்தட்டின் எதிரே ஒற்றைக் காலை மடக்கித் தலைகுனிந்து உட்கார்ந்திருந்த கோமதியின் உள்ளம் இப்படியொரு கேள்வியைக் கேட்டுக் கொண்டு அதற்கு விடை காண முயல்வதுபோல் நடுங்கித் துடித்தது.

''என்ன அக்கா! எவ்வளவு நேரம் தான் வாயை இறுக்கிக்கொண்டு உட்கார்ந்திருப்பீர்கள்? என்னிடம் பேசக் கூடவா உங்களுக்கு வெட்கமாயிருக்கிறது?'' என்று குறும்புக்குரலில் கேட்டுக் கொண்டே கோமதியின் நீண்ட கூந்தலுக்கு வாசனைத் தைலம் பூசி, தந்தச் சீப்பினால் இதமாக வாரினாள் கமலி. மணப் பெண்ணைச் சிங்காரிக்கும் வேலையை அவளிடம் ஒப்படைத்திருந்தாள் சுந்தரியம்மாள்.

கோமதியின் செவிகளில் இந்தக் கேலிப் பேச்சு விழுந்ததோ இல்லையோ; அவள் எவ்வித அசைவுமின்றி மௌனமாகவே உட்கார்ந்திருந்தாள்

''நான் ஒரு பைத்தியம்! ஏதேதோ உளறிக் கொண்டிருக்கிறேன். பேச வேண்டியவரிடம் மணிக்கணக்கில் பேசிக் கொண்டிருக்க இப்போது முதலே விஷயங்களைச் சேகரிக்கும் உங்களை வீணாகத் தொந்தரவு செய்கிறேன், இல்லையா அக்கா?'' என்று கேட்டுக் கலகலவெனச் சிரித்தாள் கமலி.

கோமதி ஒப்புக்கு நகைத்து அவளைத் திருப்திப்படுத்த முயன்றாள். கூந்தலில் சிக்கு விழுந்து வலி எடுத்தாற்போல் 'ஹா' வென்று பாசாங்கு செய்தாள்.

''கல்யாணம் என்றாலே எல்லாப் பெண்களுக்கும் சொல்லி வைத்தாற்போல் ஒரேமாதிரி வெட்கம் வந்து விடுகிறதே, அது ஏன் அக்கா?'' என்று சிரிக்காமல் கேட்ட கமலி சற்று நேரங் கழித்துக் களீரென்று சிரித்தாள்.

"என்ன இங்கே, ஒரே சிரிப்பும் கும்மாளமுமாய் இருக்கிறது? இன்னும் டிரஸ் பண்ணி ஆகவில்லையா?" என்று கேட்டுக் கொண்டே உள்ளே வந்த சுந்தரியம்மாள், கோமதியின் முகத்தை ஒரு கணம் உற்றுப் பார்த்து விட்டு நிமிர்ந்து, "கமலி நேரமாகிறதே! சீக்கிரம் ஆகட்டும்!" என்றபடி அந்த அறையின் பின்பக்கக் கதவைத் திறந்து கொண்டு ஏதோ அவசரக் காரியமாகப் புழக்கடைக்குச் சென்ருள்.

பங்களா வாசலில் போடப்பெற்றிருந்த பிரும்மாண்டமான பந்தலில் ஏராளமான ஜனங்கள் வந்து குழுமியிருக்கிருர்கள் என்பதற்கு அறிகுறியாகப் பல்வேறு வித பேச்சொலிகள் கேட்டன. நாதஸ்வரத்தின் இன்னிசை அவற்றை மேவிக் கொண்டு காதைத் துளைத்தது.

ஏதோ நினைவு வரப்பெற்றவள் போல் மெல்லத் தலைநிமிர்ந்த கோமதி ஆவல் நிறைந்த குரலில், "கமலி! அவர் வந்து விட்டாரா?" என்று கேட்டாள்.

"அவரா? சரிதான் போங்கள்! அவர் விடியற் காலையிலேயே எழுந்து, டீக்காக டிரஸ் பண்ணிக் கொண்டு, தாம் உட்காரப்போகும் மணவறையை ஜன்னல் வழியே எட்டி எட்டிப் பார்த்துக்கொண்டிருக்கிருர்!" என்ருள் கமலி கேலியாக.

"போ, கமலி! நான் ஒன்று கேட்டால் நீ ஒன்றைச் சொல்கிருயே?" என்று செல்லமாகக் கடிந்துகொண்ட கோமதி மீண்டும் மீண்டும் தொடர்ந்து, "நான் கேட்பது என் அண்ணு சாரங்கனை! அவர் வந்து விட்டாரா?" என்ருள்.

ஏக்கப் பெருமூச்சுவிட்ட கமலி சலித்த குரலில் "அவரா? அவரைப் பற்றி உங்களுக்குத் தெரியாதா? எல்லாரும் ஒரு வழியில் போனுல் அவர் வேறு ஒரு வழியில் போகிறவராயிற்றே! இன்றைய தினம் பார்த்து அவருக்கு ஆபீஸில் சேர்ந்தாற்போல் இரண்டு 'ஷிப்டுகள்' போட்டு விட்டார்களாம். அதனுல் சாயந்திரம் சிற்றுண்டி விருந்துக்குத்தான் அவர் வருவாராம்" என்ருள்.

முகத்தைத் துடைப்பது போல் மெல்லக் கண்களைத் துடைத்துக் கொண்டாள் கோமதி. தனது மாங்கல்யதாரணச் சடங்கைத் தன் சார்பிலிருக்கும் ஒரே மனிதனை சாரங்கன் காண வராமலிருப்பது அவளுக்கு மிகுந்த வேதனையை அளித்தது. அந்த அறையின் ஒரு மூலையில் மலர் மாலையிட்டுச் சாற்றி வைக்கப் பெற்றிருந்த தன் தாயின் படத்தைப் பார்த்துக் கண்ணீர் சொரிந்தாள் அவள்.

மணி எட்டு இருக்கும்.

மணப்பெண்ணின் அலங்காரம் ஒரு வாறு முடிந்தது. கோமதியின் எழில் வடிவத்தை நிலைக் கண்ணுடியில் பார்த்த கமலியே ஒரு கணம் மயங்கிப் பிரமித்து விட்டாள். உடனே சாந்துக் கிண்ணத்தில் சுண்டுவிரலை விட்டு, கோமதியின் இடக் கன்னத்திலே திருஷ்டிப் பொட்டு வைக்க வந்தவள், கையை வெடுக்கென இழுத்துக் கொண்டு ஓரடி பின் நகர்ந்து நின்ருள். காரணம், அந்தப் பட்டுக் கன்னத்தில் ஏற்கனவே விதியின் கரம் திராவகத்தால் அழியாத திருஷ்டிப் பொட்டு இட்டு விட்டிருந்தது!

"அக்கா! இதோ ஐந்து நிமிஷத்தில் நான் டிரஸ் பண்ணிக் கொண்டு வந்து விடுகிறேன். அதற்குள் மணவறைக்குப் போய்விடப் போகிறீர்கள். ஏனென்ருல் நான்தான் மணப்பெண் தோழி!" என்று குறும்புச் சிரிப்புடன் கூறிக் கொண்டே மாடியறைக்குத் தாவி ஓடினுள் கமலி.

இப்போது கோமதி மட்டுமே அந்த அறையில் தனியாக நின்று கொண்டிருந்தாள். இதுவரையில் தன் மணக் கோலத்தில் எவ்வித சிரத்தையும் காட்டாமல் விரக்தியுற்ற மனநிலையில் வாடிக் கிடந்த அவள் இப்போதுதான் மெள்ளத் தலைநிமிர்ந்து நிலைக் கண்ணுடியில் தன் வடிவத்தைப் பார்த்தாள். அவளது நெஞ்சு ஒரு கணம் விம்மித் தணிந்தது.

"ஏன்? எதற்காக நான் வருந்த வேண்டும்? அவர் என்னை நேசிக்கவில்லை, கடமைக்காக என் கழுத்தில் தாலி கட்டப் போகிருர் என்பதற்காகவா இப்படி வருந்திக் குமைகிறேன்? இது பைத்தியக்காரத்தனம்! எனது இலட்சியம் என்ன? கவலை இன்றி இன்பமாக, கண்ணியமாக வாழ வேண்டும்-நன்ருக,



தபால்காரர்: நாளைக்குத் தபாலாபீஸ் விடுமுறைன்னு என்னைவிட நீங்க ரொம்ப சந்தோஷப்படறீங்களே, ஏன் ஸார்!

நபர்: நான் எழுத்தாளனுச்சே! நிறையப் பத்திரிகைகளுக்குக் கதைகளை அனுப்பி யிருக்கேனே?

சுகமாக வாழ வேண்டும்-அவ்வளவு தானே? அது நிறைவேறிவிட்டது! இனி நான் எதற்காக வருந்த வேண்டும்? இந்த அளவு என் இலட்சியத்தில் வெற்றி கண்ட எனக்கு மீதமுள்ள அந்தச் சிறு குறையைத்தானா நிறைவாக்கிக்கொள்ள முடியாது? முடியும்! முயன்று முயன்று அதையும் முழுமையாக்கி முடிப்பேன்!''

எழில் சிந்தச் சிரித்தாள் கோமதி. வெற்றிப் பெருமிதத்துடன் தனது வடிவ பிம்பத்தைப் பார்த்துச் சிரித்தாள்.

''கோமதி!''

ஏழெட்டு நாட்களாக இந்த அறைப் பக்கமே தலை காட்டாமல் இருந்த விவேகானந்தன்தான் முகூர்த்தத்துக்கு இன்னும் ஐந்தே நிமிஷமிருக்கும் இந்த வேளையில் தன்னை இரகசியமாகப் பார்த்துப் போக வந்திருக்கிறானோ என்ற குதூகல எண்ணத்துடன் திரும்பிய கோமதி, அந்த அறையின் பின்பக்க வாசற்படி மேல் நின்ற ஒரு பயங்கர உருவத்தைப் பார்த்துப் பேரதிர்ச்சியடைந்து பின்னால் நகர்ந்தாள்.

''துரோகி! சதிகாரி! என்னை ஏமாற்றி விட்டு இன்னொருவனையா மணந்து கொள்ளப் போகிறாய்? முடியாது! அது முடியவே முடியாது!'' என்று வெறி கொண்ட சிம்மம் உறுமுவது போல் உறுமிக் கொண்டே உள்ளே பாய்ந்து வந்தான் மோகனசுந்தரம்.

அளவுக்கு மீறிய பயத்தால் குரல் திறந்து அலறவும் சக்தியற்றுப் போன கோமதி, தன்னை நோக்கி வரும் மோகனனையே விழி புரட்டாமல் பார்த்துக் கொண்டு நின்றாள்.

கனல் துண்டங்களைப் போன்ற இரு கண்கள் இதோ அவளை நோக்கி அனல் பரப்பி வருகின்றன! நறநறவென ஒலியெழுப்பி அரைபடும் கோரைப் பற்கள் இதோ பளிச்சிட்டு அவளை நெருங்குகின்றன. நரகப் பேயின் இரும்பு முட்கள் போன்ற பத்து விரல்கள் இதோ அவளது பசுங்குருத்துக் கழுத்தைச் சுற்றி நெளிந்து வளைந்து நீள்கின்றன!

''ஹா!...'' கோமதியின் பொன்னுடல் ஸ்மரணையற்றுக் கீழே சாய்ந்தது.

கல்யாணத்துக்குத்தான் போக முடியவில்லை; மாலை விருந்துக்காவது போய்த் தன் அன்புத் தங்கை கோமதியை மணக் கோலத்தோடு கண் குளிரப் பார்த்துவிட வேண்டும் என்ற ஆவலால் உந்தப் பட்டவனாய் 'லினோ டைப்' இயந்திரத்தின் 'கீ-போர்டில்' வெகு வேகமாகத் தனது விரல்களைச் சுழற்றிக் கொண்டிருந்தான் சாரங்கன்.

இன்னும் ஒரே ஒரு செய்தித் துணுக்குத்தான் பாக்கி. ஐந்து நிமிஷங்களில் அதைக் 'கம்போஸ்' பண்ணி முடித்து விட்டுக் கிளம்பி விடலாம்.

உலையில் ஈயக் குழம்பு தீர்ந்துவிட்டது. காலடியில் கிடந்த ஓர் ஈயத் துண்டை எடுத்து உலையின் மூடியைத் திறந்து உள்ளே போட்டுக் கொண்டே, அந்தச் செய்தித் துணுக்கைப் படித்தான்:

''இன்று காலை மணக்கோலத்திலிருந்த பிரபல நடிகை கோமதியை, புகழ்பெற்ற புல்லாங்குழல் வித்வான் மோகனசுந்தரம் கழுத்தை நெரித்து...''

உருகிக் கொதித்துக் கொண்டிருந்த ஈய உலையில் வழுக்கித் தோய்ந்த தன் இடக் கையை வெடுக்கென்று இழுத்த சாரங்கன் வீரிட்டு அலறிக் கொண்டே நாற்காலியோடு பின்னால் சாய்ந்து பிரக்ஞை இழந்தான்.

கருமுகில்கள் வான் வெளியில் திரண்டு குவிகின்றன, எங்கும் ஒருவித மந்தாரப் புழுக்கம் செறிகிறது. மழை வருவதற்கறிகுறியாக மண்ணின் கமறல் மணம் வீசுகிறது.

எங்கோ ஓர் இடியின் குமுறல் ஒலி.

அதோ, ஆசிரமம் போன்ற ஓர் அழகிய சிறிய குடில் தெரிகிறது. அதன் எதிரில் மல்லிகைச் செடியொன்று பம்மலாக வளர்ந்து நிற்கிறது. மலர்ந்து வாடிய பூக்களையெல்லாம் மண்ணில் உதிர்த்து விட்டு வைதவ்யக் கோலமாய் நிற்கிறது அந்தச் செடி. அதன் அருகில் வன தேவதை போல் ஒரு பெண் நின்று கொண்டிருக்கிறாள்.

யார் அந்தப் பெண்? தேவகியா? ஆமாம்; அவள்தான்!

வெண்தரளப் பரல்களாக மண்ணில் உதிர்ந்து கிடக்கும் பூக்களை மென்மையாக எடுத்து மல்லிகைக் கொடியின் வதங்கிய காம்புகளில் ஒவ்வொன்றாகப் பொருத்த முயல்கிறாள். பொருத்திய மலர்கள் பொருந்தாமல் புல்தரையில் உதிர்கின்றன. அவள் கண்கள் நீரை வடிக்கின்றன. தன் அதரங்களைப் பிரித்துக் கம்மிய குரலில் சொல்கிறாள்:

''இதயத்தில் அறிவை இணைக்காத மனிதரைப் போல் காம்பறுந்து கழன்றுதிரும் கான்முல்லையே! சொர்க்கத்தின் நிழலில் களித்திருக்க உனக்கு விருப்பமில்லையா? விருப்பமிருப்பின், கழன்று வந்த காம்பினோடு போய் இணைந்து கொள்! இல்லையேல் இருளைத் தவிர வேறு எதையும் நீ காணமாட்டாய்!''

விம்மியழுகிறாள் தேவகி. அவளுடன் வானமும் சேர்ந்து அழுகிறது. **(முற்றும்)**

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited, at the Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor, T. Sadasivam.

gistered as a Newspaper in Ceylon